
# குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர் : சா. குருசாமி



ஊசி 2 குத்து 1

★ ஜூலை 1964

இதனுள் :

கொள்கை கரைந்தது!

ஊழலும் லஞ்சமும்

நேருவுடன் சிறிது நேரம்

உலகப்பெரியார் : அக்பர் - II

சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

பிகுவும் பிணக்கும் போரும்

மதச் சார்பற்ற ஆட்சியா ?

புரோகிதர் புரட்டு

கவிதைப் பகுதி

— இன்னும்

50 காசு

டெலிஃபோன் நம்பர் : 51451
நிறுவனம் : 1930
தந்தி : ORIDOL

தரத்தில் சிறந்த
எங்கள் பருப்பு வகைகள்

| | | |
|---|---|---|
| பட்டினத்தார் உளுத்தம் பருப்பு | எப்போதும் வாங்கி உபயோகியுங்கள்<br>—<br>எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். | ஷெல் துவரம் பருப்பு |

தயாரிப்பாளர்கள் :
P. புன்னவன நாடார் (FIRM)
235, திருவொற்றியூர் ஹைரோடு,
சென்னை-21.

# MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

Manufacturers of:

**Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.**

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

# குத்தூசி

[ஆசிரியர்: சா. குருசாமி]

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ்: விலை 50 காசு;

ஆண்டுக் கட்டணம்:

உள் நாடு: ரூ. 5 — கொழும்பு: ரூ. 6

வெளி நாடு: ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.

விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

விளம்பர விகிதம்:

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய்; அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய்; இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்
(அரைப் பக்கம்: 25 ரூபாய்)

குறிப்பு:- *நீடித்த* விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

---

குறிப்பு:—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை; முன் அநுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

## தி மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன்; 82026) சென்னை-34

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

*எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—*

| | | |
|---|---|---|
| ஒரு ஆண்டும் அதற்கு மேலும் ... | 4½% | ஒரு ஆண்டிற்கு |
| இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும் ... | 4¾% | ,, |
| மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும் ... | 5% | ,, |
| நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும் ... | 5¼% | ,, |
| ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை | 5½% | ,, |

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

டி. வி. நரசிம்மன் M.A., C.A., I.I.B

# அறிவுப் பாதை

சுயமரியாதை (அறிவியல்) இயக்க வார ஏடு


ஆசிரியர்: சா. குருசாமி

*அரசியல் கட்சி சார்பற்றது மே 1-ந் தேதி முதல் வெளி வருகிறது!*

*ஆண்டுக் கட்டணம் ரூ 6/- தனி இதழ், காசு 13.*

*விற்பனையாளருக்கு 25% கழிவு*

நிர்வாகி: "அறிவுப்பாதை" 50. சி. அய். டி. காலனி ஷெனாய் நகர் சென்னை-30.


நான் இறந்தபின்
எந்த விதமான மதச் சடங்குகளும்
செய்ய வேண்டாம்
அவைகளில் எனக்கு
நம்பிக்கை இல்லை!
அல்லாஹ்.. இல்லில்லா... ஹ்......
புத்தாச்சரணம் கிச்சாமி
கர்த்தராகிய இயேசுவே...
பிராணயாம்... பகவன்கே

"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

குத்தூசி

ஊசி 2 ஜூலை 1964 குத்து 10

# கொள்கை கரைந்தது!

தலைசிறந்த பகுத்தறிவு வாதி—உலகப் பெருந்தலைவர்களில் ஒருவர்-இந்திய முதலமைச்சர் ஜவகர்லால் நேருவின் உடலைச் சுட்டுச் சாம்பலாக்கி, அந்தச் சாம்பலை நீரிலும் கரைத்து விட்டனர். அத்துடன் அவரது பகுத்தறிவுக் கொள்கையையும் கரைத்து விட்டனர்!

எலும்புத் துண்டுகளையும் சாம்பலையும் வணங்கி ஊர்வலமாக எடுத்துச் செல்வதும், அதற்கு வழிபாட்டுப் பாடல் பாடுவதும் எந்த அளவுக்குச் சென்றதெனில், கோவைப் பகுதியில் போலிச் சாம்பலை வைத்து வணங்கும் அளவுக்கு!

இந்நாட்டில் மனிதனின் தொண்டு அல்லது கொள்கைக்குள்ள மதிப்பைக் காட்டிலும் அம் மனிதனைக் கடவுளாக்கி, அவதாரமாக்கி, மகாத்மாவாக்கி, ரிஷி ஆக்கி, சிலைஆக்கி, சமாதி ஆக்கி, படம் ஆக்கி-மாலை போட்டுப் புகைகாட்டி, விழுந்து கும்பிடுவதில்தான் மக்களின் உணர்ச்சி தீவிரமாகச் செல்கிறது.

இந்தக் கிறுக்கு இந்து மதத்தில் மட்டுமல்ல; புத்தரின் பல்! நபியின் முடி!—என்றெல்லாம் கண்மூடித்தனமான போக்கில் போய்க் கொண்டிருக்கிறது. இதை முன்னிட்டுக் கலவரங்களும் படுகொலைகளும்கூட நடந்திருக்கின்றன.

"வீரவணக்கம் (Hero Worship) என்றால் மூடபக்தி என்பது பொருளல்ல. ஷேக்ஸ்பியரின் சிலைக்கு மாலை போட்டு வணங்குவ

தில்லை; லெனின் படத்துக்கு சாம்பிராணிப்புகை காட்டுவதில்லை; ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேலுக்குக் கோவில் கட்டவில்லை. என்றாலும் இவர்களை இவ்வுலகம் மதிக்காமலிருப்பதில்லை. நாளுக்கு நாள் இவர்களது புகழ் ஓங்கி வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்நாட்டில் சாணியே கடவுளாகும்போது, தர்ப்பைப் புல்லே ஆசனம் ஆகும்போது, மனிதனின் சாம்பலையும், சிலையையும், படத்தையும் வணக்கத்துக் குரியனவாக ஆக்குவதில் வியப்பில்லையே!

மாட்டையும், பறவையையும், காகிதத்தையும், விளக்கையும்கூட விழுந்து கும்பிடுகின்ற நாலாந்தர அறிவு கொண்ட மக்கள் இந்நாட்டில் மலிந்து கிடக்கின்றனர்.

சூரிய-சந்திரன் மறைவை (கிரகணத்தை) மதத்துடன் கலந்துள்ள மடமையைக் கண்டித்து எழுதியுள்ள (உலக வரலாறு: பக்கம் 34) அறிவியல் வாதி நேரு மறைந்த ஒரே மாதத்தில் சந்திர கிரகணத்துக்காக உயர் நீதி மன்றமும் பள்ளிகளும் சில மணி நேரம் கழித்துத் துவங்கியிருக்கின்றனவே! இந்நாட்டு மக்களை எப்படித் திருத்த முடியுமோ, தெரியவில்லையே!

நாட்டில் அணைகள் பல கட்டலாம்! தொழிற்சாலைகள் எழுப்பலாம்! மருத்துவ நிலையங்களும் பள்ளிகளும் பல துவக்கலாம்! ஆனால் மடமைப் பிணி போக்கும் பணிக்கு ஆளில்லையே!

பல்லையோ, மயிரையோ, சாம்பலையோ, சாணியையோ—வணங்கிக் கொண்டிருக்கட்டுமே! இதனால் யாருக்கு, என்ன கேடு—என்று சிலர் கேட்கலாம்.

இதனால் மதவெறி உணர்ச்சி வளர்கிறதே யொழிய மனித அன்பு உணர்ச்சி வளர்வதில்லை என்பது ஒன்று. மனித ஒற்றுமைக்கு இவைகள் முட்டுக் கட்டையாக இருந்து வருவது மற்றொன்று. இவைகளால் மக்களின் உழைப்பும், பணமும், பொருளும் பாழாவது மூன்றாவது.

ஒப்பிலியப்பன் கோவிலில் ஒரு கோடி அர்ச்சனை! மதுரைக் கோவில் கோபுரத்துக்கு குடமுழுக்கு! நாகூரில் கந்தூரி விழா! வேளாங் கண்ணியில் கிருஸ்துவப் பண்டிகை! சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனம்! ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி!—இப்படியாக ஒன்று போக ஒன்று நடந்து கொண்டேயிருந்தால் எவ்வளவு நேரக்கேடு! எவ்வளவு பண விரயம்! இத்தனை லட்சம் மக்களின் உழைப்பையும் பணத்தையும் கொண்டு கங்கையைக் காவிரியுடன் இணைத்து விடலாமே! கோதாவரியைப் பாலாற்றுடன் சேர்த்துவிடலாமே!

நேருவின் விருப்பத்துக்கு (Will) நேர் முரணாக அவரது சவத்தைச் சூழ்ந்து கொண்டு மதவெறியர்கள் கூச்சலிட்டதும், வானொலியில் வழி

பாட்டுப்பாடல் பாடியதும், சாம்பல் குடங்களை வழிபட்டு வணங்கியதும் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

தலைவர் அன்பு என்பது மடமை வளர்ச்சியாகிவிட்டது, இந்நாட்டில். தலைவர்களின் படங்களை ரதத்தில் வைத்து மாலையிட்டு இழுத்துச் செல்லும் அளவுக்கு கண்மூடித்தனமான பக்தி (மடமை) துளிர்விட்டுச் செழித்துக் கொண்டிருக்கிறது, "பகுத்தறிவு வாதிகள்" என்பவர்களிடையிலுங்கூட.

"அவன் செய்கிறானே, இவன் செய்கிறானே," என்று கூறிக் கொண்டு மக்களிடையே மடமைப் போட்டி நடந்து கொண்டிருக்கிறது!

நேரு 'கடவுள்' என்றோ, "தலைவிதி" என்றோ-பேச்சிலும் எழுத்திலும் கூறாதவர் கிரகணம், சோதிடம், மந்திரம், பண்டிகை—முதலியவற்றைப் பலமுறை வன்மையாகக் கண்டித்திருப்பவர். கோயிலுக்குச் செல்லாதவர். (காந்தியார்கூட கோயிலுக்குச் சென்றதில்லை) பூணூல் அணியாதவர். நெற்றிக் கோடு இழுக்காதவர். ஒரே சொல்லில் கூறவேண்டுமானால் பச்சைப் பகுத்தறிவு வாதி.

இத்தகைய உலகப் பெரியார் மறைவு பொதுவாக உலகத்துக்கே பேரிடி என்றாலும், சிறப்பாக அறிவியல் (பகுத்தறிவு) கொள்கைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள உலகப் பெருந்தலைவர்களில்—அன்றைய கமால் பாட்சாவைப்போல்-தம் நாத்திகக் கருத்தை, அறிவியல் கொள்கையை-துணிச்சலாக, வெளிப்படையாகக் கூறக்கூடிய 'நேரு'க்கள் கிடைப்பது எளிதல்ல. அவர் இந்நாட்டு சர்வாதிகாரியாக இருந்திருப்பரேயானால் ஒரே ஆண்டில் இந்நாட்டின் சமுதாயக் கேடுகளை, மூட நம்பிக்கைகளை, புரோகிதப் புரட்டுகளை, சாதிக் கொடுமைகளை, மதவெறிப் பண்டிகைகளை—ஒரே உத்தரவில், ஒழித்துக் கட்டியிருப்பார். அந்த நல்வாய்ப்புக் கிடைக்க வில்லையே என்பதை எண்ணும் போதெல்லாம் கவலை ஏற்படுகிறது. அறிவியல் வீரர் போய் விட்டார்; அழுது பயனில்லை.

இனி என்ன? அவர் இடத்துக்கு வந்துள்ள திரு. லால்பகதூர் சாஸ்திரி யவர்கள் அறிவியல் துறையில் எப்படியிருப்பார், எப்படி, நடப்பார் என்று இப்போது கூறமுடியாது. பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும்போது, "கடவுள் சாட்சியாக" என்று கூறாதபடி "உண்மையாக, உறுதி கூறுகிறேன்," என்று கூறியுள்ளார். பொருளற்ற ஒரு சொல்லைக் கூறி உலகை ஏமாற்றிவரும் மக்களைப் போலில்லாமல், பொருள் உள்ள, ("உண்மையாக") ஒரு சொல்லைக் கூறிப் பதவிப் பிரமாணம் ஏற்றிருப்பது மகிழ்ச்சிக் குரியது. இந்தச் சிறு செயல்கூட

ஆத்திகர் கூட்டத்துக்கும் மதவெறிக் கும்பலுக்கும் நெஞ்சுவலியை உண்டாக்கலாம்!

என்றாலும் உலகம் மத எதிர்ப்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

பேரிழப்பால் வடிகின்ற நம் கண்ணீரைத் துடைத்தபடியே புதிய இந்திய முதலமைச்சருக்கு நல் வரவேற்புக் கூறுகிறோம்.

சமுதாயத் துறையில், நேருவினால் செய்யத் தவறிய சாதி-மத-ஒழிப்பு சாதனையை நம் புதிய முதலமைச்சர் விரைவில் செய்து முடிப்பாரென எதிர்பார்க்கிறோம். இம் முயற்சிக்குக் கோடிக் கணக்கான பகுத்தறிவு வாதிகளின் ஆதரவு உண்டு. தயங்க வேண்டாம்! அஞ்ச வேண்டாம்!

---

# ஊழல், லஞ்சம், ஒழுக்கக் கேடு

இந்நாட்டுக் கடவுள்களாலும், வெளிநாட்டு இறக்குமதிக் கடவுள்களாலும், உள்நாட்டு மதக் கோட்பாடுகளாலும், வெளிநாட்டு இறக்குமதி மதக் கோட்பாடுகளாலும் சாதிக்க முடியாத ஓர் அழிவு வேலையை இங்கே அரசாங்கம் சாதித்தே ஆகவேண்டும்!

அது என்ன? கொசுவா? ஈயா? நச்சுக் கிருமியா?

அல்ல; இவைகளை எந்தக் கடவுளாலும் உலகிலிருந்து ஒழிக்க முடியவில்லை. "நீங்களாகப் பாடுபட்டு இவற்றை ஒழித்தால்தான்; எங்களால் முடியவே முடியாது. முடியும் என்றால் இவற்றை உண்டாக்காமலே இருந்திருப்போமே!" என்று அகில உலகக் கடவுள்களே ஒப்புக் கொண்டு விட்டதென்பது பழங்கால உண்மை!

நோய்களிலும், சிசு மரணத்திலும், தற்குறித் தன்மையிலும், சுகாதாரக் குறைவிலும் பாரத மாதா எப்படி உலகில் முதலிடம் வகித்து வருகிறாளோ, அதேபோல்,

லஞ்சம், ஊழல், ஒழுக்கக் கேடு–முதலியவற்றிலும் வேறு எந்த நாட்டையும் மேலே போகவிடாமல் "நோபல் பரிசு" பெறக்கூடிய தகுதி பெற்றிருக்கிறாள்! ("வந்தே மாதரம்!)

பதினாயிரம் பாரத புத்திரர்களில் ஒருவர் இருவராவது லஞ்சம் கொடுக்காமலும் லஞ்சம் வாங்காமலும் இருந்தால் அவரை இந்தியராயிருப்பதற்குத் தகுதியற்றவர் என்றே தீர்ப்புக் கூறிவிடலாம்!

ஆட்சித் துறையில் காகிதக் கட்டுகள் (Files) ஆமை வேகத்தில் நகர்வது மட்டுமல்ல; பல சமயங்களில் அட்டைபோல் ஒரே யிடத்தில் ஒட்டி (மக்களின் இரத்தத்தை உறிஞ்சி)க் கொண்டு கிடந்து விடுவதைக் காணலாம். இதுதான் லஞ்சத்துக்கு வித்து!

லஞ்சம் ஒழிய வேண்டுமானால் கொடுப்போர்–வாங்குவோர் இரு சாராரும் கடுமையான தண்டனைக் குள்ளாக்கப் படவேண்டும்!

யார் தண்டிப்பது? கடவுளா? அவரே லஞ்சம் (கேட்டு வாங்கா விடினும்) வலுவில் கொடுக்கப்படுகிறாரே! கடவுளுக்கு வீடு, வாசல், வெளிச்சம், காற்று, உணவு, உடை, வாகனம், நகை அலங்காரம், ஆகிய இத்தனையும் தந்து பக்தர்கள் அவரையும் 'கெட்டவராக்கி' விட்டனர்!

ஆகவே, மனிதர்கள் தாம் லஞ்சக் குற்றவாளிகளை (கொடுப்பவர்களையும் சேர்த்து) தண்டிக்க வேண்டும்.

இனி, நிர்வாக ஊழலும் ஒழுக்கக் கேடும் ஒழிவது எப்படி?

மக்களாட்சி முறையில் எகிப்து–பாகிஸ்தான்–ரஷ்யா–பர்மா போல் சர்வாதிகாரமான கொடுந் தண்டனை விதிக்க முடியுமா? "உணவுப் பண்டங்களைப் பதுக்கி வைத்தால் உடனே சுட்டுக் கொல்லப்படுவர்," என்றது, பாகிஸ்தான் ஆட்சி! உடனே பதுங்கிக் கிடந்த உணவுப் பொருள்கள் மலை மலையாக வெளிவந்தன! அதுபோல் இங்கு செய்ய முடியாது! சட்டம் இயற்றவேண்டும். அதற்கு எதிர்ப்பு; மறுப்பு. பிறகு நீதிமன்றம்! ரிட் மனு முதலியன! குற்றவாளிக்குத் துணையாக எத்தனையோ ஓட்டைகள் இருக்கின்றன, குற்றம் வெளியே தப்பி வந்துவிடுவதற்கு! எனவே, புதிது புதிதாகக் குற்றங்கள் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன.

ரயில்வே 'டிக்கெட்'டில் தேதியை மாற்றிப் பயன் படுத்துகிறார்களாம், பாரத புத்திரர்கள்! இது 1964ன் அதிசயக் கண்டுபிடிப்பு! ரயில்வண்டி டிக்கெட்டுகள் கள்ள மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கப்படுவது மட்டுமல்ல; அவைகளிலும் (உணவுப் பொருளைப் போலவே) கலப்படமும் முளைத்து விட்டது. டிக்கெட் இல்லாப் பிரயாணம் ஒருபுறம்! சகிக்க முடியாத இட நெருக்கடி ஒருபுறம்! ரயில்வே பயணம் என்பது கொசு–ஈ–யைப் போலத் தவிர்க்க முடியாத, இன்றியமையாத, கேடாகிவிட்டது!

பாரத மாதா புத்திரர்களின் ஒழுக்கத்துக்கு உரைகல் வேண்டுமா? ரயில் பெட்டிக்குள் ஒரு மின்சார 'சுவிட்ச்' (Switch) கூட வெளியே பதிக்கப் பட்டிருக்காது. ஒரு 'பல்ப்' கூட இரும்பு வலை மூடி இல்லா

மலிருக்காது! இதெல்லாம் சுதந்திரத்திற்குப் பிறகு நாம் ஆற்றிய சிறந்த சாதனைகள்!.

இதேபோல் ஒவ்வொரு துறையிலும் முன்னேறியிருக்கிறது, பாரத நாடு! பள்ளி முதல் பணிமனை வரையில், கைக்கூலி கொடுக்காமல் எந்தக் காரியமும் எளிதாக, விரைவாக—நடைபெறுவதில்லை.

இரண்டு வயதுக்குட்பட்ட சிசுவைத் தவிர, ஏறத்தாழ எல்லா மக்களும் ஏதோ ஒரு வகையில் (பணமாகவும் பொருளாகவும் இல்லாவிடினும்) லஞ்சம் கொடுப்பதிலோ, வாங்குவதிலோ ஈடுபட்டுக் கொண்டு தானிருக்கின்றனர்! லட்சத்தில் இரண்டொரு விதிவிலக்கு இருக்கலாம்!

இப்படியே ஊழலும், லஞ்சமும், ஒழுக்கக் கேடும் பெருகிக் கொண்டிருக்குமானால், வெளிநாட்டிலிருந்தோ, அல்லது உள்நாட்டிலேயோ ஒரு சர்வாதிகாரியின் கீழ் இந்த ஆட்சி சிக்கியே தீரவேண்டும். நாடு அத்திக்கை நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கிறது!

போனால் போகட்டும் போய்யா, என்று சிலர் பாடலாம். ஆனால் ஆட்சியாளரின் ஜனநாயக சோஷலிசக் குறிக்கோளுக்கு இன்றையப் போக்கு பெரிய ஆபத்தாக இருக்கிறதே! தெரிகிறதா?

---

> "சூரிய-சந்திர கிரகணங்கள் ஆபத்துக்குரிய கோர நிகழ்ச்சி என்று பாமர மக்கள் கருதுகின்றனர். அது ஒரு சாதாரண இயற்கை நிகழ்ச்சி என்பதை உணராதபடி நம் மக்கள் சூரியனையும் சந்திரனையும் காப்பாற்றுவதற்காக தலை முழுகுகின்றனர்; பட்டினி கிடக்கின்றனர்; வீண் ஆரவாரம் செய்கின்றனர். சூரியனுக்கும் சந்திரனுக்கும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி உண்டு. அவைகளுக்காக நாம் கவலைப்படத் தேவையில்லை"
>
> —(பக்கம் 34. "உலக வரலாறு"-நேரு)

உலகப் பெரியார் வரலாறு:

# அக்பர் பெரியார்

## (AKBAR THE GREAT)

## II

[சா. கு.]

"காலமும் சூழ்நிலையும் முற்றிப் பழுத்திருந்தாலொழிய எந்த மனிதனும் செயற்கரிய செயல்களைச் செய்வதில் வெற்றிபெற முடியாது. சான்றோர் என்பவர் இந்தச் சூழ்நிலையைத் துரிதப் படுத்துவார். ஆனாலும் காலத்துக்கேற்றபடித்தான் சான்றோர் உருவாக முடியும். இந்தியாவில் அக்பர் இத்தகையோர் ஆவார்,"

என்கிறார், ஜவகர்லால் நேரு, "உலக வரலாற்றுப் பார்வை" என்ற தமது நூலில், அக்பர் பற்றிய கட்டுரையில்.

(பக்கம்-307.)

"அக்பர் ஒருவகையில் இந்திய தேசீய உணர்ச்சியின் தந்தையாவார்," என்றும் (பக்கம்-306) நேரு கூறுகிறார்.

மதத்துறையில் மட்டுமல்ல, அக்பர் தனிச் சிறப்படைந்தது. ஆட்சி முறையில் 'பெரியார்' என்ற பட்டத்துக்குரிய அரிய பெரிய சாதனைகளைச் செய்தார்.

சமுதாயத் துறையில், தலைவரி, யாத்திரைவரி, கைம்பெண் உடன்கட்டை ஏறுதல்-முதலிய கொடுமைகளை சர்வாதிகார முறையில் ஒழித்துக்கட்டி அறிவியல் ஆட்சி நடத்தியது போலவே, ஆட்சி நிர்வாகத்திலும் அவர் வகுத்த வரிவிதிப்பு முறையை நானூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வந்த பிரிட்டிஷார் பின்பற்றக்கூடிய மாதிரியில் சிறந்ததாக அமைத்தார். அவரது நிதி அமைச்சரான தோடர் மால் ரெவன்யூ (வருமான) துறை முழுவதையுமே மாற்றியமைத்தார்.

அக்பர் நூற்றுக்கு நூறு சர்வாதிகாரியாகவே விளங்கினார். ஒவ்வொரு துறையிலும் முற்போக்கான செயல்களைச் செய்து அழியாப் புகழ் பெற்றார், கையெழுத்துக்கூடப் போடத் தெரியாத அக்பர். படிப்பு இல்லாமலுங் கூட ஒருவர் தலைசிறந்த அறிவாளியாகவும், நிர்வாகியாகவும், மக்கள் தலைவராகவும், ஆட்சித் தலைவராகவும் இருக்க முடியும் என்பதற்கு உலகப் பெரியார் வரலாற்றில் அக்பர் ஒரு தனி எடுத்துக் காட்டாவார்.

### தனிப் பண்புகள்

அக்பருக்குத் திடீரென்று சினம் வரும்; ஆனால் நொடிப் பொழுதில் அடங்கிவிடும். சினம்

வந்தால் எத்தகைய உத்தரவு பிறக்கும் என்று கூறமுடியாது. இராணுவப் பாதுகாப்பு அரண் சுவர்மீது விளக்கேற்றும் ஒரு பணியாள், வேலைநேரத்தில் உறங்கிவிட்டான் என்பதற்காக அவனை மதில் சுவர்மீதிருந்து கீழே தள்ளிவிடுமாறு உத்தரவு பிறப்பித்தாராம். ஆனாலும் பொதுவாக, ஆத்திரம் வரும் போது அடக்கியாள்வதில் சிறந்து விளங்கினார் என்று கூறப்படுகிறது.

அக்பர் செயல் திறன் மிக்கவர்; அவருக்குத் தெரியாத தொழிலே கிடையாதாம். அரண்மனை நிர்வாகம் முதல் நாட்டு நிர்வாகம் வரையில், எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்த கருத்தைச் செலுத்தியவர், அக்பர். உழைப்பதற்குப் பின்வாங்காத மன்னர். மூன்று மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து உறங்க மாட்டார்; களைப்பு என்பதே ஏற்படுவதில்லை.

## உணவுப் பழக்கம்

உணவு உண்பதில் மிக நிதானமாகவே நடந்து கொள்வாராம். சமண மதத் தொடர்பும் அறிவும் ஏற்பட்டது முதல், இறைச்சி உணவு உண்பதை அறவே விட்டுவிட்டாராம்.

உணவு பற்றிய அவரது கூற்றுக்களில் சில:–

"இறைச்சி உண்பவர்கள் ஒருவனை யொருவர் கூடக் கொன்று தின்று விடுவார்கள், அதனால் ஏற்படும் துன்பம் இல்லாதிருக்குமானால்."

"என் உடலில் கூட சிறு பகுதிகளை இறைச்சி உண்பவர்களுக்காக வெட்டித் தருவேன், அப்பகுதிகள் உடனே வளர்ந்து விடக் கூடுமானால்."

"எல்லா மக்களுக்கும் போதுமான உணவு கிடைக்கக் கூடுமானால், மக்கள் இறைச்சி உண்பதையே தடைசெய்து விடுவேன்."

"மீன் பிடிப்போர், ஆடு மாடு வெட்டுவோர்–போன்ற உயிர் நீக்கும் தொழில் தவிர வேறு தொழில் தெரியாதவர்களை யெல்லாம் தனியே ஒதுக்கி வைத்துப் பிறருடன் கலக்காதபடி செய்ய வேண்டும்; மீறினால் அபராதம் விதிக்க வேண்டும்."

"மனிதன் தன்னுடைய வயிற்றை மிருகங்களின் சமாதியாக ஆக்குவது முறையல்ல."

அக்பர் திராட்சை, முலாம் பழம், மாதுளை முதலிய பழங்களை நிறைய உண்பாராம்.

அய்ரோப்பாவில் மதத்துறையில் பூசலும், போரும், இரத்தக் களரியும் நிகழ்ந்து கொண்டிருந்த அதே நேரத்தில் அக்பர் தமது விரிந்த இந்திய நாட்டில் மதச்சண்டையே இல்லாமல், பல மதங்களையும் ஒன்றாகக்கருதி, மதச்சார்பற்ற ஆட்சியைச் சிறப்பாக நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

"ஒவ்வொரு மதத்தாரும் தங்கள் மதந்தான் உண்மையைக் கூறுகிறது; மற்ற மதம் போலி என்று கூறும்போது, மக்கள் எதைத்தான் உண்மை யென்று நம்ப முடியும்?", என்று கேட்டார், அக்பர்.

இக் கேள்வி கத்தோலிக்கருக்குப் பிடிக்கவில்லை.

"நம்பிக்கையைவிடப் பகுத்தறிவுதான் சிறந்தது என்றும், மனிதனின் சிந்தனைக்கு எட்டாததில் நம்பிக்கை வைப்பதில் பயனில்லை யென்றும் கூறுகின்ற

நாத்திகனைப் போலவே அக்பரும் கூறிவந்தார்,"

என்று கதோலிக்கர் அவர் மீது குற்றஞ்சாட்டினர்.

இதைப்பற்றி எழுதிய நேரு, (பக்கம்–311) "நாத்திகன் என்பதற்கு இதுதான் விளக்கம் என்றால் இம்மாதிரி நாத்திகர் பெருகப் பெருக நல்லதாகும்,'' என்று எழுதியுள்ளார்.

முஸ்லிம்கள் உட்பட ஒவ்வொரு மதக்காரரும் அக்பரைத் தம் மதத்துக்குள் இழுப்பதற்காகப் போராடிப் பார்த்துப் படுதோல்வி யடைந்தனர்; அவர்கள் மதவெறி விவாதங்களைக் கேட்டுக் கேட்டு இன்புறுவதே அக்பருக்கு முக்கியமான பொழுது போக்காயிருந்தது.

## இறுதிக் காலம்

அக்பரது பிள்ளைகளால் அவருக்கு மிகுந்த தொல்லை. ஒருவன் மூளைக்கோளாறினால் மாண்டான். மற்றொருவன் தீய ஒழுக்கங்களில் மூழ்கிக் கிடந்தான். இன்னொருவன், சலீம். தந்தையின் மீது பொறாமைப்பட்டு வெளிப்படையாகவே எதிர்த்துக் கலகம் செய்தான். அக்பர் ஒரே மகனை அவனது கன்னத்தில் அறைந்து சிறைப் படுத்தினார். பிறகு மனமிரங்கி மன்னித்தார்.

பெரியோர்களிடமுள்ள கவர்ச்சித் தன்மை (வசீகரம்) அக்பரிடம் நிரம்ப இருந்தது. அவரது கண்கள் சூரிய ஒளிபட்ட கடல் போல மின்னிக் கொண்டிருந்தன. அவரது கம்பீரமான தோற்றமும், நல்ல உடற்கட்டும், வீரமும் எவரையும் எளிதில் கவரக் கூடியனவாக இருந்தன.

உணர்ச்சி வயப்பட்டு, முரட்டுத்தனமாக, முழுநேர உழைப்புள்ள எவரும் பெரும்பாலும் திடீரென்று சாவது இயற்கை.

1605 ல் வயிற்றுக் கடுப்பு நோய் கண்டது. பேசும் சக்தி இழந்து படுக்கையில் கிடந்தார். தன் மகன் சலீமை அழைத்து, மன்னர் உடையில் வருமாறு ஜாடை காட்டினார்; அக்டோபர் 27 ல் கண் மூடினார்.

அவரது பரந்த சாம்ராஜ்யம் அவரது கொள்ளுப் பேரனான மதவெறியன் அவுரங்கசேப் காலத்தில் தான் அழிந்தது.

அக்பரது பிறப்பின் போது தம் தந்தையால் வெளியிடப்பட்ட ஆசை நிறைவேறியது; அக்பர் புகழ் உலகெங்கும் பரவிற்று. சிந்துப் பாலைவனத்தில் அகதிக் கூடாரத்தில், வறுமையில் பிறந்த சிறுவன் முகலாயப் பேரரசப் பெரியார் ஆனார். உலகச் சான்றோர் பட்டியலில் இடம் பெற்றார்.

அவரது இறுதிச் சடங்கு அவசர அவசரமாக நடந்ததாம். கூட்டமே இல்லையாம்!

> "எவரிடமிருந்து உலகம் நன்மையை எதிர்பார்க்காமலும் தீமையைப்பற்றி அஞ்சாமலும் இருக்கிறதோ, அவர்களை இப்படித்தான் நடத்துகிறது,"

என்கிறார், வரலாற்று ஆசிரியரான டூ ஜாரிக் என்பவர்.

எண்பதாண்டுகட்குப் பின்னர் அக்பரது சமாதியை உடைத்து அவரது எலும்புத் துண்டுகளை அப்புறப்படுத்தி தீயிட்டுப் பொசுக்கினார்களாம், ஜாட்ஸ் என்ற மத வெறியர்கள்!

அக்பர் மறைந்தார், ஆனால் அவர் புகழ் மறையவில்லை. உலகப் பேரரசர் குழுவில் இடம் பெற்று விட்டார், அக்பர். ★★

# மருத்துவரின் மூடநம்பிக்கை

*[டாக்டர்களில் பெரும்பாலோர், சோதிடம், தலை விதி, கடவுள், போன்ற மூடநம்பிக்கைகளில் மூழ்கிக்கிடக்கின்றனர். தங்கள் தொழிலுக்கும் இவற்றிற்கும் நேர் முரண் இருப்பதை டாக்டர்கள் அறிந்தாலும், நோயாளிகள் அறிவதில்லை. கடவுளால் (அல்லது தலைவிதியினால்) வந்த நோயை டாக்டர் போக்கலாமா? போக்கமுடியுமா? சிந்தனைக்கு வேலை தர வேண்டாமா?]*

மருத்துவப் பட்டப் படிப்புக்கு உண்டான பாடத்திட்டத்தில் விஞ்ஞானமும் இடம் பெற்றிருப்பதால் மருத்துவர்கள் விஞ்ஞானம் படிக்க வேண்டியவர்களாகிறார்கள். விஞ்ஞானம் பற்றிப் படித்தாலும் பலர் விஞ்ஞான மனோபாவம் பெற்றிருப்பதில்லை. சில மருத்துவர்கள் ஆழ்ந்த மத நம்பிக்கை யுடையவர்களாகவும்; தத்துவ விசாரணையில் ஈடுபாடு உடையவர்களாகவும் இருக்கிறார்கள்; குருட்டு நம்பிக்கையை வளர்க்கிறார்கள். மருத்துவரிடம் ஆலோசனை கேட்டு, அவர்கள் காட்டும் வழியில் மக்கள் செல்ல வேண்டியிருப்பதால் மருத்துவர்களிடையே மூடநம்பிக்கை இருப்பது மிகவும் ஆபத்தானது. இரண்டொரு மருத்துவர்கள் பகுத்தறிவுப் பாசறையிலே இருக்கிறார்கள் எனினும் அவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. மருத்துவர்களிடம் நிலவும் ஒவ்வொரு மூடநம்பிக்கையையும் ஆராய்ந்து பார்த்து விளக்குவது எளிதில் முடியாத காரியம். அதனால் அவர்களிடையே நிலவும் ஒருசில கண்மூடி வழக்கங்களை மட்டும் ஆராய்வோம்.

ஆயுர் வேத வைத்திய முறை அரசினரால் அங்கீகரிக்கப் பெற்றது. சில ஆயுர் வேத மருத்துவர்கள் உண்மையிலேயே மிக்க திறமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஏறத்தாழ எல்லோரும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட ஆயுர் வேத நூல் கருத்துக்கள் அனைத்தும் உண்மை; அவை பற்றி ஐயப்படுவதே பிழைபட்டது என்ற தவறான கருத்தைக் கொண்டுள்ளார்கள். 'ஆயுர் வேதம்' என்பதிலுள்ள 'வேதம்' தான் பல தொல்லைகளுக்கு மூல காரணமாக உள்ளது. இந்து மதம் வேத நம்பிக்கை என்று விரித்துரைக்கப் படுவதால், ஆயுர் வேதம் என்பது அனைத்தும் உண்மை என்று வாதிடுகின்றனர். காலத்துக்கு ஒவ்வாத கருத்துடைய நூலில் உள்ள விளக்கம் அனைத்தும் உண்மை என்று ஏற்க வேண்டும் என்பது பகுத்தறிவுவாதிக்கு ஒவ்வாத கருத்து; பகுத்தறிவு வாதியால் ஏற்கப்பட முடியாத விளக்கம் ஆகும். காலத்துக்குக்காலம் அறிவு வளர்ச்சி பெறுகிறது; ஒருநாளில் உண்மை என்று ஏற்கப்பட்டது இன்று பொய்யென எடுத்துக் காட்டப் படுகிறது.

புகழ் பெற்ற ஆயுர் வேத மருத்துவர் ஒருவர், "பெண்ணோடு பெண் கூடுவதால் எலும்பில்லாத குழந்தை பிறக்கிறது" என்று கூறி ஆயுர்வேத நூற்களிலிருந்து எடுத்துக் காட்டாகச் சில சுலோகங்களும் சொன்னார். என்னுடைய சந்தேகத்தைப் போக்குவதற்கு முனைந்த அவர், எலும்பில்லாத குழந்தை ஒன்றை உறுதுணையாக மேற்கோள் காட்டினார். விஞ்ஞான முறைப்படி, உடற்கூற்று இயல்புப்படி, இது நடக்க முடியாத காரிய மாயிற்றே என்று வினவியபோது, விடைசொல்ல முடியாமல் தயங்கினார். ஆனால் ஆயுர் வேத சுலோகங்களில் அவருக்கிருந்த நம்பிக்கை அசையவில்லை. பிழை என்று தெரிந்தும் அதை விட்டுவிட மனம் இல்லை. மனம் மறுக்கிறது. மூட நம்பிக்கை என்றும் போல் உறுதியாகத்தான் இருந்தது.

## சோதிட மருத்துவம்!

ஆயுர் வேதத்துக்குரிய மற்றொரு கண்மூடி வழக்கம் சோதிடத்திலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பதாகும். ஆங்கில மருத்துவ முறையைக் கையாளும் மருத்துவர்கள் இதற்கு விதிவிலக்கல்ல எனினும் ஆயுர் வேத மருத்துவர் அனைவருக்கும் சோதிடத்தில் மிகவும் அதிகமான நம்பிக்கை உண்டு. இந்நம்பிக்கை அவர்கள் மருத்துவ முறையையே கெடுக்கிறது எனலாம்.

மேனாட்டு முறையைக் கையாளும் மருத்துவர் ஒருவர் சோதிடராகவும் இருந்தார். அவர் தம்மிடம் வரும் நோயாளிக்கு முதலாவது சோதிடம் பார்த்து மருந்து கொடுக்கலாமா, கொடுத்தால் வெற்றி கிட்டுமா என்பதைப் பார்த்த பிறகுதான் மருந்து கொடுப்பாராம். பெரும்பாலும் அவர் சோதிடத்தில் நோயாளி பிழைப்பான் என்றே வரும். அதனால் பிணிபோக்க மருந்து கொடுப்பார். இரண்டு வழிகளில் பணம் குவிந்தது அவருக்கு. வந்த நோயாளிக்கு நோய் தீராது என்று சோதிடம் சொன்னால், நோயாளியிடம் மருந்துக்குப் பணம் வாங்க மாட்டார். ஆனால் சோதிடம் பார்த்ததற்குரிய பணத்தைக் கொடுத்து விடவேண்டும்! ஏமாந்தவர்கள் அதை நம்பினார்கள்; அவருடைய சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

எல்லாவித மருத்துவ முறைகளும் பிணிபோக்கும் வழிகளைக் கொண்டுள்ளன. அத்துடன் சில கண்மூடி வழக்கங்களையும் கொண்டிருக்கிறது. இவற்றில் சில மூடவழக்கங்களையே தீவிரமாகப் பின்பற்றுகிறது. இந்தியரால் எழுதப்பட்ட ஒரு மருத்துவ நூலில், "மருத்துவ சோதிடம்" எனும் பகுதியைக் கண்டு திடுக்கிட்டேன். உடம்பிலுள்ள தாது உப்புக்களுக்கும், இராசிகளுக்கும் பொருத்திக் காட்டப்பட்ட விளக்கங்கள் டாக்டர் காரேயின் மூலக் கருத்துக்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை ஆசிரியர் ஒப்புக் கொள்கிறார்.

"என்னுடைய முயற்சிகள் என்னை இந்து மதச் சோதிடத்தின் எல்லைக்கு அழைத்துச் செல்கின்றன. இம்முயற்சி எல்லோராலும் பாராட்டப்படும். அதிலும் சிறப்பாக உண்மையைக் காண நாடி உழைப்போரால் பெரிதும் பாராட்டப் பெறும் என நம்புகிறேன்," என ஆசிரியர் தொடங்குகிறார்:

" 'புருஷன்' என்று ரிக்வேதத்திலும், சங்கியா தத்துவத்திலும்

குறிக்கப்பட்ட 'பெரிய மனிதன்' உடலிலுள்ள உறுப்புக்கள் பன்னிரண்டு ராசிகளாகும். உயிர் வாழும் உயிரினங்கள் யாவும் அவனது படைப்பு எழுவாயும் செயல் படுபொருளும் ஆகும்.

## சார்லி சாப்ளின்

தொளதொளப்பான கால் சட்டையுடனும், பெரிய பூட்சுடனும், கைத் தடியுடனும் நாடக மேடையிலும் திரைப் படத்திலும் தோன்றிய சார்லி சாப்ளினுக்கு 16-4-64 உடன் 75 ஆவது வயது தொடங்குகிறது. அவரது சுயசரிதை இவ்வாண்டில் வெளிவர இருக்கிறது.

இவர் அதிகமாகப் பேசுவதில்லை. விளம்பரத்தை விரும்பாதவர். தன்னடக்க முள்ளவர். இளமையில் தந்தையை இழந்து, வறுமையில் வாடிய இவர் நகைச்சுவை நடிகராக நாடக மேடையில் புகழ் பெற்ருர். பிறந்த நாடான பிரிட்டனை விட்டு அமெரிக்கா சென்று திரைப்பட நடிப்பில் இறங்கிய பிறகுதான் இவரது புகழ் உலகெங்கும் பரவிற்று.

இவரது படத்தில் ஒரு அங்குலத்தைக் கூட வெட்ட முடியாது; வெட்டினல் சுவை குன்றி விடும். 8 ஆண்டுகளுக்கு முன்பு வந்த, "எ கிங் இன் நியூயார்க்" என்ற படந்தான் அவர் கடைசியாக நடித்த படம்.

இப்போது குடும்பத்துடன் சுவிட்சர்லாண்டில் அமைதியாக வாழ்கிருர். இரண்டு பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள் அவருக்கு "டாக்டர் ஆஃப் லிட்டரேச்சர்" என்ற கவுரவப் பட்டம் அளித்துள்ளன. பெரும் பொருள் திரட்டிய இவர், இன்று தம் பிள்ளைக்காகத் திரைப் படக் கதை ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிருர்.

உலகத்தில் இயற்கை மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை பெற்றது."

இதில் ஏதாவது பொருள் உள்ளதா என்பது எனக்குப் புரியவில்லை.

பின்பு இராசிகளின் வேறுபட்ட உருவ அமைப்புக்களை விளக்க முயற்சி செய்கிருர். "மேஷம்" எனப்படும் ஆடு, மனிதனின் தலை. இதன் முக்கியமான மூலப்பகுதி பொட்டாசியம் பாஸ்பேட் (Kaliphos)." இவ்வாறு விளக்கிச் சொல்கிருர், பன்னிரண்டு இராசிகளுக்கும்! "பன்னிரண்டு வித உப்புக்களும், உலகத்திலுள்ள தாவர வர்க்கங்களிலிருந்தும், மிருகங்களிடமிருந்தும், சூரியன் பன்னிரண்டு ராசிகளிலும் சஞ்சரித்துச் செல்லும் காலங்களில் உற்பத்தியாகின்றன," என்று கூறுகிருர். ஆனல் அதைச் சோதனை மூலம் நிரூபித்துக் காட்ட ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

"ஒருவரது பிறப்பின் போது மூன்று கோள்கள் தங்கள் உச்சத்திலே இருந்தால், அவர் உயர்ந்த நிலை அடைந்து, ஒரு மன்னனுக்குரிய புகழோடு வாழ்வார்" என்று சோதிடம் கூறுகிருர். இதுபோன்ற அறிவுக் கொவ்வாத குறிப்பை நான் எந்த மருத்துவ நூலிலும் கண்டதில்லை. இத் தன்மையான அறிவு பெற்ற மருத்துவரை யார் நம்ப முடியும்? பலர் அப்படிப்பட்ட மருத்துவரை நம்புகின்றனர்; அவரது ஆலோசனையைக் கேட்கின்றனர். அதனலேதான் இப்படிக் குருட்டு வழக்கங்களைப் பின்பற்றும் மருத்துவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்; இவர்களாலே சமுதாயத்துக்குப் பெருங்கேடு என்று சொல்கிறோம்.

[மூலம்: R. D. கார்வே.

தமிழாக்கம்: குருதாசன்]

கவிதைப் பகுதி

# "பொதுவுடைமை யாக்கிடுவோம்!"

—"குடிலன்"—

1

கத்திக்கு இரையாக்கி ஆட்டைக் கொன்று
கதறுகிற குட்டியினை இழுத்துச் சென்று
முத்திக்கு வழிதேட மூன்று வேளை
முப்பழ மொடுபா லன்னம் நெய்கலந்து
புத்தியின்றி 'குத்துக்கல்' முன்படைத்து
'பூவிதன்னில் மந்திரங்கள் சொல்லி நிற்கும்
சித்திபெரு மானிடர்கள் உண்டு என்றால்
சொல்லிடுவோம் நம்நாட்டில் உண்டு என்றே!

2

அறிவுக்கு அணைபோட்டு நம்பிக் கையின்
அறிவற்ற பொறிவாயில் உலகைத் தள்ளும்
குறியற்ற சமுதாயக் குறையோ; நெஞ்சி
குறுகிய தோராசை யினல் வந்த தன்ருே!
நெறிகெட்டுத் தடுமாறும் நீசத் தன்மை
நிதஞ்சாதி பேதத்தின் இழிவினோடு
ருதறி கெட்ட உயர் வேடுசங்கள் எல்லாம்
தரங்கெட்ட ஓரினத்தின் சொத்தா யாமோ!

3

விண்ணெழுந்து நிலாவுலகில் குடிய மைக்க
விதிவகுத்துச் செயல்புரியும் நேரந் தன்னில்
மண்ணெழுந்து நிற்கின்ற மரத்தைச் சுற்றி

மாமேதை கூட்ட மொடுபவ னிவரும்.
கண்ணிழந்து, கருத்திழந்து கயமை தன்னில்
கடுகளவும் நாணமின்றி கழிக்கு மிந்த
பண்ணுன சமுதாய அமைப்பின் மீது
புனுகாகக் கடவுளேயே பூசு கின்ருர்.

4

கால்பிடிக்க ஆள்பி டிக்க எண்ணியவர்
கடவுளென்ற கற்பனைக்கு உருவந் தந்து
நூல் படிக்கக் கூடாது கால் பிடிப்போர்
நுண்ணறிவு தேடுதலும் பாவ மென்று
வேல்பிடிக்கத் தோள்கொடுக்க, உழைத்துப் போட
வறுமையிலுந் தாழ்மை யிலும் ஊமை களாய்
நூல்படிப்போர் மேன்மைக்குத் தொண்டு செய்ய
நுவலுவதே சாத்திரத்தின் சார மென்ருர்.

5

கடவுளென்ற இழிவான கற்ப னையில்
கயமை, மதஞ், சாதி உயர்வு, தாழ்வு
விடவொண்ணு தீப்பழக்கம் மட்மை, பொய்மை
விதியென்னும் சதியுடனே ஒன்ருய்க் கூட்டி
திடமாகப் புடம்போட்ட செயலைக் கூட
தெரிந்துகொள மாட்டாத மனித கூட்டம்,
விடமான நஞ்சினையே அமுத மென்று
விழுங்கிவிட்டார் என்சொல்வேன், அடிமை யானுர்.

# நேருவுடன் சிறிது நேரம்!

*[நேருவின் அறிவியல்வாத* (Rationalistic) *கொள்கைகள் உலகம் அறிந்தவை; அவரது நூல்களில் பரந்து கிடப்பவை. சாதி, சோதிடம், மந்திரம், கோவில், மசூதி-முதலியவற்றையெல்லாம் அடியோடு துடைத்து விட வேண்டுமென்று பல நூறு மேடைகளில் பேசியிருக்கிறார். ஆயினும் அவரது சவத்தின் சாம்பலை வழிபட்டு; வணக்கப்பாட்டுப் பாடிக் கரைத்து விட்டனர், அவர் விருப்பத்துக்கு* (will) *நேர் முரணாக. அவரது அறிவியல் கருத்துக்களில் சிலவற்றை "டிஸ்கவரி ஆஃப் இந்தியா" என்ற அவரது நூலிலிருந்து திரட்டித் தருகிறார், திரு. குருதாசன்.]*

"மத சம்பந்தமான நூற்களைப் படிக்க எப்போதும் நான் தயங்குவது உண்டு. மதமே எல்லாம் என்ற கொள்கை என்னைக் கவரவில்லை. மத சம்பந்தமான புறச் சடங்குகள் என்னை மத நூல்களின் மூலத்தை அறிய வேண்டும் என்ற எண்ணத்தை ஊக்குவிக்கவில்லை. நான் மதநூல்களைப் படிக்கும்போது முழுவதையும் ஒப்புக்கொண்டு அது புனித நூல் என்ற கருத்தோடு நான் படித்ததில்லை. புராணக்கதைகளில் வரும் நிகழ்ச்சிகளை உண்மை என்று மனிதன் நம்பினால் அது முழுதும் முட்டாள்தனமும், எள்ளி நகையாடுவதற்குரிய செயலும் ஆகும். அப்படிக் கண்மூடி நம்பும் குருட்டு நம்பிக்கையை விட்டுவிட்டால் அந்நிகழ்ச்சிகளிலே ஒரு புத்தொளியும், புதிய அழகும் செறிந்த கற்பனைத் திறனும், மனிதகுலத்துக்கு உகந்த சிறந்த பாடமும் இருப்பது புலனாகும். இப்போது கிரேக்கக் கதைகளில் வரும் கடவுள்களை யாரும் நம்புவதில்லை. அதுபோல நாமும் அதன் பார்த்திரப்படைப்புகளைக் கண்டு கற்பனையை எண்ணி மகிழலாம். கதைகளில் வரும் நிகழ்ச்சியை நாம் உண்மையென நம்பினால் அவை தாங்க முடியாத சுமையாகும். அவற்றின் அழகை உணர முடியாது. (The earliest records, Scriptures and mythology.)

x x x

"அந்நியருக்கு அடிமைப்பட்ட நாடு மறைந்த நிகழ்ச்சியையும், இறந்த கால இன்ப எண்ணங்களையும் நினைத்துத் தப்பித்துக் கொள்ள முயல்வது மூடத்தனமும் ஆபத்தான பொழுது போக்கு நிகழ்ச்சியும் ஆகும். இவ்வுலகில் நாம் வாழ்ந்து கொண்டு, ஆத்மீக வாழ்வில் தலை சிறந்தவர் என்று கற்பனைகளில் மிதப்பது, இதைப் போன்றே கேள்விக்குரிய செயலாகும். ஆத்மீக உயர்வோ ஏனைய சிறப்போ சுதந்திரமும், வாய்ப்பும் இல்லாத இடத்தும், பசியும் துன்பமும் மலிந்த இடத்திலும் காணமுடியாது. மேல் நாட்டு எழுத்தாளர் பலர் இந்தியா மீறு உலகைப் பற்றியே

சிந்திக்கிறது என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்கள். எல்லா நாடுகளிலும் ஏழைகளும், நல்ல வாய்ப்புப் பெறாதவர்களும் புரட்சிக்காரர்களாக மாறுவது வரை, ஓரளவு மறு உலகைப்பற்றியே சிந்திப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள் என எண்ணுகிறேன். காரணம் இவ்வுலகில் அவர்களுக்கு வாழ இடம் இல்லை. இது போன்றே அடிமை மக்கள் வாழ்வும்.

"நாகரீகம் மலரும் ஒவ்வொரு நிலையிலும் இந்தியாவில் வாழ்வில் இன்பமும், கலை, இசை, இலக்கியம், கவிதை, நடனம், ஓவியம் சிறு வளர்ச்சி பெறுவதும், பால் உணர்ச்சியிலே சிறந்த ஏற்றமும் பெற்று வளர்ந்து வந்திருப்பதைக் காண்கிறோம். மறு உலகையே எண்ணி, இவ்வுலக இன்பத்தை உதறி வாழ்ந்த பண்பாடுடைய சமூகம் இப்படிச் சிறந்த கலையில் இன்பம் கண்டு வாழ்ந்திருக்க முடியுமா என்பதை ஊகிக்க முடியவில்லை. மறு உலகையே எண்ணி வாழும் அடிப்படையோடு கூடிய நாகரீகத்தோடு கூடிய சமூகம் ஆயிரக் கணக்கான வருடங்கள் நிலை பெற்றிருக்க முடியாது என்பது கண்கூடு. இருப்பினும் சிலர் இந்தியாது எண்ணங்களும், பண்பாடும், "வாழ்வாவது மாயம்" என்பதிலேதான் திளைத்திருக்கிறது; 'வாழ்வு நிலையானது' என்பதில் அல்ல என நினைக்கிறார்கள். இந்தியப் பண்பாடு முழுதும் உற்று நோக்கினால் அது வாழ்வு நிலையின்மையைப்பற்றி அழுத்தமாகச் சொல்லவில்லை. (The acceptance and the Negation of life.)

"இந்தியாவில் ஆரியர்களின் வருகை புதிய இனப் பிரச்சினையையும் அரசியல் பிரச்சினையையும் எழுப்பியது. போரில் தோற்கடிக்கப்பட்ட திராவிடர்கள் நீண்ட காலமாகப் பழக்கப்பட்ட சிறந்த பண்பாடு உடையவர்களாக இருந்தார்கள். ஆரியர்கள் தங்களை மிகவும் உயர்ந்தவர்கள் என்று கருதி நடந்தனர். இவ்விரு இனத்தினருக்கும் வேற்றுமை ஏற்பட்டது. சாதிப்பிரிவு ஆரியரையும், ஆரியர் அல்லாதவரையும் பிரித்துக்காட்டத் துணையாகக் கொள்ளப்பட்டது. ஆனால் சாதிப்பிரிவு ஆரியர்களையே தாக்கியது, பிராமணர்கள் எந்த அளவு இழிசெயல் புரிய முடியுமோ அவ்வளவும் செய்தார்கள். பெரும்பாலோர் கல்வி அறிவு பெற்றிருக்கவில்லை. சிறந்த குணங்களும் அவர்களிடம் இல்லை. ஆனாலும் பொது மக்களின் மதிப்பைப் பெற்றிருந்தனர்! (The Beginning of the caste system.)

"வளர்ந்து வந்த மதகுரு இனம் மக்களின் மூடநம்பிக்கை என்ற அடிப்படையான சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மற்றவர்களை உறிஞ்சித் தனது உல்லாச வாழ்வுக்கு வழி வகுத்துக் கொண்டது. காரிய வாதத்தோடு (Materialism) சம்பந்தமான அறிவு நூல்களில் பெரும்பாலானவற்றை மதகுருக்களும், பழமைப் பிடிப்பில் உள்ளோரும் அழித்துவிட்டனர். (Materialism.)

மதம் தேவையற்ற சடங்குகளுக்கு ஊக்கம் தந்தது. உண்மையான கோட்பாடு மறைந்து பழக்கப்பட்ட அன்றாட ஒரு நிகழ்ச்சியாக உருவம் தந்தது.

மனிதனைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் கண்ணுக்குப் புலப்படாத ஒன்றைப் புகுத்தி, மனிதனுக்கு அச்சத்தையும், ஆச்சரியத்தையும் ஊட்டி; உருவமற்ற ஒன்றைப்பற்றி மனிதன் அறிவதற்கு வழிவகுத்துத் தருவதற்குப்பதில் இயற்கைக்குப் பணிந்தே ஆக வேண்டும் எனும் அடிமை மனப்பான்மையை வளர்த்தது. மனித அறிவுக்கப்பால் இருக்கும் ஒன்றின் மேல் கொண்ட நம்பிக்கையால் சமூகதிட்டங்களை உருவாக்குவதில் பொறுப்பற்ற நிலையும்; பகுத்தறிவோடு கூடிய சிந்தனைத் திறனும், எதையும் அறிய வேண்டுமென எண்ணும் ஆர்வத்திற்குப் பதிலாக ஆவேசமும், மிகவும் இளகிய மனமும் ஏற்படுகிறது. மாற்றத்தை விரும்பி ஏற்று ஏற்றம் பெற விழையும் மனிதத் தன்மையையே அடக்கி ஒடுக்குகிறது மதம்.

"மதம் விஞ்ஞானத்துக்கு எதிரான கருத்துக்களையே பரப்புகிறது. குறுகிய மனப்பான்மை; சகிப்புத் தன்மையின்மை; மூட நம்பிக்கைப் பேதமை; பகுத்தறிவுக்கு ஒவ்வாத சிந்தனை, இவற்றை உற்பத்தி செய்கிறது. மனித அறிவுக்கு முற்றுப்புள்ளி வைத்து, மூடுவிழா நடத்திவிட்டு மனிதனைக் கட்டுக்கு அடங்கியவனுகச், சுதந்திர மற்றவனுகச் செய்கிறது.

"அறிவு வளர வளர மதத்தின் ஆட்சி எல்லை சுருங்குகிறது. வாழ்வையும், இயற்கையையும் நாம் உணருகின்ற அளவைப் பொறுத்து, 'ஆண்டவனல் ஏற்படுத்தப்பட்டது' எனும் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரணத்தின் மேல் கொண்ட நம்பிக்கை தளர்கிறது.

## தமிழ்நாடு: தொழில் வளம்

பருத்தி (நூல்-துணி) நூற்பாலைகள்:— 138. (கோவை-75; மதுரை 17; ராமநாதபுரம் 14; திருநெல்வேலி-12; சேலம் 8; திருச்சி-5; செங்கற்பட்டு-2; வட ஆற்காடு-2; சென்னை-1; கன்யாகுமரி-1; தென் ஆற்காடு 1.) இவற்றில் வேலை பார்ப்போர் எண்ணிக்கை-1,10 535.

சர்க்கரை:—9 தொழிற்சாலைகள். கூட்டுறவுத் துறையில் 3 தொழிற்சாலைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

சிமெண்ட் தொழிற்சாலைகள்-4.

சைகிள் உற்பத்தி தொழிற்சாலைகள்-4.

இவை 276,406 சைகிள்களை உற்பத்தி செய்துள்ளன.

இரசாயன எரு உற்பத்தி சாலைகள்-6.

கைத்தறிகள் — (1962-ல்)-516,086.

"நம்மால் உணர்ந்து கட்டுப்படுத்தக்கூடிய செயல்கள் பரம ரகசியம், மர்மம் என்று கருதப்படுவதில்லை. விவசாய முறைகளும், உண்ணும் உணவும், உடுத்தும் உடையும்; சமூக உறவும், உடன்பாடுகளும், மதசாம்ராஜ்யத்துக்கும், மதகுருவின் ஆணைக்கும் உட்பட்டிருந்த காலம் ஒன்று உண்டு மெதுவாக, அவை, விஞ்ஞான அறிவுக்கு இடம் விட்டு, ஒதுங்கிக் கொண்டன. ஆனலும் பெரும்பாலும், மத நம்பிக்கையும், அதிலிருந்து எழுந்த மூட நம்பிக்கையும் இன்னும் தன் கோரப்பிடி

யைத் தளர்த்தவில்லை. விஞ்ஞானத்தை உறுதுணையாகக் கொண்டு, வாழ்க்கையை எதிர்த்துப் போராடி வெல்லவேண்டும்.

கடந்த காலத்தில் கருகிச் செத்த மரங்களால் சூழப்பட்டிருக்கிறது நமது வாழ்வு முறை. இறந்தவையும், கடமையை ஆற்றிக் குறிக்கோளை நிறைவேற்றி விட்டவைகளும் ஒதுக்க வேண்டியவைதான். பழமையின் பிடியில் நிகழ் காலத்தைச் சிக்கித் தவிக்க விடாமல், பழமையை முறியடிக்க வேண்டும். (Religion Philosophy and Science.)

x x x

"இந்து மதமோ, இஸ்லாம் மதமோ; புத்த மதமோ; கிறித்தவ மதமோ; அவை அனுசரிக்கப் படும் வழி முறையோ; ஏற்றுக் கொள்ளப்படும் விதமோ என்னைக் கவரவில்லை. குறிப்பிட்ட செயல் முறைகளையும், கண்மூடி வழக்கங்களையும் கொண்டு வாழ்வு பிரச்சினைகளைத் தீர்க்க விஞ்ஞானத்தோடு தொடர்பற்ற முறைகளைக் கொண்டிருக்கின்றன. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றின் மேல் நம்பிக்பிக்கை கொண்டுள்ளன.

"நான் இவ்வுலகத்தைப்பற்றி; இங்கே வாழும் வாழ்வைப்பற்றி மிக அக்கரையும் ஆர்வமும் கொண்டிருக்கிறேன். மறுஉலக வாழ்வைப் பற்றி எனக்கு அக்கரை இல்லை ஆத்மா என்ற ஒன்றிருக்கிறதா; இறப்புக்குப் பின்பு ஒரு உலகம் உண்டா என்பது எனக்குத் தெரியாது. அவை எனக்கு எள்ளளவும் தொந்தரவு கொடுத்ததில்லை.

"ஆச்சரியம் தரும் பொருளை நான் கடவுள் என்று கருதுவதில்லை. காரணம், 'கடவுள்' என்ற வார்த்தை நான் நம்பாத ஒன்றைக் குறிக்கும் பொருளாகி நிற்கிறது. ஒரு தெய்வத்தைப் பற்றி நினைக்கும் நிலையிலோ, அல்லது கண்ணுக்குப் புலப்படாத சக்தி வாய்ந்த ஒன்றில் நம்பிக்கை வைக்கும் நிலையிலோ நான் இல்லை இதைப்பற்றி நினைக்கும் மக்களைக் காணும் போது எனக்கு வியப்பாக இருக்கிறது. குலதெய்வம், தனக்கு உகந்த கடவுள் என்று கூறுவதைக் காணும்போது ஆச்சரியமாக இருக்கிறது! 'ஒருவனே தேவன்' எனும் கொள்கையை நான் ஓரளவு பாராட்டுகிறேன். வேதாந்த முறையில், "அத்வைத நெறி" என்னைக் கவர்ந்திருக்கிறது. வேதாந்தமும், அதை ஒத்த வழிமுறைகளும் திட்டவட்டம் இல்லாத வகையில், படை பட்டாளத்தோடு செல்வதைப் பார்க்கும்போது அச்சமாக இருக்கிறது." (Life's Philosophy.)

மூலம் : Nehru's Discovery of India.

தமிழாக்கம் : தொகுப்பு:
குருதாசன்

★

"நம்பிக்கை என்பது போதுமான ஆதாரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்; இல்லையேல் அது வெறும் மூட நம்பிக்கைதான்."

—ஏ. ஏ. ஹாட்ஜ்

# ஐரிஷ் அறிஞன் ஆலிவர் கோல்ட்ஸ்மித்

"காதம்பரி"

*[இங்கிலீஷ் இலக்கியச் சான்றோர்களில் ஆலிவர் கோல்ட்ஸ்மித் குறிப்பிடத்தக்கவர். பல இலக்கிய நிபுணர்களைப் போல இவரும் வறுமைக் கிணற்றில் தள்ளப் பட்டவரே! இவரது நாவல், "விகார் ஆஃப் வேக் ஃபீல்டு" என்பதைப் பல முறை படித்தவர்களில் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியும் ஒருவர். இவரது கவிதைகளில் வறுமைத்துயரத்தைப் படம் பிடிக்கும் வரிகளை நிறையக் காணலாம். பல கருத்துக்கள் பழமொழிகளாகவே நிலைத்து விட்டன.]*

ஆங்கில அறிஞர்களிலே தலை சிறந்தவன் என்று போற்றப்படுபவன் மேதை சாமுவல் ஜான்சன். அவனே ஒருவனைச் "சான்றோன்" எனச் சொல்லுவானானால், அதற்கு மறுபேச்சே இருக்க முடியாது. ஜான்சனே போற்றிப் புகழ்ந்தேத்திய பேரறிஞன்தான் ஆலிவர் கோல்ட்ஸ்மித் (Oliver Goldsmith).

ஆங்கில இலக்கியப் பூங்காவிலே வாடாத சில மலர்களை அலரவைத்த ஆலிவர் கோல்ட்ஸ்மித் அயர்லாந்து நாட்டில் 1728-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் நாள் மிகமிக வறுமை நிறைந்த ஒரு குடியில் பிறந்தான். அவன் பிறந்த ஊரைப் பற்றிய கருத்து மாறுபாடுகள் ஆய்வாளரிடையே உள்ளன. சிலர் லாங்போர்டு மாவட்டத்திலுள்ள "பல்லாஸ்" என்ற ஊரில் பிறந்தான் என்றும், மற்றவர்கள் ரோஸ்காம்மன் மாவட்டத்திலுள்ள "எல்பின்" என்ற பகுதியில் பிறந்தான் என்றும் கூறுகின்றார்கள். மத குருவாகப் பிழைப்பை நடத்தினார் அவன் தந்தை. அவன் இளம் பருவம் "லிஸ்ஸாய்" என்ற சிற்றூரில் கழிந்தது. திலோப் அம்மையார் என்ற ஆசிரியையிடம் ஆரம்பக் கல்வி பயின்றான் ஆலிவர். அதன் பிறகு கிராமத்தின் ஆரம்பப் பள்ளியில் சேர்க்கப்பட்டான்.

பள்ளிப் பாடங்களை ஆலிவர் விரும்பிப் படிக்கவில்லை. அதனால் அவன் "மந்தமதி படைத்தவன்" என்று ஆசிரியர்களால் இகழ்ந்துரைக்கப்பட்டான். அவனைப் பின்னர் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தனர். அங்கும் அவன் தன் இயல்புக் கேற்றபடி பிறருடன் பழகினான். அவன் ஒரு

மேதை என்பது பிறருக்குத் தெரியவேயில்லை. அதைக் காட்டும் அறிகுறிகளும் அவனிடம் காணப்படவில்லை. ஆட்ட பாட்டங்களில் தன் பொழுதைக் கழித்து வந்த ஆலிவர், வலுவுள்ள உடலமைப்பைப் பெற்றிருந்தான். வாழ்நாள் முழுவதும் அவன் அனுபவித்த துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு அவனுடைய உடல் அமைந்திருந்தது.

'திடீர் திடீர்' என்று கவிதை வெறி பிறக்கும் அவனுக்கு! தோன்றியதை எல்லாம் எழுதித் தள்ளுவான். அவன் பெற்றோர்கள் அதைப் படித்து விட்டு மகிழ்வார்கள். இருந்த போதிலும், பாடத்தில் தன் கவனத்தைச் செலுத்தாமல், கவிதை எழுதுவதில் அவன் ஈடுபட்டதை அவர்கள் விரும்பவில்லை. தனக்குத் தேவையில்லாத பெரிய நூல்களையெல்லாம் இரவும் பகலுமாகப் படித்துக் கொண்டிருப்பான் ஆலிவர்.

வறுமையில் வாடினாலும், ஆலிவரைக் கல்லூரிக்கு அனுப்ப அவன் தந்தை முடிவு செய்தார். அதைத் தியாகம் என்றுதான் அழைக்க வேண்டும். ஆலிவருக்குப் பட்டம் பெறுவதில் ஆர்வம் இல்லை அவன் எண்ணமெல்லாம் இலக்கியத்திலேயே இருந்தது. அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் இருந்த டிரினிடி (Trinity) கல்லூரியில் அவன் மாணவனானான். அங்கே அவனை யாரும் மதிக்கவேயில்லை. குறிப்பிடத் தகுந்த வகையில் எந்த ஒரு பாடத்திலும் அவன் தேர்ச்சியடையவில்லை. அவனுக்குக் கணிதம் கட்டாயப் பாடமாக இருந்தது. ஆலிவருக்கோ, கணிதம் என்றால் கசப்பு. காத தூரம் ஓடுவான். ("தாமஸ் கிரே", "ஜோனதன் ஸ்விஃப்ட்" போன்ற அறிஞர்களும் கணிதத்தின் பகைவர்களே ஆவர்). அவனுடைய கணித ஆசிரியர், மிகவும் கண்டிப்பானவர். அவருடைய கருத்தின்படி "கணக்குப் போடத் தெரியாதவர்கள், உலகில் வாழவே தேவையில்லை." ஆலிவரின் மீது அவருக்கு வெறுப்பு. ஆலிவருக்கு அவரைக் கண்டால் அச்சம்.

கணக்குப் பாட நேரத்தில் கவிதையும், கட்டுரையும் வரைவான், ஆலிவர். ஆசிரியர் பல்லைக் கடிப்பார். "தொலைத்து விடுகிறேன், உன்னை" என்று உறுமுவார். தக்க சமயம் வந்தது. ஆலிவர், தன்னுடைய நண்பர்கள் சிலரைத் தன் அறைக்கு அழைத்து விருந்து அளித்தான். எல்லோரும் உணவருந்திய வண்ணம், இலக்கிய நுட்பங்களைப் பேசி மகிழ்ந்தனர். அப்போது அங்கே வந்து விட்டனர் ஆசிரியரும், அவர் குழுவினரும். ஆசிரியரைக் கண்டதும் மாணவர்கள் விழுந்தடித்து ஓடிவிட்டார்கள். ஆலிவர் அவமானத்தினால் தலைகுனிந்து நின்றான். கடுஞ் சொல்லும் இழி சொல்லும் அவன் இதயத்தைத் துளைத்தன.

வேதனை நிறைந்த நெஞ்சத்துடன் ஆலிவர் அமெரிக்காவுக்குக் கப்பல் ஏறினான். அதற்குள் அவன் தமையனார் கணித ஆசிரியரைக் கண்டு பேசி அவரைச் சமாதானப் படுத்தி வைத்தார். ஆலிவர் மறுபடியும் திரும்பி வந்து படித்தான். 1749-ம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம் பி.ஏ. பட்டம் பெற்றான். அவன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதே அவன் தந்தை இறந்தார்.

பி.ஏ., பட்டம் பெற்ற ஆலிவர், எழுத்தர் வேலை பார்க்க விருப்பமில்லாமல்—அங்குமிங்கும் அலைந்தான். அமெரிக்காவுக்குச் சென்று பிழைக்கலாம் என்று அங்கேயும் மறுமுறை சென்றான். சில ஆண்டுகள் கழித்து அயர்லாந்துக்குத் திரும்பினான். கையில் ஒரு காசில்லை. இலக்கியத்தை நம்பினால் பட்டினிதானே பரிசு? இது அவனுக்குத் தெரியாததல்ல; இருந்தும் எழுத்தர் வேலையைக் காட்டிலும், பட்டினி கிடத்தல் இழிவானதல்ல என்பது அவன் கொள்கை.

## எழுத்தாளன் முயற்சி

இங்கிலாந்துக்குச் சென்றான். கவிதைகளையும் கட்டுரைகளையும் பல இதழ்களுக்கும் அனுப்பினான். சுவர்மீது அடித்த பந்துபோல் திரும்பிவந்தன, அவன் எழுத்துக்கள். இல்லாவிடில் குப்பைக் கூடையில் சரண்புகுந்தன. மருத்துவம் கற்றான். சட்டம் பயின்றான். ஒன்றிலும் அவன் நிலைத்து நிற்கவில்லை. அவன் பிறந்தது இலக்கியப் பணிபுரிய! அவனை மதிப்பார் எவரும் இல்லை. உற்றாரும் உடன் பிறந்தாரும் அவனை வெறுத்து ஒதுக்கினர். அவனோ வெதும்பினான், புண்பட்ட நெஞ்சத்தால். வருவது வரட்டும் என்று ஐரோப்பாக் கண்டத்தினுள் புகுந்தான் அவன். கால் நடையாக்வே ஆயிரக் கணக்கான மைல்கள் சுற்றினான் ஃபிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ், இத்தாலி முதலிய நாடுகளை வலம் வந்தான். அங்கங்கே பேரறிஞர்களைக் கண்டு பேசுவான்; அவர்கள் ஆதரவுடன் அங்குமிங்கும் சென்று உலக அறிவை வளர்த்துக் கொண்டான். "பிரயாணி" (The Traveller) என்ற கவிதையை எழுதினான், தன் அனுபவங்களின் அடிப்படையில்.

திரும்பவும் அவன் இங்கிலாந்துக்கு வந்ததும் "மன்த்லி ரெவியூ" (Monthly Review) என்ற இதழில் அவன் கட்டுரைகள் வெளிவந்தன. ஃபிரான்சில் கத்தோலிக்கர்கள், புராடெஸ்டெண்ட் பிரிவினரை மதத்தின் பெயரில் வதைப்பதைக் குறித்து பெருநூல் ஒன்று எழுதினான். அதை அனைவரும் பாராட்டினர்; ஆனால் வருமானம் மட்டும் இல்லை. கிழக்கிந்தியக் கம்பெனியின் அலுவலகம் ஒன்றில் மருத்துவ உதவியாளன் வேலை கிடைத்தது. அவன் அதை உதறித் தள்ளினான். "மருத்துவம் பார்த்து வயிறு வளர்ப்பதைக் காட்டிலும், இலக்கியம் எழுதிப் பட்டினி கிடக்கலாம்," என்றான் அவன், வெறுப்புடன்.

"ஐரோப்பாவில் அறிஞர்களின் நிலை" என்ற கட்டுரையை 1759-ம் ஆண்டில் எழுதினான். அதில், அறிஞர்களைப் பட்டினி போட்டுவிட்டு, ஒன்றுக்கும் உதவாதவர்கள் இன்புற்று வாழ்வதைச் சாடினான். அதன் பின் "தேனி" என்ற தலைப்பில் பற்பல இன்சுவைப் பகுதிகளை திரட்டித் தந்தான். பல ஏடுகளில் பற்பல கட்டுரைகள் எழுதினான். நகைச் சுவைக் கட்டுரைகள் அவற்றில் பல. அவன் அழுது கொண்டே மற்றவரை சிரிக்க வைத்தான். "பிரிட்டிஷ் மேகசீன்," "பப்ளிக் லெட்ஜர்" போன்ற இதழ்களில் நிறைய எழுதினான். புகழ் வந்தது; பணம் இல்லை. "உலகக் குடிமகன்," (Citizen of the world) என்ற கட்டுரை அப்போது எழுதியதே.

## புகழ் ஏணியில் ஏற்றம்

சாமுவல் ஜான்சன் என்ற அறிஞர் பெருந்தகையின் அறிமுகம் கிடைத்தது. "இலக்கியக்

கழகம்" (Literary Club) என்ற நிறுவனத்தை அவர் நடத்தினார். அதன் ஆதரவில் பின் கண்ட பெருநூல்களை எழுதி வெளியிட்டான் ஆலிவர். "வால்டேரின் வாழ்க்கை வரலாறு," "மாக்னென் பர்க்கின் சரித்திரம்," "ரிச்சர்ட் நாஷ்" முதலியன.

இதனிடையே இங்கிலாந்தின் வரலாற்றைக் கடிதங்களின் உருவத்தில் எழுதினான். அவை இரு தொகுதிகளாக வெளிவந்தன. "சமுதாயத்தின் எதிர்காலம்" என்ற நீண்ட கட்டுரையும் வெளியானது. புகழ் பெற்றான். கட்டுரைகள் அனைத்தும் நூல்களாக வெளியிடப்பெற்றன. "எட்வினும் ஏஞ்சலினாவும்" என்ற இசை நாடகமும் எழுதினான். அது சாதாரணமானதுதான். 1766-ல் "விகார் ஆஃப் வேக் ஃபீல்ட்" (Vicar of Wakefield) என்ற நாவல் வெளியாயிற்று. இதன் பதிப்பாளர்கள், ஆலிவர் கோல்ட்ஸ்மித்துக்குக் கொடுத்தஅன்பளிப்புத் தொகை இருபத்தொரு பவுன்களே. ஆனால் அதன் மூலம் அவர்கள் அடைந்த இலாபம் மட்டும் முப்பத்திரண்டு லட்சம் பவுன்கள். இதுவரையில் அந்நூலுக்கு 67 ஆங்கிலப் பதிப்புக்களும், 133 வேற்று மொழிப் பதிப்புக்களும் வந்துள்ளன என்று அண்மையில் புள்ளி விவரம் கிடைத்துள்ளது.

ஆசிரியன் வறுமையின் பிடியில் சிக்கித் துடித்தான்; பதிப்பாளர்கள் பணத்தில் நீந்தினார்கள். இந்த நிலை அன்றிருந்து இன்றுவரை மாறவில்லை. ஆலிவர் கோல்ட்ஸ்மித் கதை எழுதுவதைக் கைவிட்டு நாடக உலகில் புகுந்தான். இரண்டு நோக்கங்கள் அவனுக்கு இருந்தன.

> **மின்சாரம்**
>
> தமிழ் நாட்டில் 1—3—64-ல் மின்சார இணைப்புக்கொண்ட கிராமங்கள் 16,564. விவசாயத்துக்கான 'பம்ப் செட்'கள், 186.096. 1963 ஏப்ரல் முதல் 1964 ஃபிப்ரவரி முடிய 1504 கிராமங்களுக்குப் புதிதாக மின்சார இணைப்புத் தரப்பட்டிருக்கிறது.
>
> —"சென்னைச் செய்தி"

நாடகம் எழுதிப் பிழைக்கலாம் என்பது ஒன்று. தனக்கு எல்லா வகை இலக்கியமும் தண்ணீர் பட்டபாடு என்பதை வெளிக்காட்டுவது மற்றொன்று. அவன் அது வரையில் கவிதையும், கட்டுரையும், கதையும், கடிதமும், காவியமும் எழுதியிருந்தான். நாடக உலகிலும் அவன் புகழ் கொடிகட்டிப் பறந்தது. "நல்ல மனிதன்", "இரவில் நடந்த தவறுகள்" (Mistakes of a Night) போன்ற நாடகங்கள் புகழும், பணமும் தந்தன. பணம் கடனை அடைக்க உதவியது.

தன்னுடைய நாற்பத்தாறுவது வயதில் இலண்டன் நகரில் 4-4-1774-ல் அவன் இறந்தான். வெஸ்ட்மினிஸ்டர் மடாலயக் கல்லறையில் அவனுக்கு நினைவுச் சின்னம் எழும்பியது. பேரறிஞர் ஜான்சன் நினைவு வரிகளை எழுதினார். "அவனுடைய குறைகளை மறந்து விடுங்கள். அவன் ஒரு பெரிய மனிதன்," என்பது அவரது கூற்று.

கோல்ட்ஸ்மித் இறந்த பின்னர் அவன் எழுதிய வேறு இரண்டு நூல்கள்-கவிதைகள்—வெளிவந்தன. உலகம் அவனை வதைத்தது. ஆனால் உலகத்தை அவன் வாழ்த்திவிட்டுப் போயிருந்தான். அவன் "சான்றோன்" அல்லவா?

கவிஞர் முருகுசுந்தரம், எம். ஏ.,

# சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

## II

*[புரட்சிக் கவிஞரின் பெருங்கவிதையிலுள்ள வேறு சில பகுதிகளை எடுத்துக் காட்டுகிறார், கட்டுரையாளர். "ஷெல்லி"யின் 'வானம்பாடி' கவிதையைப் போல, எத்தனை தடவை படித்தாலும் இனிக்கின்ற கவிதை 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்']*

நிலம் வளமுள்ளதாக இருந்தால் தான் அந்நிலத்தில் விளையும் பயிரும் செழிப்பாக வளர முடியும். பெண்டிர் ஊமையராய் வாழ்ந்தால், அவர்கள் பெற்றுச் சமுதாயத்துக்குக் கொடுக்கும் ஆடவர்கள் ஆமையராய்த் தாம் இருப்பர். ஒருவன் உயர்மனிதனாக ஆவதற்கும், அல்லது இழி மகனாக வீழ்வதற்கும் அவனைப் பெற்று வளர்க்கும் தாயே அடிப்படைக் காரணமாக விளங்குகிறாள். சிவாஜியும் நெப்போலியனும் மாவீரர்களாக மாறியதற்கும், வின்ஸ்டன் சர்ச்சில் சிறந்த அரசியல் மேதையாக மாறியதற்கும் அவர்களைப் பெற்றெடுத்த தாயரே காரணம் என்பதை அவர்களே ஒத்துக் கொள்கிறார்கள். எனவே அறிவும் ஆற்றலும் மிக்க பெண்கள் தாம் சிறந்த ஆண் மக்களைப் பெற முடியும்.

இந்திய நாடு அடிமைப்பட்டதற்கு அடிப்படைக் காரணம், பெண்ணடிமைதான் என்று தெளிவு படுத்துகிறார், கவிஞர்.

"பெண்ணடிமை தீருமட்டும்
பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து
வருதல் முயற்கொம்பே,
ஊமையென்று பெண்ணை
உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமைநிலைமைதான்
ஆடவர்க்கும் உண்டு!
புலனற்ற பேதையாய்ப்
பெண்ணைச் செய்தால் அந்த
நிலம் விளைந்த பைங்கூழ்
நிலைமையும் அம்மட்டே!"

என்று கூறுகிறார் கவிஞர். பாரதிதாசன் பாடல்களில் பெரும்பகுதி பெண்ணுரிமை பற்றியே பேசுகிறது. சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்கு அடுத்தாற்போல் காணப்படுவது 'வீரத்தாய்' என்ற நாடகக் காவியம். அவர் எழுதியுள்ள 'புரட்சிக் கவி' என்ற காவியமும் அமுதவல்லியின் காதல் உரிமை பற்றியே பேசுகிறது! 'தமிழச்சியின் கத்தி' பெண்ணின் எழுச்சியைப் பற்றியே பாடுகிறது. கைம்மைக் கொடுமையைப் பற்றித் துணிந்து பாடியவர் தமிழ் நாட்டில் பாரதிதாசன் ஒருவர் தாம்.

குப்பன் வஞ்சிக்கு மூலிகையைப் பறித்துக் கொடுக்கிறான். அதைத் தின்றாள் வஞ்சி. உடனே ஃபிரெஞ்சு நாட்டு மக்கள் பேசும் பேச்சு வஞ்சியின் காதில் விழுகிறது. கவிஞர் ஃபிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரியில்

வாழ்ந்தவர். மேலைநாடுகளுக்குச் சமத்துவம், சகோதரத்வம், சுதந்தரம் ஆகிய உயர்ந்த கொள்கைகளை வழங்கிய பெருமை ஃபிரெஞ்சு நாட்டையே சாரும். இக்கருத்துக்களுக்கு வித்திட்ட பெரியார்களான ரூசோ, வால்ட்டேர் போன்றோரும் ஃபிரெஞ்சு நாட்டைச் சார்ந்தவர்களே. புதுச்சேரியில் வாழ்ந்த கவிஞருக்கு இக்கொள்கைகள் மிகவும் பிடித்திருந்தன. இக் கொள்கைகளைப் பாராட்ட வேண்டும் என்ற உணர்வு கவிஞர் உள்ளத்தில் ஏற்பட்டது. உடனே அவர் உள்ளத்தில் ஒரு கற்பனைச் சித்திரம் உருவாகிறது.

ஓர் இத்தாலியன் பாரீசுக்கு வருகிறான். அந்நகரில் ஓர் உணவு விடுதியில் தங்கி உணவு உண்ணுகிறான். அப்போது அவன் எதிரில் ஒரு கருப்பன் அமர்ந்து உணவு உட்கொள்ளுகிறான் கருப்பனை எதிரில் கண்ட இத்தாலியனுக்கு ஓர் அருவருப்புணர்ச்சி ஏற்படுகிறது. அவ்விடுதி உரிமையாளரை அணுகி, "கருப்பனை எவ்வாறு அருகில் வைத்துக் கொண்டு சாப்பிடுகிறீர்கள்? அவர்களுக்குத் தனியிடம் ஒதுக்கினால் என்ன?" என்று கேட்கிறான், இத்தாலியன்.

அதற்கு விடுதியின் சொந்தக்காரனை ஃபிரெஞ்சியன் கூறுகிறான்:

"இத்தாலிச் சேர்தரனே,
என்ன மதியுனக்கே?
செத்து மடிவதிலும்
சேர்ந்து பிறப்பதிலும்
இவ்வுலக மக்களிலே
என்ன பேதங்கண்டாய்?
எங்கள் பிரான்சியர்கள்
இப்பேதம் பாராட்டித்
தங்கள் பழங்கீர்த்தி
தாழ்வடைய ஒப்பார்கள்!"

இங்குப் பழங்கீர்த்தி என்று தொடர் ரூசோ – வால்டேர் செய்த பகுத்தறிவுப் புரட்சியையும், ஃபிரெஞ்சு மக்கள் செய்த உரிமைப் புரட்சியையும் குறிப்பிடும் "பேதம் கொண்டார்க்குப் பிரான்சில் இடமில்லை" என்று கவிஞர் இறுதியில் குறிப்பிடும் போது, பிரெஞ்சியரின் ஒப்புரவுக் கொள்கையில் அவருக்கிருந்த பிடிப்புப் புலனாகும்.

அடுத்தாற் போல் வஞ்சியும் குப்பனும் அமெரிக்க மக்கள் பேசும் பேச்சில் தம் கருத்தைச் செலுத்துகிறார்கள். அமெரிக்கா பரந்த ஒரு துணைக் கண்டம். செல்வச் செழிப்பு மிக்க நாடு. உலக வல்லரசுகளில் ஒன்று. இத்தகைய வளம் மிக்க ஒரு நாடு உலகிற்கு என்ன செய்ய வேண்டும் என்று கற்பனை செய்கிறார் கவிஞர். சுதந்திரம் பெற்றுச் சீரும் சிறப்போடும் வாழும் ஒரு நாடு, அடிமைப்பட்டுக் கிடக்கும் மற்ற நாடுகளின் விடுதலைக்குத் துணைபுரிய வேண்டும் என்று எண்ணுகிறார். எனவே,

"கொத்தடிமையாகிக்
குறைவுபடும் நாட்டுக்கு
மெத்த துணையாகியிவன்
மேன்மை அடைக,"

என்று பாடுகிறார்:

இதே கருத்தைத்தான் கென்னடி அமெரிக்க நாட்டுத் தலைவராகப் பதவி ஏற்றபோது பேசிய சொற்பொழிவின் துவக்கத்திலேயே குறிப்பிடுகிறார்.

"...unwilling to witness or permit the slow undoing of those human rights to which this nation has always been committed and to which we are committed to day at home and around the world."

## தேசீய ஒருமைப்பாடு

அடுத்தார் போல ஆங்கிலருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்திய நாட்டைப் பற்றி எண்ணுகிறார் கவிஞர். இந்தியநாடு சுதந்திரம் பெறத் தடைக் கற்களாக நிற்பன எவை என்று சிந்திக்கிறார். கவிஞர் பகுத்தறிவு வாதி. ஒரு நாட்டின் விடுதலையைப் பற்றி அரசியல் வாதி ஒரு மாதிரி எண்ணுகிறான். பகுத்தறிவுவாதி வேறுமாதிரியாக எண்ணுகிறான். அரசியல் வாதி புண்ணுக்கு மேற்பூச்சுப் பூசுபவன்; ஆனால் பகுத்தறிவு வாதியோ அப்புண் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும் நச்சுக் கிருமிகளைக் குருதியிலேயே அழிப்பவன். இந்திய சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் மடமையும், ஏமாற்றும் அவர் கண்முன் அணிவகுத்து நிற்கின்றன. அவைகளை அழித்தாலன்றி இந்திய சமுதாயம் விடுதலை பெறுவது கடினம் என்று எண்ணுகிறார். அவர் உள்ளத்தில் அழகான கற்பனையொன்று உருப்பெறுகிறது.

ஆங்கில மக்கள் பேசும் பேச்சு குப்பன், வஞ்சி ஆகிய இருவரின் காதிலும் விழுகின்றது. இந்திய மக்கள் நெல்லிக்காய்க் குவியல் போன்றவர்கள் அவர்கள் ஒன்றுபட்டு வாழமுடியாதவாறு அவர்கள் சமுதாய அமைப்பே அமைந்து கிடக்கிறது என்று ஆங்கில மக்கள் பேசிக் கொள்கிறார்களாம்.

"வாழ்கின்றார் முப்பத்து
முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும்
அந்தத் தொகையிருக்கும்
ஆகையால் எல்லோரும்
அங்கே தனித்தனிதான்!
ஏகமனதாகி அவர் நம்மை
எதிர்ப்பதெங்கே?
பேதம் வளர்க்கப்
பெரும்பெரும் புராணங்கள்!
சாதிச் சண்டை வளர்க்கத்
தக்க இதிகாசங்கள்!"

இவை யாவும் பிரித்து வைக்கும் சக்திகள். இவை போதாவென்று ஏமாற்றுச் சக்திகள் வேறு இந்திய சமுதாயத்தைச் சுரண்டுகின்றனவாம். யார் அந்த ஏமாற்றுக்காரர்கள்?

"கட்டிச் சமூகத்தின்
கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி யளக்கும்
குருக்கள் கணக்கற்றார்
தேன்சுரக்கப் பேசி இந்து
தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த
பூசுரரும் வாழ்கின்றார்."

இந்த ஏமாற்றுச் சக்திகள் போதா வென்று பகுத்தறிவைப் பாழடித்து மக்களை மடையர்களாக்கும் கடவுள்களும் இந்திய சமுதாயத்தில் மலிந்திருக்கின்றனவாம்.

"சிந்தனைசக்தி சிறிதுமின்றி
மக்களுக்குத்
தம்தோள் உழைப்பிலே
நம்பிக்கை தானுமின்றி
ஊறும் பகுத்தறிவை
இல்லாதொழித்துவிட்டுச்
சாரற்ற சக்கையாய்ச்
சத்துடம்பைக் குன்றவைத்துப்
பொற்புள்ள மாந்தர்களைக்
கல்லாக்கியே அந்தக்
கற்கள் கடவுள்களாய்க்
காணப்படும் அங்கே!"

இக் கடவுள்களுக்குத் துணையாக வேதாந்தமும் சேர்ந்து கொண்டு மக்களைத் தன்னம்பிக்கை யற்றவர்களாக ஆக்குகின்றன.

"தேகம் அழிந்துவிடும்;
சுற்றத்தார் செத்திடுவார்
போகங்கள் வேண்டாம்; பொருள்
வேண்டாம் மற்றுமிந்தப்

பாழுலகம் பொய்யே; பரமபதம்
போ என்னும்
தாழ்வகற்ற எண்ணுங்கால்
சாக்குருவி வேதாந்தம்.

"இந்திய மக்கள் சுதந்தரம் பெற இத்தனைத் தடைக்கற்கள் நிற்கின்றன, இந்த நிலையில் சுதந்தரப் போரெங்கே? கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்பதெங்கே? இந்த உளைச் சேற்றை, ஏருத ஆழத்தை எந்த விதம் நீங்கி நம்மை எதிர்ப்பார்?" என்று ஆங்கில நாட்டார் மகிழ்ச்சியோடு பேசிக் கொள்கிறார்களாம். எப்படி, கவிஞரின் கற்பனை? மேற்கூறியவற்ருல் கவிஞரின் ஆழ்ந்த நாட்டுப்பற்று விளங்கும்.

சில அறிஞர்கள் குறைகளை மட்டும் கூறுவதோடு சரி. ஆக்க வேலைக்கு ஒன்றும் அறிவுரை கூறமாட்டார்கள். ஆனல் கவிஞர் இந்திய நாடு விடுதலை பெறச் சிறந்தவழியை ஆங்கிலேயரின் கூற்ருகவே வெளியிடுகிருர்.

"சாதிப் பிரிவுகளும்
சமயப் பிரிவுகளும்
நீதிப் பிழைகள் நியமப்
பிழைகளும்
மூடப்பழக்கங்கள் எல்லாம்
முயற்சி செய்தே
ஓடச்செய்தால் நமையும்
ஓடச்செய்வார்"

என்று ஆங்கிலேயர்களே ஒத்துக் கொள்கிருர்கள். கவிஞர் நோய் நாடி, நோய் முதல் நாடி, அதற் கேற்ற மருத்துவமும் கூறி விட்டார்.

ஆங்கிலேயரின் பேச்சைக் கேட்ட குப்பன் மிகவும் வருந்துகிருன். இந்திய மக்களின் நிலையை எண்ணி உள்ளம் நைந்து செயலற்று நிற்கிருன். குளிர்ந்த மலர் ஒன்று அவன் தோளில் விழுந்தாற்போல இருந்தது. மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். வஞ்சியின் பிஞ்சுக்கரம் அவன் தோளைத் தொட்டுக் கொண்டிருந்தது. இருவரும் ஆவலோடு ஒருவரையொருவர் நெருங்கினர். அம்போது 'ஐயையோ' என்ற பேரொலி கேட்டது. இருவரும் திடுக்கிட்டனர்.

(வளரும்)

---

"பிறர் எழுதியுள்ள நூல்களைக் கொண்டு உங்களைத் திருத்திக் கொள்வதில் நேரத்தைச் செலவிடுங்கள்; பிறர் வருந்தி உழைத்ததைக் கொண்டு நீங்கள் சுலுவாகப் பெறக்கூடிய பயன் இது."

—சாக்ரட்டீஸ்

"சொற்கள் என்பவை நம் சிந்தனைகளின் உடைகள். அவைகளைக் கந்தல்களாகவும், கிழிசலாகவும், அழுக்காகவும் உடுத்திக் காட்டக் கூடாது."

—லார்டு செஸ்டர்ஃபீல்டு

சோ. இலட்சுமிரதன் பாரதி, எம்.ஏ., பி.எல்.

# பிகுவும் பிணக்கும் போரும்

## (Tension, Coldwar and War)

*[உலகில் சமுதாயப் பிணக்கும், நிற-மத-சாதி-வெறியும், சச்சரவும், போரும் இல்லாத இடமில்லை. திடீர் திடீரென்று இந்த மனித (விலங்கு) உணர்ச்சி எரிமலை போலக் கொந்தளித்துக் கிளம்புகிறது. இதன் காரணமென்ன? இதைத் தவிர்ப்பது எப்படி?—என்பதை ஆதாரங்களுடன் ஆராய்கிறார் கட்டுரையாளர்.]*

இங்கிலாந்து தேசத்தில், போர்ன்மவுத், பிரைட்டன், மார்கேட் போன்ற பட்டினங்களில், தனித்தனிக் குழுவினராகப் பிரிந்த 'மாட்சுகள்' (Moderns-நவீனர்கள்—மாடுகள் அல்ல,) இராக்கர்கள் (Rockers—இராக்கதர்கள் அல்ல) என்ற இரு தரப்பு இளைஞர்களுக்கு மிடையே அடிதடிக் கலகங்கள் நடந்த செய்திகளை அண்மையில் படித்தோம். அதனால் அநேகர் ஆஸ்பத்திரிகளுக்கும், இருநூறுக்கு மேற்பட்டவர்கள் சிறைச்சாலைகளுக்கும் அனுப்பப்பட்டனர். அநேக லட்சம் பவுன் விலையுள்ள பொருள் சேத மேற்பட்டது. விடுதலை நாட்களை உல்லாசமாகக் கழிக்க வந்தவர்கள் அலக்கழிவுக்கு ஆளானார்கள். நிதானத்திற்கும் நாகரிகத்திற்கும் பெயர் வாங்கிய ஆங்கிலேயர்களுக்கு இது ஒரு வெட்கக்கேடு. அதிர்ச்சியுமாகும்.

முதலில் கிளாக்டன் என்ற இடத்தில் 'இராக்கர்கள்' மாட்சுகளைத் தாக்கினார்கள். பதிலுக்கு 'மாட்சுகள்,' 'இராக்கர்களை'த் தாக்கினார்களாம். இவர்களுக்குள் இருக்கும் வேறுபாடுகள் என்ன? முன் பக்கம் முனைப்பான கால் மிதிகளையும், பளபளப்பான ஆடைகளையும் அணிந்து 'மாட்சுகள்' ஸ்கூட்டரில் செல்வார்களாம். 'இராக்கர்கள்' மோட்டார் கைகிளில் சவாரி செய்வார்களாம். மேலும் இவர்கள் அசைந்தாடும் ராக்-அன்-ரோல் ஆட்டப் பிரியர்கள். அதனால் இவர்களுக்குள் பிணக்கும் கலகமும் விளைவானேன்? அதுதான் புரியாத புதிர். இதைத் தெளிவதற்காக, 'உள்ள நூல்', 'சமூகவியல்' வல்லுநர்களை வரவழைக்கவேண்டுமென்கிறது, ஒரு தினசரிப் பத்திரிகை.

கலாம் விளைவிக்கும் அவர்களது அமைதியின்மைக்குக் காரணம், அவர்களுக்கு வாழ்க்கையில் சுவையற்றுப் போனதுதான், என்பது சில இளைஞர்களின் கருத்தாம், பணவசதி, பள்ளிகளில், கண்டிப்பின்மை, மனக்கசப்பு, அதிகப்படியான சுதந்திரம் - இவைபோல்வனவும், பிறவும் காரணங்களாகக் குறிக்

கப்படுகின்றன. தொழிற் கட்சியினர், தங்கள் நாட்டின் வீட்டு வசதி நெருக்கடியைக் காட்டுகிறார்களாம்.

அரசியல் பிரமுகர்களுக்கிடையே விளைவித்த 'புரோபுயுமோ' களங்கம் சில காலத்திற்கு முன்தான் நிகழ்ந்தது. வரையின் மகளிரால் கிளம்பிய அலங்கோல நடத்தைகள் அவை.

இன்னும் சமீபத்தில் 'பெரு' (Peru) எனும் நாட்டில் வீறுகொண்டெழும் இளமையுணர்ச்சிகளை (Youthful aggressive impulses) நல்வழிப்படுத்தும் பந்தயப் போட்டி கூடக் குழப்பமும் கலக்கமும் சேதமும் விளைந்ததைப் படித்தோம்.

## இந்தியாவில்

நமது நாடு மட்டும் என்ன? விலக்கா? மாணவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் நடந்துகொள்ளும் செய்திகளைப் பற்றிப் படித்தும் பேசிக்கொண்டும் இருக்கிறோம் காரணங்களையும் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறோம். எனினும் அவற்றை இன்னும் அறவே களைந்துவிட முடியவில்லை.

முஸ்லீம்—இந்து கலவரங்கள்; உயிர்கள் - பொருள்கள் சேதம்; மிருகத்தனமான நடத்தைகள்; மக்களின் குடி பெயர்ந்த வெளியேற்றம்; ஆகிய கொடிய நிகழ்ச்சிகள் பாகிஸ்தானத்திலும் இந்தியாவிலும் மீண்டும் தலைதூக்கச் சீறியெழுவதைப் பார்க்கிறோம்.

காச்மீரத்தில் முகம்மது நபியின் முடிமயிர் காணாமற் போயிற்று; திரும்பவும் மீட்கப் பெற்றது! இதற்கிடையில் அங்கு எழுந்தது முஸ்லீம்களின் கூக்குரல்; ஆனால் கலகமில்லை. அதற்காகப் பாகிஸ்தானத்தில் முஸ்லீம்களின் வெறிக்கு இந்துக்களும் கிறித்தவர்களும் பலி. பழிக்குப் பழி வாங்கினர் இந்தியாவில் இந்துக்கள். "தென்னை மரத்தில் தேள் கொட்டியதாம், தெருத் திண்ணையிலிருந்தவனுக்கு நெரிகட்டியதாம்," என்ற கதைபோல் இருக்கிறது. இரு அரசுகளுக்கும் இக்கலகங்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒன்றையொன்று குறை கூறித் தாக்குகிறது.

இதெல்லாம் வடநாட்டில் நெடுங்காலமாக ஏற்பட்டுள்ள முஸ்லீம்-இந்துக்களின் (மிலேச்சர்-காபிர்) சரித்திர காலப்பகை எனத் தென்னாட்டவர் உதறித் தள்ளலாம். ஆனால் தமிழ் நாட்டிலும் நடந்த முஸ்லீம்-இந்து கலவரங்களை (தெருக்களில் முஸ்லீம் மசூதிகளை எழுப்புவதும்-தொழுகை நேரத்தில் மேள தாள ஊர்வலங்களைத் தடுத்து நிறுத்தித் தாக்குவதும் போன்றவை) மறந்துவிட முடியுமா?

இராமநாதபுரம் மாவட்டத்தில் (முதுகுளத்தூர் பகுதியில் காலஞ் சென்ற திரு. முத்துராமலிங்கத் தேவர் தொகுதியில்) மறவர்களுக்கும் தீண்டாதவர்களுக்கும் நடந்த கலகங்களையும் மிருகத்தனமான நடத்தைகளையும் என்னென்று சொல்வது? குடியிருப்புகளுக்குத் தீவைத்து அவற்றில் சிசுக்களையும் தூக்கி எறியவில்லையா? மறவர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்ற உணர்ச்சி அக்கலகங்களுக்குக் காரணமென்பர். அடிமைகள் போல் தங்கள் ஆளுகையிலிருந்த "கீழ்ச்சாதி" மக்கள், சமூகம், பொருளாதார அரசியல் காரியங்களில் தங்களுடன் சரிநிகர் சமானமாக வாழுங் குடி-உரிமை பெற்றுவிட்டா என்று மறவர் பொங்கி எழுந்தனர். அவர்களிடம் செல்வாக்குள்ள, முன்னேற்றக் குழுக்கட்சி

(Forward Block)த் தலைவருக்கு இப்பிற்போக்கைத் தடுத்து ஆள முடியாமற் போய்விட்டது. இதுவும் ஒரு திடீர் நிகழ்ச்சியல்ல.

## என் அநுபவம்

நான் அந்த மாவட்டத்தில் கள்ளர் நாட்டு (நகரத்தார்கள் செட்டி நாடு என்ற)த் தேவகோட்டையில் பதினொன்கு ஆண்டுகள் (1930-1944) வழக்கறிஞனாக இருந்தேன். புலியூருக்குப் பயந்து எலியூருக்குப் போவதாகச் சொல்வார்கள். ஆனால் எனது தந்தை என்னை, வழக்கறிஞர்கள் சங்கத் தண்ணீர்ப் பானைச் சண்டையினால் மதுரையில் அப்பொழுதிருந்த நீதி மன்றப் பிராமணக் கோட்டையிலிருந்து தப்ப தேவகோட்டைக்கு அனுப்பினார். அது புலியூரில் இருந்து பேயூருக்குப் போனது போலாயிற்று! அது மதுரையை விட இன்னும் அதிகமாக இறுகிப்போன பிராமணக் கோட்டை. நானும் மற்றொரு மலையாளக் கிறித்தவரும்தான் அங்கு பிராமணரல்லாத வழக்கறிஞர்கள். தண்ணீர்ப் பானைச் சண்டையுடன் அங்கு நாட்டார்கள் (கள்ளர்கள்)-தீண்டாதவர்கள் சண்டைகளிலும் கலந்து கொள்ள வேண்டியதாயிற்று. இரு சமூகங்களிடையேயும் நல்லுறவுகளை வளர்ப்பது ஒரு பெரிய பிரச்னையாயிற்று. திரு. இராமச்சந்திரன் விருப்பப்படியும் காந்தி அடிகளின் விருப்பப்படியும் இப்பிரச்னை காரணமாகவே அப்பகுதி ஹரிஜன சேவா சங்கச் செயலாளராகப் பணிபுரிந்தேன். அதனால் அநேக தொல்லைகளுக்கு ஆளானேன். சில சமயங்களில் கட்டுக் கதையை விட உண்மை விந்தையாக இருக்கும்.

1931-ம் ஆண்டில் கள்ளர்கள் செய்த கட்டுப்பாடுகள் அத்தகையன:ஆதி திராவிடர்களும் (பறையர்களும்) தேவேந்திர குல வேளாளர்களும் (பள்ளர்கள்) தங்கள் முழங்காலுக்குக் கீழும் இடுப்பிற்கு மேலும் ஆடைகள் உடுத்தக் கூடாது. தங்க நகைகள் அணியக்கூடாது. தண்ணீர் எடுப்பதற்கு மண் பாண்டங்களையும், மொள்ளுவதற்கு ஓலைப் பெட்டிகளையுமே உபயோகிக்க வேண்டும். படிப்பதோ, பள்ளிகளோ அவர்களுக்கு விலக்கு. குழந்தைகள் அவர்களுடைய ஆடுமாடுகளை மேய்க்கவேண்டும். பண்ணைகளில் அவர்கள் அடிமைகள்போல உழைக்க வேண்டும். காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை. கூலி ஆண்களுக்கு 4 அணா; பெண்களுக்கு 2 அணா. சொந்தமாகவோ, வாரத்திற்கோ பயிர் செய்யக்கூடாது. எனவே சொந்த நிலங்களை விற்றுவிட வேண்டும். அவர்களுடைய விசேஷங்களில் மேளதாளங்கள் கூடாது குதிரைகள் வண்டிகள், பல்லக்குகளும் அவர்களுக்கு விலக்கு. ஓலை வேய்ந்த கூரை வீடுகளில்தான் குடியிருக்க வேண்டும். நாட்டார்கள் பிரேத ஊர்வலங்களில் ஹரிஜனப் பெண்கள் அரை நிர்வாணமாக மாரடித்துக் கொண்டு செல்ல வேண்டும். (அத்தகைய காட்சியொன்றை அவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள வந்திருந்த மாநில ஹரிஜன் சேவா சங்கத் தலைவரும் ஓய்வு பெற்ற ஹைகோர்ட்டு நீதிபதியுமான பாஷ்ய மய்யங்காரும், சட்ட சபை உறுப்பினரான எம். சி. ராஜாவும் பார்த்தனர்).

இலங்கை, மலேயா போன்ற அயல் நாடுகளில் உழைத்துச் சிறிது மிச்சக் காசுடன் திரும்பிய சில தீண்டாத வகுப்பு இளைஞர்

கள் எழுவங்கோட்டை, கண்டதேவி முதலிய ஊர்த் தேர்த் திருவிழாக்களில் சண்டை போட்டுக் கொண்டு வந்துவிட்டால் அடிதடிக்குள்ளாவார்கள். அவர்கள் சேரிகளும் சூறையாடப்படும். போலீசும் தலையிடுவதற்குப்பயம். "நாடுவைத்த கோடா (கோர்டு—Court—நீதிமன்றம்) கோடு வைத்த நாடா?" என்பார்கள். அப்பொழுது சிவகெங்கையில் சர்க்கார் வக்கீலாக இருந்த காலஞ் சென்ற நண்பர் இராமச்சந்திரன் சேர்வை ஒரு மகா நாட்டில், "உண்மையில் இங்கு சுயராஜ்யம்தான் நடைபெறுகிறது. பிரிட்டிஷ் ஆட்சி இல்லை" என்று கூறினார். குத்தூசி ஆசிரியர் குருசாமியும், அவரது துணைவி குஞ்சிதம் அம்மையாரும் வந்து பேசிய சுயமரியாதை மகாநாடு திருப்பத்தூரில் கொட்டகைக்குள் நடப்பினும் தடைவிதிக்க பார்ப்பன போலீசு அதிகாரி மூலம் முயற்சிக்கப்பட்டது. துடிப்பும் இளமையும் உள்ள ஒரு இந்தியன் சிவில் சர்வீசு சப் கலெக்டர் இந்த நிலைமைகளை என்னிடம் கேட்டபொழுது அவற்றை நம்பவில்லை. "கேரளத்தில் கீழ்ச்சாதிப் பெண்கள் இரவிக்கையோ சட்டையோ போடக்கூடாதென்று கட்டுப்பாடு பண்ணியதைத் தளர்த்திப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று சென்ற நூற்றுண்டில் விக்டோரியா மகாராணி, மன்னருக்கு எழுதியதைக் குறிப்பிட்டு, 20-ம் நூற்றுண்டில் தான் அதிகாரம் வகிக்கும் பிரிட்டிஷ் ஆட்சியில் இந்த அநீதிகளை அநுமதிக்க முடியாதென்று" வீராப்புடன் கூறினார். ஆனல் அவரே, இரண்டு ஆண்டுகள் கழித்து மாறிப்போகும் பொழுது, இத்தகைய சாதிக் கொடுமைகளை மெள்ள, மெள்ளத்தான் போக்கிலாமெனத் தெரிந்து கொண்டதாகக் கூறினார். எனவே பல ஆண்டுகளுக்குப் பின் முதுகுளத்தூர்ப் பகுதியில் நடந்த கொடுமைகளை அடக்கிச் சமாளிப்பதில் திரு. காமராசர் ஆட்சிக்கு இருந்த சிரமங்களை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

> **சோவியத் நாடு**
>
> "பிற உலக நாடுகள் ஒரு தேக்கத்தில் சிக்கிக்கொண்டு தவிக்கும்போது, சில சங்கதிகளில் பின்னேக்கியும் சென்று கொண்டிருக்கும்போது, சோவியத் நாட்டில் நம் கண்முன்னே புதியதோர் உலகம் உருவாக்கப்பட்டு வருவதைக் காண்கிறேம். லெனினது பாதையில் செல்லும் ரஷ்யா எதிர் காலத்தை நோக்கியே தன் பார்வையைச் செலுத்துகிறது. ஆனல் பிற நாடுகளோ, செத்து மடிந்த கடந்த காலத்தின் மரத்துப்போன பிடியில் சிக்கி, உதவாக்கரைப் பழங்காலத்தின் மிச்ச சொச்சங்களை முரட்டுப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதிலேயே தங்கள் சக்தி முழுவதையும் செலவிடுகின்றன. குறிப்பாக, மிகப்பின் தங்கிய மத்திய ஆசியப் பகுதி சோவியத் ஆட்சியின் கீழ் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. சீர் தூக்கிப் பார்த்தால், நான் ரஷ்யாவுக்கே ஆதரவானவன். இருண்ட உலகில், ஒளியும் உற்சாகமும் தரும் ஒரே நிகழ்ச்சி, சோவியத் ஆட்சி."
>
> (நேரு: சுயசரிதை.)

## வலங்கை-இடங்கை

மற்றும் தென்னட்டில் (கன்னடம், ஆந்திரம் உள்பட) நிகழ்ந்த

'வலங்கை', 'இடங்கை' சாதிச் சண்டைகளைப்பற்றி என்ன சொல்வது ? அதுவும் இன்னும் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருக்கிறது. இருதரப்புகளிலும் அடங்கிய சாதிகளைக் கணக்குப் பண்ணுவதில் கூட குழப்பம்தான். பயிரிடும் சாதிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் வலங்கையினர் என்றும், (Cultivating Castes-பள்ளர்கள் தவிர) கருவினைஞர்களும் (விசுவகர்மாக்கள் போல) அவர்களைச் சார்ந்தவர்களும் இடங்கையினர் என்றும் சிலர் கருதுவர். ஊருக்குள்ளே, குதிரை, — சாரட்டு (Chariots drawn by horse) வண்டி, பல்லக்கு போன்றவற்றை பண்டிகைகளில் உபயோகிப்பது, தெருக்களில் செருப்புப் போட்டு நடத்தல், குடை பிடித்தல், ஆகியன இத்தகைய கலகங்கள் நடப்பதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டன. ஆனால் ஆயிரக்கணக்கான சாதிகளுள் 'வலங்கை' 'இடங்கை'ப் பிரிவுகள் எப்படி ஏற்பட்டன என்பது விளங்கவில்லை. ஜே. ஸி. ஹட்டன் தன்னுடைய நூலான "இந்தியாவில் சாதிகள்" (Castes in India) என்பதில், இக்கலகங்கள் மறுமக்கதாய முறை (matriarchy) வழக்கில் உள்ள சேரநாட்டில் கிடையாது; ஆகையால் அம்முறைமக்கட்தாய முறை (Patiarchy) ஆக மாறியதினால் ஏற்பட்ட கட்சிப் பிரிவுகளாக இருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார். இக்கட்சிப்பிரிவுகளில், பிராமணர்கள், கிறித்தவர்கள், முஸ்லீம்கள் விலகி இருப்பர். ஆரியர்களை தங்களுடைய நாதிகள் (Agnates) வழக்கான மக்கட்தாய், தந்தையர் ஆதிக்கவரன் முறையை (Patriarchy) வலியுறுத்தியவர்கள். எனவே சிலர், ஆரிய மறையோர்கள் தென்னாட்டில் புகுந்து தங்கள் பிராமணீய (இந்து) சமூக சாதி ஒழுங்கு முறைகளைப் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்தபொழுது, அம்முறைகளுக்கு இணங்கி வராத சிறுபான்மைச் சாதிகளை 'இடங்கை'யினராகப் பிரித்து, அவமதித்து, அவர்களுக்கு இத்தகைய உரிமைகளை மறுத்து, இத்தகைய கட்சிப் பிரிவுகளும், கலகங்களும் விளைந்ததாகக் கூறுவர். காமன் பண்டிகைகளில் 'எரிந்த கட்சி', எரியாத கட்சி'ச் சண்டைகள் எத்தனை ? கோவில் விழாக்களில்கூட, பரிவட்டங் கட்டுதல் முதல், மரியாதைகள் பெறுவதில், யாருக்கு முதல் என்று எத்தனை கட்சிச் சண்டைகள் ?

'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக்கொண்டாட்டம்' என்ற தன்மையில் வெளியில் இருந்து வந்த மறையோர்கள், மகம்மதியர்கள், ஆங்கிலேயர்கள் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தன்னலங் கருதி, கிளரித் தூண்டியும் விடலாம்.

இவற்றை எல்லாம் எண்ணும்பொழுது, மண்ணுலகில் விஞ்ஞானத்தையும் செய் நேர்த்தித்திறமையையும், அதிசயிக்கத்தக்க ஆற்றல்களையும் வளர்த்த பகுத்தறிவைப் பற்றிப் பெருமையடைவதினும், மனிதன் தோன்றிப் பல லட்சக்கணக்கான ஆண்டுகள் கழிந்தும், ஒப்புரவும், பண்புமின்றி அடித்துக்கொண்டு சாகும்படி விட்டுவைக்கும் பகுத்தறிவின்மையைப் பார்த்துத்தான் நாம் ஆச்சரியப்படவேண்டும்.

படிப்பும் கல்வியும் பரவி விட்டால், இத்தகைய பிணக்குகளும் போராட்டங்களும் நீங்குமென்பர் சிலர். நாடுகளுக்கிடையே பெரும் போர்கள் நிகழ்வதற்குக் காரணமாக இருப்பவர்கள்

படித்த தலைவர்களே. கல்வி மட்டும் அறிவையும் மக்கட் பண்பையும் அளித்துவிடும் என்று சொல்வதற்கில்லை. ஒரு மதம்—பைத்தியம்—வெறி நீங்க, அதனிடத்தில் மற்றொரு மதம்—பைத்தியம்—வெறி குடி ஏறுவதையே—டும் டும்—கதையைப் போல, வரலாறு நமக்கு நெடுகிலும் காட்டுகிறது.

சண்டை சச்சரவுகளையும் கலகங்களையும் அகற்றி மக்களிடையே அமைதியை நிலைநாட்டப் பலமுள்ள காவல் அரசுகளை நிறுவுகிறோம். ஆனால் அவைகள் மக்கள் பேரால் பெரும் போர்களுக்கும், உலகத்தையே அழிக்கவல்ல அணுகுண்டுகளுக்கும் ஆதாரமாகின்றன. உலக மக்கள் அவற்றிலெல்லாம் மிக்கதொரு உலக அரசை (world state) நிறுவ வேண்டுமென்கிறோம். கொக்குத் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கிற கதைபோல் இருக்கிறது. அதற்கு வேண்டிய சம்மதத்தை—உலக உள்ளத்தை, எப்படி உண்டு பண்ணுவது? அரசுகள் நிலவும் நாடுகளில் தானே நாம் மேற்சொன்ன கலகங்கள் நடக்கின்றன? பகையால் பகையை வெல்ல முடியுமா? பலாத்காரம் மக்கட் பண்பை வளர்க்குமா? ஒவ்வொருவர் வீட்டிலும் ஒவ்வொரு போலீஸ்காரரை வைக்க முடியுமா?

"கடவுளே! என்னை என் நண்பனிடம் இருந்து காப்பாற்று" என்று கதறுவதுபோல், மக்கள் "வேலியே பயிரைத் தின்னும்" அரசாங்கங்களிடம் இருந்து தங்களின் இன்றியமையாத உரிமைச் சாசனங்களைப் பெற எத்தனையோ போராட்டங்களை நடத்தியதை வரலாறு காட்டவில்லையா? "இதோ பூச்சாண்டி!" "அதோ சீனாக்காரன்" என்று நெருக்கடிகளைக் காட்டி மக்களுடைய அடிப்படை உரிமைகளை அரசாங்கங்கள் விழுங்கி ஏப்பமிடுவதில்லையா?; 'கணமேயும் அசவாது காப்பதே நாம் சுதந்திரத்திற்குக்கொடுக்கின்ற விலை' என்பது பொய்யா மொழியன்றோ?

## தேசீய ஒருமைப்பாடு

இந்தியாவில் உள்ள பல தேசீய மொழிகளில் ஒன்றான 'இந்தியை' நாட்டு மக்கள் அனைவர்க்கும் அரசியல் பொதுமொழியாக்கினால்தான் ஒருமைப்பாட்டை (Integration) வளர்க்க முடியுமெனக் கருதும் காங்கிரஸ் ஆட்சித் தலைவர்களின் போக்கு எவ்வளவு பிணக்குகளை உண்டு பண்ணி வருகிறது? இந்தியாவில் சிலர் 'இந்தி'-'இந்து'-'இந்துஸ்தான்' ஆகிய மூன்றும் ஒரு பொருட் சொல்லாகக் கருதுகின்றனர். கூட்டு அரசையோ, தேசீய ஒற்றுமையையோ குலைப்பதற்கு அவரினும் கொடியவர்கள் யாரும் இருக்க முடியாது. பம்பாய் சர்வகலாசாலை 'உள்ளவியல்' பேராசிரியர் திரு. நிரோட் முகர்ஜி எழுதிய "பிரிவுப் பாதைகளின் சந்திப்பில் நிற்றல்" (Standing at the Cross Roads) என்ற நூல் இவ்வாண்டில் வெளிவந்துள்ளது. அதில் இப்பிரச்னையைத் தீர ஆராய்ந்திருக்கிறார். 'இந்தியா'; 'இந்தியன்' என்ற சொற்கள் நமது நாட்டை அறியாத அயலார் வாயிலாகக் கிடைத்த சொற்கள். வெள்ளையர் ஆட்சியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில், உரிமைகளற்ற குடிகள் எல்லா இந்தியரும் இந்தப் பொதுமையைத் தவிர்த்து, மதத்தைக் கொண்டோ, மொழியைக் கொண்டோ, மற்ற எந்தக்

கலாச்சாரப் பண்பாடுகளைக் கொண்டோர் அவர்களை—'இந்தியன்" என்று சொல்வதற்கு, எந்தவிதமான ஒருமைப்பாடும் இருந்ததில்லை. சுதந்திரம் பாகிஸ்தான் மக்களைப் பிரித்து விட்டது. இன்று குறிப்பிட்ட எல்லைகளையுடைய 'இந்தியா' அல்லது 'பாரதம்' என்னும் நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் (The people of India) ஒரே அரசில் வாழும் உரிமைக் குடிகள் (Citizens). இது ஒன்றுதான் ஒருமைப்பாடு. (Politics-legal integration) மதம், மொழி கலாச்சாரப்பண்புகள் விஷயத்தில் ஒருமைப்பாட்டை வலிந்து புகுத்த முயன்றால் இதுவும் போய்விடக் கூடிய ஆபத்துத்தான் இருக்கிறது. இதை அறிந்தே மொழிவாரி அரசுகள் ஏற்பட்டன. அவ்வரசுகளிலும், அந்தந்த மொழிக் கலாசாரப் பண்புகளிலும் பற்றும் ஆர்வமும்காட்டுவது குற்றமல்ல; பெருமைப்பட வேண்டிய காரியம். இக்கருத்துக்களை விளக்கி வலியுறுத்தி இருக்கிறார்.

மக்கள் வாழ்க்கையில் செயல்களுக்கு அடிப்படையாக இன்னும் பசி, தாகம், காமம், தாய்மை, பயம், வீரம் போன்ற இயல்புணர்ச்சிகளும், வேட்கைகளும் (Instincts and Impulses) இருப்பதுடன் அவர்களை ஏவிச் செலுத்தும் ஆற்றல்களாகவும் (Powerful Drives) இருந்து வருகின்றன. அவற்றை மனத்தின் அடித்தளத்திற்கு அடித்து விரட்டிச் சிறைப்படுத்தினாலும், வெளியில் திருப்தி செய்யும் வழிகளை யெல்லாம் அடைத்து மூடினாலும், கசிந்துருகும் அன்பும், ஒப்புரவும், ஒத்துழைப்பும் ஏற்படுவதற்குப் பதிலாக, காய்ந்து, உலர்ந்து இறுகும் பிணக்குகளும் பிணக்குகளும் போராட்டங்களுமே உண்டாகின்றன.

தேவைகளையும் அவற்றைப் பூர்த்தி செய்யும் பற்றுக்களையும் முற்றத்துறந்து, முனிந்து அழித்துவிட வேண்டுமென்பது முடியாத தொன்று, விரும்பத் தக்கதுமன்று, என்பது ஒருதலை. அவற்றின் தீய விளைவுகளுக்கு ஆதாரமாகும் வெறிகளை அடக்கி ஆளுவதே அறிவுடைமையும் இன்பம் பயப்பதுமாகும். உன்னுடைய கண்களும், காதுகளும், பொறிகளும் தீய பயத்தலால் அவற்றை வெட்டி எறிந்துவிடு, என்பது ஓர் அறிவுரை. சைனமும்; புத்தமும், கிறித்தவமும் அவ்வழியிற் சென்று அழிந்தன; அன்றிப் பொய்களுக்கும் பித்தலாட்டங்களுக்கும் வழிகோலி முற்றிலும் மாறுதலடைந்தன. இவ்வுணர்ச்சிகளைப் பயனளிக்கும் வாய்க்கால்களில் செலுத்தாமல் முற்றிலும் அடைத்து அணை போடுவது அழிவையே உண்டு பண்ணும்.

"கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, ஊற்றியும் ஐம்புலன்" களின் வகை தெரிந்து, இன்புறச் செய்யும் பகுத்தறிவாளன் பக்கமே உலகு ஆகும்.

மக்கட் தொகுதிகளின் பழைய சர்தனங்களான மாயவித்தைகள் (Magic) சமயங்கள் (Religions) இனம் (Race, Tribe) அரசியல் ஒழுங்கு முறைகள் (Political orders) பொருளாதார வகுப்புக்கள் (Economic Classes & guilds) அவற்றிற்காக வகுத்துக் கொண்ட வழக்கங்கள், விதிவிலக்குகள், சட்டங்கள், நிறுவனங்கள் ஆகிய வெல்லாம் இன்றைய வளர்ச்சியில் ஏற்படும் இன்னல்களைத் தவிர்ப்பதற்குப் போதாதனவாகிவிட்டதைப் பார்க்கிறோம். அவர்களுடைய பொருளாதார, விஞ்ஞான வளர்ச்சியும் குவியல் முறை வாழ்க்கையும்அவர்களை 'அசமூக

சமூகம்' (Asocial Society) ஆக்கி விட்டதென்று ஆசிரியர் டாக்டர் அலெக்சு கம்பர்ட் (Dr. Alex Combert) தனது நூலான 'சமூகத்தில் பெண் - ஆண் சேர்க்கை நடத்தை (Sexual Behaviour in Society)' என்ற நூலில் விளக்குகிறார். தனி ஆள் ஒருபுறமும், அவனுக்கு அயலாராக மறுபுறம் மக்களும், முரண்பட்டு, போரிடும்வகையில்(Polarisation) உருவாகிறார்கள். தனி ஆள்களின் வேட்கைகளைக் கிளரித் தூண்டி வெறியனுக்கும் போட்டிகள் ஒரு புறமும், அவற்றைத் திருப்தி செய்யும் வழிகளை அடைப்பது மறுபுறமும் ஆன நிலைகள் வளர்கின்றன. எனவே பிசுவும், பிணக்கும், போராட்டமும், நினையாத இடங்களிலெல்லாம் தோன்றி முன்வந்து நிற்கின்றன.

## மாற்றும் வழி?

இதற்கு மாற்று உண்டா? மனத்தை வண்ணான் துறையில் வெளுக்கும் மாற்றில்லை. ஆனால் சிறிய குடும்பங்களும், நேர்க்கு நேர் பழகும் புதிய வகைச் சிறு சமுதாயங்களும் நல்ல சமூகச் சூழ்நிலையில் ஏற்பட வேண்டும். அதுவே அசமூக சமூகத்தை, சமூகப்பான்மையுடைய சமூகமாக்குவதற்கு வழி. தொட்டில் முதல் சுடுகாடுவரை ஒவ்வொருவருடைய இயல்புணர்ச்சிகளும் நல்லாற்றால் திருப்தியும் இன்பமும் பெறுவதற்கான பயிற்சியளிக்கும் பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் நிறுவனங்களும் உண்டு பண்ணப் பகுத்தறிவைப் பயன் படுத்த வேண்டும். இயல்புணர்ச்சிகளால் ஏவப்படும் மக்கள் விலங்குகளைப் போல் அவற்றின் பால் விரையாது, நின்று, நினைத்து, சிந்தித்து, எண்ணித் துணிந்து செயலாற்றப் பழக்குவதே பகுத்தறிவாகும். ஃப்ருட் (Freud) முதலிய உள்ளவியல் ஆராய்ச்சியாளரும், சமூகவியல் வல்லுநரும் கண்ட கருத்துக்கள் இதையே வற்புறுத்துவன. தனக்கு இயலாவிட்டால் பிறரையும் கட்டுப்படுத்தி அடைய வொட்டாது செய்வது மனித இயல்பு. அவ்வகையாகத் தான் அதிகார வெறியர்கள் அரசியல் பதவிகளை நாடிக் கிளம்புகிறார்கள். முஸ்லீம்களும், கிறித்தவர்களும், இந்துக்களும் குரான், பைபிள், வேதங்கள் ஆகியவற்றை முடிந்த கொள்கைகளாகக்கொண்டு, ஏற்காதவர்களை மனமாற்ற வேண்டும், அல்லது அடித்துத் துரத்தவோ, அழிக்கவோ வேண்டும். என்று எண்ணும் வரை பிணக்குகளும் சண்டைகளும் வலுத்துக் கொண்டேதானிருக்கும். அது போலவே ஒவ்வொரு நாடும், ஒரு தனித்த தேசீய இனமாகி (Separately integrated nation) தான் தான் உயரவேண்டும் என்று படைபலத்தை வளர்க்கும்வரை போர்களும் இருந்து கொண்டுதானிருக்கும்.

பொய்யும் பித்தலாட்டங்களும், போலி ஒழுக்கங்களும் நிறைந்து வளரும் "அசமூக சமூகங்கள்" அவற்றில் இருந்து உயர்ந்து, சிறந்த சமூகங்களாக மாற வேண்டும். தனி ஆள்களுடைய சம்மதம், ஒப்புரவு, ஒத்துழைப்பினால் ஒருமைப்பாடு எய்தும் புதியசமூகங்கள் (Para-Primitive Socials' is the name given to them by Dr. Alex Combert) வளர வேண்டும். அதற்காக ஆரம்பத்தில் சிறுசிறு ஆய்வுக் குழாங்களும் (Study Circles) சமுதாயங்களும் ஏற்பட்டு, எத்தகைய இன்னல்களுக்கும் அஞ்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

கோ. இராமச்சந்திரன், எம்., ஏ.

# பல மொழிகளில் தமிழ்ச் சொற்கள்

தென்னிந்திய மொழிகள் பலவும் வட இந்திய மொழிகள் சிலவும் தோன்றுவதற்கு தமிழ் மொழி நிலைக்களமாய் அமைந்தது என்பதை மொழி நூல் வல்லார் இந்த நூற்றுண்டின் துவக்கத்திலிருந்தே தெளிவாகத் தெரிவித்து வந்துள்ளனர். வேறு நாடுகளில் வழங்கப் பெறும் பல மொழிகளுக்கும் தமிழ் மொழி தன்னுடைய சொற்களை வழங்கியுள்ளது. தமிழ் மொழிச் சொற்கள் வேறு பல மொழிகளில் விரவிக் கலப்பதற்கேற்ற வகையில் தமிழர்கள் மிகப் பழங் காலத்திலேயே பிற நாட்டவர்களுடன் வாணிபத் தொடர்பு கொண்டு சிறப்புற வாழ்ந்து வந்தனர். தமிழ் மொழியின் சிறப்பு, தமிழர் கண்ட வாணிப வளம்பற்றிய கருத்துக்களைப் பல்வேறு நூல்களின் வாயிலாக நாம் இன்று தெளிவுடன் அறிந்து கொள்ளுகின்றோம். தமிழ் மொழி மிகப் பழமையுடையதாகவும், தமிழர்கள் கடல் வாணிபஞ் செய்வதில் பண்டைக் காலத்திலேயே சிறந்தவர்களாகவும் இருந்திருந்தாலன்றித் தமிழர்களால் வழங்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் பல மொழிகளிலே கலந்திருக்க வாய்ப்பில்லை; அல்லது வேறு மொழிகளைப் பேசிய மக்கள் தமிழ்ச் சொற்களை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பது உறுதியாகின்றது.

மேல் நாடுகளோடு மாத்திரம் வாணிபத் தொடர்பு கொள்ளாமல் கீழ் நாடுகளோடும் வாணிபத் தொடர்பு கொண்டு தங்களுடைய நாகரிகத்தை அங்கெல்லாம் பரவச் செய்த பெருமை தமிழர்களுக்கு உண்டு. சரித்திரப் பேராசிரியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களும் தமிழ் இலக்கியப் பாடல்கள் தரும் விளக்கங்களும் மேற்கூறிய உண்மையை வலியுறுத்தப் போதுமான சான்றுகளாய் அமைகின்றன. ஒரு இனத்தவருடைய நாகரிகச் சிறப்பை உணர்ந்து கொள்ள அந்த இனத்தவரால்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சாது, அரசியல் ஆணைகளையும் அவசியமானால் மீறி, அறிவையும், பண்பாடுகளையும், உண்மை காணும் வீரத்தையும் மக்களிடையே பரப்பும் பணிகளில் இறங்க வேண்டுமென்று அவர் எழுதுகிறார்.

அமெரிக்காவிலும் மேலை நாடுகளிலும் இன்று 'சமுதாய வளர்ச்சி'(Community Development) போற்றப்படுகிறது. காந்தி அடிகளின் 'அகிம்சை'யும்விநோபாவின், "ஒவ்வொரு முடிவும் சம்பந்தப்பட்ட எல்லோருடைய சம்மதத்தையும் பெறவேண்டுமென்பதும்" இதையே வலியுறுத்துகின்றன. சமீபத்தில் திரு. ஜெயப்பிரகாச நாராயணன் வெளியிட்ட "சமுதாய அரசியல் முறை" (Communitarian Polity) யும் இக்கொள்கையேயாகும்.

வழங்கப்படும் மொழியின் பழமையே துணை செய்யவல்லதாம். இந்தக் கருத்தையே அளவுகோலாகக் கொண்டு பார்த்தாலும் தமிழர்களின் நாகரிகம் பற்றிய உண்மையை மிகத் தெளிவாக நம்மால் தெரிந்து கொள்ள முடிகின்றது. பண்டைக் காலத்தில் வாணிபத் தொடர்பு ஒன்றின் மூலமாகவே பிற நாட்டவர்களுடன் தமிழர்கள் கலந்து பழக வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. வாணிபத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட பிற நாட்டவர்களுடன் தமிழர்கள் பழகிய பொழுது தமிழ் மொழிச் சொற்கள் பல மொழிகளிலும் இடம் பெற—நிலைக்க ஆரம்பித்துவிட்டன. எனவே பலமொழிகளில் காணப்படும் தமிழ் மொழிச் சொற்களின் துணைகொண்டே—பல மொழிகளிலும் தமிழ்மொழிச் சொற்கள் வழங்கப்படும் முறைகளை அடிப்படையாகக் கொண்டே — தமிழ் மொழியின் பழமையையும் தமிழர்களின் நாகரிகத்தையும் மிகத் தெளிவாக இன்று தெரிந்து கொள்ள முடிகின்றது.

## 1. துளு(வம்)

கன்னட நாட்டிற்குத் தெற்கிலிருந்த பழைய நாடான துளுவ நாட்டில் வாழ்ந்த பல இன மக்களும் துளுமொழியையே தாய் மொழியாகக் கொண்டிருந்தனர் என்பதை கால்டுவெல், Jules Bloch, ஞா. தேவநேயப் பாவாணர் போன்றோர்தம் விளக்கங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் கன்னடப் பகுதித் துறைத் தலைவர் பேராசிரியர் எம். எம். பட். அவர்கள் துளுமொழி, துளுவ நாடுபற்றிய விளக்கங்களைக் ''கலைக்களஞ்சியம்'' வாயிலாகத் தெரிவித்துள்ளார். தமிழ்மொழிச் சொற்கள் பல துளுமொழியில் இடம் பெற்றுள்ளன என்பதை நேரிடையாகவும் தமிழ்மொழியே துளுமொழியின் தோற்றத்திற்கு அடிப்படையா யிருந்தது என்பதைக் குறிப்பாகவும் அறிந்து கொள்ளும் வகையில் அவருடைய விளக்கம் அமைந்துள்ளது. விளக்கம் வருமாறு :

''இது இந்தியாவிலிருந்த பழைய ஐம்பத்தாறு நாடுகளுள் கன்னட நாட்டிற்குத் தெற்கிலிருந்த நாடு. இந்நாட்டிலுள்ளவர்களைத் துளுவர் என்பர்.

துளுவம் (துளு) என்பது திராவிட மொழிகளுள் ஒன்று. இது ஒரு பழமையான மொழி. இது மைசூர் இராச்சியத்தில் தென் கன்னடம் என்னும் மாவட்டத்தில் துளு நாடு என்னும் பகுதியில் வழங்குவது. இம்மொழியைத் தாய் மொழியாக உடையோர் தொகை சுமார் ஒன்றரை இலட்சமாகும் (1951). இது இப்பகுதியிலுள்ள பிராமணர், பிராமணரல்லாதார், கிறிஸ்தவர், சமணர், ஹரிஜனர் ஆகிய அனைவர்க்கும் தாய் மொழியாக இருக்கிறது.

துளுவம் மிகுந்த சொல்வுளமுடையது. நுண்ணிய வேறுபாடு

> **நம் நாடு**
>
> இந்தியா - தெற்கு வடக்கில் 2000 மைல்; கிழக்கு மேற்கில் 1850 மைல். கடற்கரையின் நீளம் 3535 மைல்.
>
> நிலப்பரப்பு – 12,61,597 சதுரமைல். மக்கள் தொகை 43 கோடியே 90 லட்சம்; கடந்த 10 ஆண்டுகளில் 21·5 சத விகிதம்பெருகியுள்ளது. ஆயினும் ஆண்களுக்கு 941 பெண்கள் விகிதம் உள்ளனர்.

டைய கருத்துக்களையும் வெளியிடக் கூடிய வன்மை யுடையது. நாடோடிப் பாடல்களும் கதைகளும் ஏராளமாக இதில் உள்ளன. ஆனால் இம்மொழிக்கு எழுத்து உண்டாகவில்லை யாதலால், நாடோடி இலக்கியத்தில் பெரும் பகுதி மறைந்து விட்டது.

சாதாரணமாக வழங்கும் துளுவச் சொற்களை ஆய்ந்தால், அவற்றுக்கும் அவற்றின் பொருளுடைய தமிழ்மொழிச் சொற்களுக்கும் நெருங்கிய உறவு இருப்பது தெரியும்.

உதாரணமாக:

| துளு | தமிழ் |
|---|---|
| அண்ணெ | அண்ணன் |
| அக்கா | அக்கா |
| தங்காதிரி | தங்கை |
| யேன் | நான் |
| அவு | அது |
| ஒஞ்சி | ஒன்று |
| ரட்டு | இரண்டு |
| மூஜி | மூன்று |
| நால் | நாலு |
| ஐன் | ஐந்து |
| ஆர் | ஆறு |
| ஏன் | ஏழு |
| எண்மொ | எட்டு |
| ஒர்ம்பொ | ஒன்பது |
| பத் | பத்து |
| தரெ | தலை |
| கை | கை |
| கார் | கால் |
| கண் | கண் |
| கெவி | செவி |
| மூங்கு | மூக்கு |
| பரு | பல் |
| நீள் | நீர் |
| காலி | கால் (காற்று) |
| பாஜெ | வான் |
| தின் | தின் |
| உண் | உண்'' |

(பக். 116, ''கலைக்களஞ்சியம்'' —தொகுதி ஆறு)

பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் துளுமொழி இன்றைய வில் சந்திரகிரிக்கும் கல்யாணி நதிக்கும் இடைப்பட்ட நிலப் பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும், அது நெடுங் கணக்கும் இலக்கியமும் அற்ற மொழியாக விளங்குகிறது என்பதையும், இன்று தமிழினின்றும் மாறுபட்ட மொழிபோலக்காணப் பட்டாலும் அது தமிழ் மொழியின் ஒரு பிரிவே ஆகும் என்பதையும், தமிழர்களுள் பலர் தம்மைத் துளுவ வேளாளர் என அழைத்துக் கொள்கின்றனராதலால் அவர்கள் துளுவ நாட்டினின்றும் வந்தவர்களாதல் கூடும் என்பதையும் தெளிவு படத் தம்முடைய "தமிழ் மொழி" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

(Page 26) "Tamil Language" By S. Ilakkuvanar

மக்கட் பெயர், இடப்பெயர், எண்ணுப் பெயர், எண்ணடி உயர்திணைப் பெயர், பழமொழிகள் ஆகியவற்றின் துணை கொண்டு துளுவ நாட்டில் வாழ்ந்த மக்களால், தொன்று தொட்டு வழங்கப்பட்ட மொழி தமிழே ஆகும் என்பதைத் தக்க சான்றுகள் வாயிலாகத் திரு. ஞா. தேவநேயன் அவர்கள் தெரிவித்துள்ளார். (பக்கங்கள்- 103, 104, 105, 106, 109—''திராவிடத் தாய்"-ஞா. தேவநேயன் எம்.ஏ) அவை வருமாறு:

மக்கட் பெயர்: ஆள், ஒண்டிகெ (ஒண்டிக்காரன்), கள்வெ (கள்வன்), குசவெ (குசவன்), செம்புகுட்டி (செம்புகொட்டி), சோமாரி (சோம்பேறி), தோட்டி, நஞ்சுண்டெ (நஞ்சுண்டவன்), பிள்ளே (பிள்ளை), வேட்ட (வேடன்), குருக்குளு (குருக்கள்).

இடப்பெயர்: அம்பில (அம்பலம்), அரு (அருகு), இடெ (இடம்), ஊட்டி (ஊற்று), கடலு, கடெ (கடை), காணி, குட்ட (குன்றம்), கொட்ய (கொட்டகை) கொட்டார, கொனெ (கொனே), சுடலெ (சுடலே) சுடு காடு, தொளு(தொளே), தோட்ட, நடு, நாடு, பயல் (வயல்), பின்னு (விண்), கணி (கேணி), பட்ண (பட்டினம்), ஊரு (ஊர்), இல்லு (இல்), காடு.

எண்ணுப் பெயர்:

| | |
|---|---|
| 1. ஒஞ்சி | 11. பத்தொஞ்சி |
| 2. ரட்டு | 12. பதுராடு |
| 3. மூஜி | 13. பதுமூஜி |
| 4. நாலு | 14. பதுநாலு |
| 5. ஐனு | 15. பதுனேனு |
| 6. ஆஜி | 16. பதுனஜ்ஜி |
| 7. ஏளு | 17. பதுனேளு |
| 8. எண்ம | 18. பதுனெண்ம |
| 9. ஒம்பத்து | |
| 10. பத்து | |

50. ஐவ
60. அஜிப
70. யெள்ப
80. யெண்ப
90. சொண்ப
100. நூது
1000. சார

எண்ணடி உயர்திணைப் பெயர்

| தமிழ் | துளு |
|---|---|
| ஒருவன் | வொரி |
| ஒருத்தி | வொர்த்தி |
| இருவர் | இர்வெரு |
| மூவர் | மூவரு |
| நால்வர் | நால்வெரு |
| ஐவர் | ஐவெரு |
| அறுவர் | ஆஜ்வெரு |
| எழுவர் | யேள்வெரு |
| எண்மர் | யெண்மமந்தெ |
| ஒன்பதின்மர் | வொர்ம்பமந்தெ |
| பதினொருவர் | பத்தொஞ்சி மந்தெ |

பழமொழிகள்: உப்பு திந்தினயெ நீரு பர்வெ=உப்புத் தின்றவன் நீர் பருகுகிறான். கர்ம்பு சீபெ அந்துது பேரு முட்ட அக்கியட=கரும்பு தீவியதென்று வேர் முட்டத் தின்னக் கூடாது.கரும்பு இனிக்கிறதென்று வேரோடு தின்னலாமா? (தமிழ்). தானுகளுவ ஆண்ட ஊரு களுவெகெ =தான் கள்ளனானால் ஊருங் கள்ளனும். தான் திருடி அசலை நம்பான் (தமிழ்).

## 2. இந்தி

மலேயாள மொழியைப் போன்றே இந்தி மொழியும் பிற்காலத்தில் தனி மொழியாகப் போற்றி வளர்க்கப்பட்டது. இன்று கலப்பட மொழியாக விளங்கும் இந்தி இலக்கிய இலக்கண வளங்களற்ற ஒரு மொழி. அது கதம்பமாகக் காட்சியளிக்கிறது. இன்று தேசிய மொழியாகக் கொள்ளப்பட்டுள்ள இந்தி சமஸ்கிருதத்திலிருந்தும் உருதுவிலிருந்தும் வேறு பல மொழிகளிலிருந்தும் சொற்களைப் பெற்று வளர்ச்சி யடையுமாறு கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதாகும். இந்தி ஒரு கலப்பட மொழியேயாகும் என்பதைக் குறிப்பாகத் தம்முடைய விளக்கத்தின் மூலம் மறைமலேயடிகள் முன்னரே தெரிவித்துவிட்டுச் சென்றார்.

"இனி இத் தென்னாடு முழுவதும், இலங்கை, பர்மா, மலாய் நாடு, தென்னாப்பிரிக்கா முதலான அயல்நாடுகளிலும் பெருந்தொகையினராய் இருக்குந்தமிழ் மக்கள் எல்லாரும் பேசுந் தமிழ் மொழி ஒரு தன்மையினதாய், இந்நாட்டவரெல்லாரும் ஒருவரோடொருவர் உரையாடி அளவளாவுதற்கிசைந்த ஒரே நிலையினதாய் வழங்கா நிற்க, வட நாட்டின்கட் பேசப்படும் இந்தி,

உருது முதலான மொழிகளும் அவற்றின் உட்பிரிவான பல சிறுசிறு மொழிகளும் பலப்பல மாறுதல் வாய்ந்தனவாய், ஒருவர் பேசுவது மற்ருெருவர்க்குப் புலனுகாதபடி திரிபுற்றுக் கிடப்பது ஏனென்ருல், அவ்விரு வேறியல்புகளேயுஞ் சிறிது விளக்குவாம்"—என்பதே அவர் தந்த விளக்கமாகும்.

தமிழ் மொழியில் காணப்படும் சுட்டுவினுப் பெயர்களேயும் இலக்கங்களேயும் இந்தி மொழி ஏற்றுக் கொள்ளாது. விட்டு விட்டாலும் அந்த மொழியின் அகர வரிசை தமிழ் மொழிச் சொற்களே ஆதாரமாகக்கொண்டே அமைக்கப் பட்டிருக்க வேண்டும்—உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ண இடமளிக்கின்றது. வரிவடிவம் மாறுபட்டிருந்தாலும் ஒலி வடிவம் மாறுபடாத நிலேயில் பல தமிழ்ச் சொற்கள் இந்தி மொழியில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழியின் ஆற்றலேக் காட்ட—தமிழ் மொழியானது இந்தி மொழி ஏற்றுக் கொள்ளும் வண்ணம் பல சொற்களே வழங்கியுள்ளது என்னும் உண்மையை வலியுறுத்த—கீழ்க் காணும் சொற்களின் பட்டியலே துணை செய்ய வல்லது.

| தமிழ் | இந்தி | பொருள்(ஆங்கிலத்தில்) |
|---|---|---|
| ஆம் | ஹாம் (ன்) | Yes |
| இத்தனே<br>உத்தனே | இத்ணு<br>உத்ணு | So much |
| உம்பர் | உப்பர் | Above |
| உழுந்து | உடத் | Black gram |
| ஓரம் | ஓர் | Side |
| கடு(மை) | கட | Hard |
| கிழான் | கிசான் | Farmer |
| சவை | சபா | Chew softly |
| தண் | தண்டா | Cold |
| தாடி | தாடி | Beard |
| படு(தல்) | பட் | Fall |
| புகல் | போல் | Tell |
| படு | படா | Big |
| பூ | பூல் | Flower |
| மாமா | மாமன் | Uncle<br>Father-in-law |
| மாமி | மாமி | Mother-in-law |
| முத்து | மோதி | Pearl |
| மோட்டு | மோட்டா | Big |

(Page-11 "Tamil Language"—By Prof S. Ilakkuvanar)

## 3. சிங்களம்

தமிழிலிருந்தே சிங்கள மொழி தோன்றிக் காலப் போக்கில் தனி ஒரு மொழியாகப் பிரிந்து வளர்ச்சி யடைந்தது எனத் தெரிவிப்போர் பலர் உண்டு. அவர்கள் அவ்வாறு தெரிவிப்பது பொருத்தமுடைய கருத்தாக அமையாது எனக் கூறி எளிதில் மறுத்துவிட முடியாத அளவிற்குத் தமிழ் மொழிச் சொற்களில் பல இன்று சிங்கள மொழியில் ஒலி மாற்றங்களுடன் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டு அரசர்கள் ஈழத்தை வரை வென்ற செய்திகளும், தமிழர்களும், சிங்களவரும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் கலந்து பழகியவர்களே யாவர் என்ற செய்தியும், சிங்கள மொழியின் தோற்றம், வளர்ச்சிபற்றிய கருத்துக்களை நாம் தெரிந்து கொள்ளத் துணை செய்வனவாம். சிங்களமொழியின் தோற்றம்பற்றிய கருத்தைத் தெரிந்து கொள்ளக் கீழ்க்காணும் விளக்கம் பயன்படவல்லது. விளக்கம் வருமாறு:

"கடல் கொண்ட பழந்தமிழ்க் கண்டமாகிய குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாகப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் ஈழநாடுஞ் சேர்ந்து மிகப் பெரிய தமிழகமாக விளங்கியது. கடல்கோளினால் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னரும் இலங்கை தென்னிந்தியத் தமிழ் நாடுகள் போலத் தமிழினை வளம்படுத்தி வந்துள்ளது; தமிழ்ச் சங்கங்களை நிறுவியுளது; தமிழரசும் பெற்றிருந்தது.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விசயன் எனும் அரசகுமாரனையே தங்களுடைய முதல் அரசன் எனச் சிங்கள மக்கள் கொண்டாடுகின்றனர். அவனுடன் வந்த வீரர்களும் இயக்கர்களும் நாகர்களுந் தமிழர்களுங் கலந்து தோன்றிய சாதியினரே சிங்களராவர். இவர்களுடைய மொழியாகிய சிங்களந் தோன்றுவதற்கு முன் இலங்கையில் தமிழே வழங்கி வந்தது. சிங்கள மொழியையுந் தமிழ் வளம்படுத்தி வருகிறது. சிங்கள மொழிச் சொற்களிற் பெரும்பாலன தமிழ்ச் சொற்களே யாகும். தமிழிலிருந்தே சிங்கள மொழி தோன்றியதென்றுஞ் சிலர் கருதுகின்றனர்."*

### சிங்களம்

"இதனை சிங்க-எல்லம் எனப் பிரிக்கலாம். சிங்க வம்சத்தவனாகிய கலிங்க அரசன், விசயனென்பான் இலங்கையை ஆளத் தொடங்கிய பின், முன் "எல்லம்" என வழங்கிய இலங்கைத் தீவின் பெயர் சிங்க எல்லமாயிற்று. சிங்க எல்லம் பின்பு திரிந்து சிங்களம் ஆயிற்று. பின்பு நாட்டின் பெயரால் மொழியும் அறியப்பட்டது.† இச்சிங்களமொழியும் தமிழின் திரிபே யாகும். சிங்கள மொழியில் பாலிச் சொற்களும் சமக்கிருதச் சொற்களும் பல கலந்துள்ளன. இம்மொழியின் இலக்கண

---

* பக்கங்கள் - 248, 250
"இலங்கையும் இன்பத் தமிழும்"
கட்டுரையாளர்:
திரு. கா. போ. இரத்தினம்
எம்.ஏ.பி.ஓ.எல்.
(தெ. பொ. மீ. மணி விழாமலர்)

† பக்கம் - 63. "தமிழகம்"
—திரு. ந. சி. கந்தையா பிள்ளை
ந. சி. அவர்கள் கருத்து
Mudaliar W. F. Gunawardhana அவர்கள் கூறிய ஆங்கிலப் பகுதியின் தமிழாக்கமேயாம்.

அமைப்பும், வசனக்கட்டும் பிற வும் தமிழை ஒத்துள்ளன. இம் மொழியில் கி. பி. 10 ஆம் நூற்றுண்டளவில் லீலாவதி என்னும் அரசி காலத்தில் முதன் முதல் சிங்கள மொழியில் இலக்கியம் எழுதப்பட்டது. இலங்கையை ஆண்ட அரசர் பெரும்பாலும் தமிழ் மரபிலுள்ளோர். சேர். பி. அருணுசலம் அவர்கள் சிங்கள அரசரின் அரண்மனை மொழி தமிழ் என ஆராய்ந்து கூறியுள்ளார்.

## 4. பாலி(ளி) மொழி

பாலி மொழியில் சமஸ்கிருத மொழிச் சொற்களல்லாத பிற மொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்றும் அவை வேறு மொழியினின்றும் - தமிழ் (அதாவது திராவிடம்) ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும் பந்தர்க்கர் தெரிவித்துள்ள கருத்தையே தம்முடைய 'தமிழ் இந்தியா' என்னும் நூலில் ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். அவர் மேலே கூறப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக் கொள்ளுகிருர் என்பது இதனுல் தெளிவாகின்றது.

பந்தர்க்கர் அவர்களுடைய கருத்து,—

"பாளி மொழியில் ஆரியத்துக்கில்லாத எகர ஒகரம் (குறில்கள்) இருப்பதாலும், மொழித் தொடர்பான பிற ஏதுக்களாலும் மகத நாட்டில் தமிழ் மொழி வழங்கியதென்பதும் புத்தர் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும் வெர்லாங் முதலிய ஆராய்ச்சி அறிஞரின் கருத்து"* என்பதாகும்.

* Wilson's Philological Lectures—Dr. R. G. Bhandarkar. Collected works Vol. IV p. 295.

## 5. சித்தியம் (மொழிகள்)

மத்திய ஆசியாவில் வழங்கப்படும் சிந்திய மொழிகளில் தமிழ் மொழிச் சொற்கள் காணப்படுகின்றன என்றும், 'ழ' கரத்தை உச்சரிக்க முடியாத அந்தப் பகுதி மக்கள் 'ர' கரத்தை வழக்கிற்குக் கொண்டுவந்து விட்டனர் என்றும் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் தெரிவித்துள்ளார். விளக்கம் :

"தமிழ் நாட்டுக் கோழியைப் பற்றி அவர் (கால்டுவெல்) செய்துள்ள ஆராய்ச்சியும் அறியத் தக்கதாகும். மத்திய ஆசியாவில் வழங்கும் சித்திய மொழிகளில் கோழியைக் கோரி என்ற சொல்லாற் குறிக்கின்றுர்கள். கோரி என்பது கோழி என்ற தமிழ்ச் சொல்லின் சிதைவே என்று கால்டுவெல் ஐயர் காட்டியுள்ளார். தமிழில் சிறப்பெழுத்தாக வழங்கும் ழகரம் பிறநாட்டார் நாவில் எளிதாக நுழைவதில்லை. சோழமண்டலக்கரையைக் கோரமண்டலக் கரையாகச் சிதைத்தனர் பிறநாட்டார். தமிழகத்தைத் தமரிக்கா என்று குறித்தார் பழைய யவன ஆசிரியர் ஒருவர். இவ்வண்ணமே ஆசிய தேசத்து மொழிகளிலும் கோழி என்பது கோரி ஆயிற்று.

(பக்-27 "கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர்"

—ரா. பி. சேதுப் பிள்ளை,
பி.ஏ., பி.எல்.)

## 6. சுமேரியம்

சுமேரியமொழி, எகிப்துநாட்டு மொழி ஆகிய மொழிகளிலும் தமிழ் மொழிச் சொற்கள் பல காணப்படுகின்றன. அவை பண்டைத் தமிழர்கள் பிற நாடுகளோடு கொண்டிருந்த வாணிபத் தொடர்பையும், தமிழ் மொழியின் பழமை ஆற்றல் முதலிய

யவைகளையும்பற்றி அறிந்து கொள்ளத் துணை செய்கின்றன. ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள் தக்க சான்றுகளுடன் இந்த உண்மையை வலியுறுத்தி யுள்ளார். எகிப்து மொழியில் தமிழ் மொழிச் சொற்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதையும் சொற்கள் பட்டியலின் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. இருமொழிகளிலும் காணப்படும் சொற்கள்,—

| பொருள் | சுமேரியம்* | எகிப்து | தமிழ் |
|---|---|---|---|
| ஆறு, வெள்ளம், ஓடும் நீர் | அ | அர், ஆர் | ஆறு |
| தந்தை, தலைவன், பாதுகாப்பவன் | அப், அப்பா | அப், பப்பா | அப்பன் தகப்பன் |
| ஆடு, மாடு, எருது, பசு | அப் | அபு | ஆ |
| நெருப்பு, எரிவது | அக், அங் | ஆக், ஆக்கு, | ஆக்கு |
| வெள்ளி, விளங்குவது | அலக், ஆர் | அர், குர் | வெள்ளி, எல் |
| தாய் | அமா, எமி | — | அம்மா |
| கலப்பை | ஆர் | ஆர் | ஏர் |
| பிரிபு, கடவுள், பாதுகாப்பவன் | ஆஸ், ஆசா | — | (அர்) அரசன் |
| பாதை, திற | பாட், பாத் | பாத் | பாதை |
| குரு | பார், பாரு | பார், ஆ | பார்ப்பான் |
| ஆறு, சிற்றாறு | பூர் | போர் | வாரி |
| பூமி, நிலம் | தர் | — | தரை |
| பிடி, கொள்ளையிடு, அழி | தாக் | தாக்கு | தாக்கு |
| வெளியே போ | எக்கி | — | ஏகு |
| ஆடை, உடை, நெசவு செய் | தர, தரி | தர் | தறி |
| எழுத்து, உளவு | தப் | — | துப்பு |

## 7. மலாய் மொழி

மலாய் மொழிச் சொற்களில் தமிழ் மொழிச் சொற்கள் பல காணப்படுகின்றன. பல மலாய் மொழிச் சொற்களின் மூலத்திற்கு-தோற்றத்திற்கு-நிலைக்களமாக அமைந்த மொழி தமிழ் மொழியே என்பதைச் சான்றுகளின் வாயிலாகத் தெரிவிக்க முடிகின்றது. தமிழ் நாட்டிற்கும் மலேயா நாட்டிற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை மலாய் மொழிச் சொற்கள் இன்றும் பறை சாற்றிக்கொண்டிருக்கின்றன. S. J. குணசேகரம் என்னும் பெரியார் ஒருவர் தம்முடைய கட்டுரை வாயிலாக மேற்கூறிய உண்மையை வலி

* பக்கம் 153. "பழந்தமிழர்" —ந. சி. கந்தையா பிள்ளை.

(ஆதாரம்—The Sumerio Dravidian and Hittite- Aryan Origins—T.J.O.T.M. Society.

யுறுத்துவதற்கேற்ற முறையில் விளக்கம் † ஒன்றைத் தெரிவித்துள்ளார்.

சொற்களில் சில கீழே காட்டப் பெற்றுள்ளன.

வண்ணான்; வகை/விதம், (திருமண)வாழ்க்கை ஒப்பந்தம்; இலை.

"Several common Malay words like those for washerman. kind or sort, marriage pledge, leaf, couple, and so on, have been traced indubitably to Tamil origins, and these are some of the results of an unbroken contact throughout the centuries that follow the early period of colonisation."

தமிழ் மொழியிலுள்ள மூலச் சொற்களே மலாய் மொழிச் சொற்கள் பலவுந் தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்தன என்பது மேற்காட்டிய விளக்கத்தால் தெளிவாகின்றது.

## 8. கிதைதி மொழி

"அத்தா, அன்னை முதலிய தமிழ்ச் சொற்கள் கிதைதி மொழியிற் காணப்படுவதையும், அக்கை, அக்காள் முதலிய சொற்கள் பின்னிய—உக்கிரிய (Finno-Ugrian) மொழியிற் காணப்படுதலையும் C.R. சங்கரன் என்பார் காட்டி யுள்ளார்"—(Bulletin of Deccan college research Institute (Vol I, 1939—1950)

—பக்கம்-154. "வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட 'பழந் தமிழர்''

= ந. சி. கந்தையா பிள்ளை.

தமிழ் மொழிச் சொற்கள் கிதைதி மொழியில் இடம் பெறுமளவிற்குத் தமிழர்கள் பிறநாட்டவர்களோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தனர் என்பது மேற்காட்டிய விளக்கத்தால் தெளிவாகின்றது.

## 9. இந்திய ஐரோப்பிய மொழிகள்

தமிழ் மொழிக்கும் இந்திய ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள தொடர்பை — சொற்கள் வழக்காற்றில் உள்ள உறவை— கீழ்க்காணும் விளக்கம் எடுத்துக் காட்டுகிறது. தமிழில் காணப் படும் மூலச் சொற்கள் இந்து ஐரோப்பிய மொழிகளில் நீண்ட காலத்திற்கு முன்னரே மறக்கப் பட்ட சொல் மூலங்களாகும் என ஆராய்ச்சியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

"இந்திய ஐரோப்பிய மொழிச் சொற்களின் மூலங்கள் பல பழந் தமிழிற் காணப்படுகின்றன என்பது, அனுமான அளவில் உள்ள தன்று; உண்மையே. இவ்வுண்மை பரந்த ஆராய்ச்சியினால் கண்டு பிடிக்கப்பட்டது. உச்சரிப்பு ஒற்றுமை, பொருள் ஒற்றுமைகளால் மாத்திரமன்று இச் சொற்களின் ஒற்றுமை அறியப் படுவது." —வண். ஞானப்பிரகாசர்.

(தொடரும்)

† Page 333, "Early Tamil Cultural Influences in S. E. Asia" S.J. Gunasegaram "Tamil Culture (Vol. XIX,P. 230) Oct–1957

# உங்களுக்கு ஊக்கம் பிறக்க

*[இங்குள்ள பொன்மொழிகளில் சிலவேனும் உங்களுக்குப் பொருந்தலாம். மிகப் பொருந்தக் கூடிய ஒன்றைப் பொறுக்கிக் கொள்ளுங்கள். அதைத் திரும்பத் திரும்பப் படியுங்கள்; மனப் பாடஞ் செய்யுங்கள்; பலதடவை நினைவுபடுத்திப் பாருங்கள்.—பிறகு* நடத்தையில் *காட்டுங்கள்.*

*மற்றப் பொன்மொழிகளை மற்ற நாட்களில் இப்படியே பயன் படுத்துங்கள்.*

*இவை பல பேரறிஞர்களால் கூறப்பட்டவை; சலித்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் இரண்டு — மூன்று வரிகள் உங்கள் வாழ்க்கையி லேயே ஒரு திருப்பத்தை உண்டாக்கலாம்.]*

"உங்களிடம் யாராவது அன்பு காட்டினார்களா? அதை மற்றவர்களுக்கும் அனுப்புக!"

—ஹென்றி பர்ட்டன்

x x x

"இனிமையாகவும் இன்பமாகவும் இருப்பவர்களுக்கு எதிலும் வெற்றியே."

—வால்ட்டேர்

x x x

"உன்னைக்காட்டிலும் கேடானவர் ஒருவராவது எப் போதும் இருப்பார்."

—ஈசாப்

x x x

"உயர்ந்த எண்ணங்களைக் கொண்டிருப்பவர்களுக்குத் தனிமை என்பதே இல்லை."

— Sir Philip Sidney.

x x x

"யாரைப் பற்றியும் நான் கெட்டதைக் கூறவே மாட் டேன்......ஒவ்வொருவரைப் பற்றியும் நல்லது எவ்வளவு உண்டோ அவ்வளவையும் கூறுவேன்."

—பெஞ்சமின் ஃப்ராங்க்லின்

x x x

"சாதாரண மக்களின் கண்கள் கூசும்படியான சக்தி கொண்ட மேதைத் தன்மை (genius) என்பது மறைமுகமான உழைப்பும் விடாமுயற்சியும் தவிர வேறல்ல."

—Henry Willard Austin

புலவர் அறிவொளி

# பாம்பும் பழமொழியும்

*["பாம்புக்குச் செவி உண்டா?" என்ற தலைப்பில் திரு. K. S. மகாதேவன் அவர்கள் குத்து-1, ஊசி-1 இதழில் கட்டுரை எழுதியுள்ளார். 'பாம்பும் இசையும்' என்ற தலைப்பில் குத்து-1, ஊசி-4 இதழில் 'பொது அறிவு'த் தொகுப்பில் ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. இக்கட்டுரையில் பாம்பிற்குக் கால் உண்டா என்பது பற்றி ஆராயப்படுகிறது.]*

"பாம்பின்கால் பாம்பறியும்"— என்ற பழமொழி எல்லாருக்கும் தெரிந்ததே. பாம்புக்குக் காலுண்டா? இல்லையா? என்பது பாமரர்களிடையே பெரிய குழப்பமானதாகும். பாம்பு ஊர்ந்து செல்லுவதை ஊன்றிக் கவனிப்பவர்களும், பாம்பின் உடலமைப்பை மேற்போக்காக அறிந்து கொள்ளுகிறவர்களும், பாம்புக்குக் கால்கள் இல்லையென்ற அறிவியல் உண்மையைப் புரிந்துகொள்வது எளிமையாகும்.

காலில்லாத பாம்புக்குக் காலைக் கற்பித்துக் காட்டும் பழமொழி வழங்கிவரக் காரணம் என்ன? அப் பழமொழி பாம்பைப் பற்றியே அறியாதவர்களால் எழுப்பப்பட்டதா? அப்படியானல் இவ்வளவு காலம் வழங்கி வரும் அப் பழமொழி படித்தவரானாலும், அறிஞர்களாலும் வழங்கப்படும் காரணமென்ன? இப்படிப்பட்ட ஐயங்கள் எழுவது எளிது; இயற்கையுமாகும். நம் முன்னோர்கள் இப்பழமொழியை உருவாக்கிய காரணத்தை ஆராய்வதே கடன். அதற்குமுன் நம் முன்னோர் பாம்பைப் பற்றியறிந்திருந்த நுணுக்கத்தை அறிவதும் ஆய்வதும் சிறப்பாகும்.

## முன்னோரின் அறிவு

நம் மொழியில் பொருள்களுக்கு வைக்கப்பட்ட பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயர்களாகும். அக்காரணப் பெயர்களுக்குள் அடங்கிய காரணம் நுணுகி ஆராயப்பட்ட உண்மையின் அடிப்படையாகும். நமது முன்னோர் பாம்பைப் பற்றி ஆராய்ந்த நுணுக்கத்தை அறிவிக்கும் வகையில், "கட்செவி" என்ற காரணப் பெயர் உலவுகின்றது. பாம்புக்குக் "கட்செவி" யெனப் பெயரிட்ட காரண மென்ன?

கண் + செவி = கட்செவி இதன் பொருள்: கண்ணையே செவியாக உடையது என்பதாம். இந்த நுணுக்கம் இக்கால அறிவியலுடன் பொருந்தி வருமா என்பதும் வினவேயாகும்.

## அறிவியல் உண்மை

புழுக்கள் பூச்சிகளாய் மாறியதும், புழுக்களே ஊர்ந்து செல்லும் கால்களைப் பெற்றதும், வளர்ச்சிப்பருவ மாறுபாடுகளின் உண்மையாகும். கால்களற்ற உயிரினங்கள் பல நூற்றாண்டு வளர்ச்சிக்குப்பின் கால்களைப் பெற்று, பல்லி, ஓணான், அரணை போன்ற உயிரினங்களாக மாறி வளர்ந்தன. அந்த இனத்தைச்

சேர்ந்த பாம்புமட்டும் கால்களைப் பெறவில்லை. ஆனால் ஊர்வதற்குத் தக்க முதுகெலும்பையும், வளைந்து செல்லவும், சுருங்கி விரியவும் ஏதுவாகிய மடிப்புக்கள் பொருந்திய வழவழப்புள்ள பட்டைப் போன்ற தோலையும் பாம்பு பெற்றுக்கொண்டது.

ஊர்வனவற்றிலுள்ள பல்லி முதலியன வளர்ச்சிப் பருவத்தில் கால்களைப் பெற்றது போல செவிகளையும் பெற்றுவிட்டன. கால்களைப் பெறுதுபோன பாம்பு, வளர்ச்சிப் பருவத்தில் எவ்வளவோ முயன்றும் இறுதிவரை செவியையும் பெறுமலே போய்விட்டது. இத்தகைய அறிவியல் உண்மைக்கு ஏற்றபடி பாம்புக்குச் செவியில்லை யென்ற நம் முன்னோரின் கருத்தும் அமைந்து கிடக்கின்றது. அப்படியானல் பாம்பு மகுடியை உணர்ந்து நுகர்ந்து துய்ப்பது எப்படி ?

## மகுடியின் உண்மை

செவிகளையுடைய உயிரினங்களிலேயே பெரும்பாலானவை ஒலிகளைத் தவிர இசையை நுகர்வதில்லை. இசை நுகரும் அறிவு அவைகளுக்கு இல்லை. யானை, குதிரை, குரங்கு, நாய் முதலிய சில உயிரினங்களே இசையை உணர முடியும். அவைகளும் மிகக் குறைந்த அளவே நுகர்கின்றன. பகுத்தறிவுள்ள மாந்தரிலேயே சிலருக்கு இசையுணரும் ஆற்றறில்லை என்பதைக் காணும்போது, விலங்கினத்திற்கு இது ஓர் விந்தை நிகழ்ச்சியன்று. ' செவியுள்ளவைகளாலேயே உணர முடியாத இசையைச் செவியற்றவைகள் உணர்வது இயல்வதன்று.

மகுடியை ஊதும்போது அந்த இசையின் இனிமையை நுகர்ந்து கொண்டு பாம்புகள் ஆடுவதாக எண்ணுவது தவறு. அஃதொரு மயக்கமே யாகும். மகுடி அமைக்கப்பட்ட வடிவமைப்பை ஊன்றிக் கவனித்தால் இந்த மயக்கத்தின் உண்மை தெளிவாகும்.

மகுடியின் ஊதும் பகுதியையடுத்து சிறிய உருண்டையான கொண்டை போன்ற முடிச்சு இருக்கும். அதற்கும் கீழே அதே உருண்டை வடிவமுடிச்சு சற்றுப் பெரிய அளவில் காட்சி அளிக்கும். அதற்கும் கீழே கை விரலால் ஒளியை மாறுபடுத்தும் துளைச் சட்டங்கள் இரண்டு சேர்ந்தாற்போல இருக்கும். இந்த அமைப்பைச் சிறிது கற்பனை செய்து பார்த்தால் மகுடியின் உண்மை புரிந்துவிடும்.

படமெடுத்தாடும் பாம்பின் நிழலையோ, அல்லது அதுபோல் வரையப்பட்ட ஓவியத்தையோ, அல்லது படமெடுத்தாடும் பாம்பின் உருவத்தை ஒரு மெல்லிய தாளில் வரைந்து அதன் பின்புறத்தையோ ஊன்றிக் கவனித்தால் அந்த நிழல் தோற்றமும் மகுடியின் அமைப்பு வடிவமும் ஒன்றுகத் தோன்றும். மகுடியில் உள்ள துளைச் சட்டங்கள் பாம்பின் நிமிர்ந்த உடலுக்கும், பெரிய உருண்டை வடிவம் பாம்பின் விரிந்த படத்துக்கும், சிறிய உருண்டை முடிச்சு பாம்பின் படத்துக்குமேல் வளைந்தபடியிருக்கும் பாம்பின் வாய்ப்பக்கத்திற்கும் ஒத்திருக்கக் காணலாம்.

படமெடுத்தாடும் பாம்பு போன்ற வடிவமுள்ள மகுடியானது, பாம்பாட்டும் பிடாரனல் ஊதப்படும்போது அசையும் விதத்தையும் காண்க. குழலூதும் கலைஞர்களுக்கு இவ்வுண்மை புரியும். நாதசுரம் போன்ற பெரிய துளைக் கருவிகள் ஊதப்படும் போது மிகுதியாக ஆட்டப்படுவதில்லை. புல்லாங்குழல் போன்ற

சிறிய துளைக் கருவிகள் அவை களை ஊதும், கலைஞர்களின் தலை யாட்டத்திற்குத் தக்கபடியும் ஒலி யலைகளை வரைப்படுத்தும் கைவிரல்களுக்குத் தக்கபடியும் பலமுறை அடிக்கடி மிகுதியாக ஆடும். ஆனால் இந்தத் துளைக் கருவிகளின் ஆட்டத்திலிருந்து வேறுபட்டதுதான் மகுடியின் ஆட்டம்.

மகுடி யென்ற இசை யமைப்பு (இராகம்) பாம்பின் ஆட்டத்திற்கு ஏற்றபடி ஆராய்ந்து கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. அதனை ஊதும் கலைஞர்களின் கலையுள்ளம் பாம் பின் ஆட்டத்தை நினைந்து அதே உணர்வுடன் அதனை ஊதுகின் றது. எனவே மகுடியும் அதற் குத் தக்கபடி ஆட்டப்படுகிறது. பாம்பின் படம் போலவே மகுடி அமைக்கப்பட்டிருப்பதாலும், பாம் பின் ஆட்டத்திற்குத் தக்கபடி இசையும் கருவியின் ஆட்டமும் அமைந்திருப்பதாலும், பாம் பொன்று ஆடுவதுபோலவே மகுடியும் ஆடுகின்றது.

இதனைக் கண்ணால் காணும் பாம்பு பிடாரனைக் கொத்துவதற் காகவும், தன்னைப் போல் ஒரு பாம்பு ஆடுகின்ற தென்ற மயக் கத்தாலும், மருண்டு போய் அது வும் ஆடுகின்றது. இதுவே மகு டிக்கும் பாம்புக்குமுள்ள தொடர் பாகும். இதைத் தவிர பாம்புக்கு இசை அறிவு உண்டென்பது தவறு. இதனை உணர்ந்த நம் முன்னோர் கண்ணால் உணர்ந்து ஆடும் காரணத்தையே அடிப் படையாக்கி கண் + செவி = கட் செவி என்று பெயரிட்டனர். நம் முன்னோர் பாம்பின் காதைப் பற்றியே நன்கு ஆராய்ந்தவர்க ளாகையால் பாம்பின் காலைப் பற் றியும் தெளிவாக ஆராய்ந்தவர் கள் என்பது தெளிவாகும்.

பாய் = (பாய்தல்) என்ற சொல் லின் அடிப்படையிலும், பாவுதல் (பரவுதல்) என்பதன் அடிப்படை யிலும்தான் "பாம்பு"—என்ற பெயர் உண்டாயிற்று என்பது மொழியியல் அறிஞர்களின் முடி பாகும். எந்த வகையிலும் நம் முன்னோர் பாம்புக்குக் காலுண்டு என்று தவறாக எண்ணியிருக்க முடியாது.

### பாம்பின் கால்

"அறிவுடையவர்களின் அறி வைத் தெரிந்துகொள்ளும் வன் மையும் தன்மையும் அறிவுடைய வர்களுக்கே உண்டாகும்.'' இந் தக் கருத்தை விளக்க வந்த பழ மொழி நானூற்று ஆசிரியர், பாம் பின் கால் பாம்பறிவது போல அறிஞரை அறிஞர்களே அறிந்து கொள்வார்கள், மற்றவர்களால் முடியாது என்று கூறினார். இதனை,

> "புலமிக் கவரை
> புலமை தெரிதல்
> புலமிக் கவர்க்கே
> புலனாம்—நலமிக்க
> பூம்புனல் ஊர
> பொதுமக்கட் காகாதே
> பாம்பறியும் பம்பின கால்"
> (பழமொழி நானூறு)

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

**தன்னம்பிக்கை**

''தன்னம்பிக்கை உடையவர் கள் புன்சிரிப்புடனும் இனிய முகத்துடனும் தங்கள் வேலை களில் ஈடுபடுவார்கள்; நன்மை —தீமை இரண்டையும் ஒன்றா கவே கருதுவார்கள்; வாழ்க் கையில் நிகழும் மாறுதல்களைப் பற்றிக் கவலைப்படாமலிருப்பார் கள்; எதுவும் நன்றாகவே முடி யும் என்று எப்போதும் நம்பிக் கொண்டிருப்பார்கள், பொது வாக, அப்படியே நடக்கும்.''

—Edna Smith

எஸ். இர்ராமநாதன் எம்.ஏ., பி.எல்.

# மதச் சார்பற்ற ஆட்சியா?

[பத்து ஆண்டுகட்கு முன்பு 'மதச்சார்பற்ற ஆட்சி' என்பது பற்றித் தமது இங்கிலீஷ் ஏட்டில் திரு. எஸ். இராமநாதன் அவர்கள் எழுதியது இன்றைக்கும் பொருந்தக்கூடியதாயிருப்பதனால் அதை மொழி பெயர்த்துள்ளோம். பகுத்தறிவாளர் கடமை தனிப்பட்டது; அரசியல் வாதிகளால் முடியாதது என்பதை இக்கட்டுரை காட்டும்.]

இந்தியாவின் பொது வாழ்விலே ஓட்டை இருக்கிறது என்பதை யாவரும் ஒப்புக்கொள்கின்றனர். அன்றாடப் பணியிலே இலஞ்சம் தாண்டவமாடுகிறது; அந்த இலஞ்ச ஊழல் அடித்தளத்திலே இருந்து வரவில்லை; அது மேலிடத்திலிருந்துதான் வருகிறது. அவ்வூழலும் நிர்வாகத்துறையிலே இருந்து எழவில்லை; அரசியல் துறையிலிருந்துதான் கிளம்புகிறது. எல்லோரும் காணும்படி இரட்டை வேடம் தாங்கும் முறை எல்லா நாட்டு அரசியலிலும் இருந்தாலும், இந்திய நாட்டு அரசியலில் அவ் இழிநிலை எல்லைக்கே சென்றுவிட்டது. இதன் காரணமாக அரசியல் தலைவர்களின் சொற்களுக்கு மதிப்பளித்து நம்புவதை பொது மக்கள் இழந்துவிட்டார்கள். தலைவர்களும் தங்கள் தொண்டர்களை, "நீங்கள் எல்லாம் முட்டாள்களும், போக்கிரிகளுமாக இல்லாவிடினும் ஏதோ ஒன்றாக இருக்கிறீர்கள்," என்று சொல்லுகிறார்கள். இந்நிலை நீடிக்குமானால் முன்னேற்றத்திற்கு முட்டுக்-

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

—என்ற பாடலால் அறியலாம்.

இந்தப் பாட்டிலேயும் பாம்பின கால் என்பதற்குப் பாம்பினுடைய கால்கள் என்றே பொருளும் கொண்டனர். தமிழ் நூல் வெளியீட்டகமான சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீட்டில் கூட 'பாம்பினுடைய கால்கள்'—என்றே பொருளுரைக்கப்பட்டிருக்கிறது.

"பாம்பின் கால்" என்றால் பாம்பின் கால்கள் என்று பொருளில்லை. பாம்புகள் வாழுமிடம் என்பது பொருளாகும். பாம்புகள் வாழுமிடங்களைப் பொதுமக்களால் அறிந்துகொள்ள முடியாது. அவ்விடங்களைப் பாம்புகள் தாம் அறிந்துகொள்ள முடியும் என்பதே இப்பாட்டின் விளக்கமாகும். "பாம்பின" என்ற பன்மைக்குக் "கால்" என்ற ஒருமை முடிக்கப்பட்டிருப்பதால் "கால்" என்பது இடமென்றே பொருள்படும். 'ன' என்ற எழுத்துக்குப் புள்ளியைச் சேர்த்து 'ன்' ஆக்கிவிட்டனர்.

எனவே பழமொழியோ அதனை உருவாக்கிய முன்னோரோ பழுது செய்யவில்லை அதனைப் பழக்கப்படுத்திய பாமரரே பழுது செய்தனர். இதனைப் பழமொழி நானூறு நமக்குத் தெள்ளத் தெளிவாகக் காட்டும்.

கட்டை போடப்படுவதோடு அன்றாட நிர்வாகமும், சட்டமும், ஒழுங்கும் நிலை நிறுத்தப்படுவதும், காக்கப்பெறுவதும் நிலைகுலையும். சமூகத்தை அதன் தலைவர்களிடமிருந்து பிரித்துவிடுவது என்பது அநீதியாகும்; ஆபத்துமாகும். மக்கள் தம் தலைவர்களை மதித்து, அவர்கள் வார்த்தைக்கு மதிப்பளித்து நம்பச் செய்யவேண்டியது அவசியமாகிறது. அதனால் சில மாற்றங்கள் தேவையானால் அதையும் செய்தாக வேண்டும். ஒப்புக்கொண்ட குறைகளை நீக்கக் கூறும் செயல் முறைகளிலே, வழிகளிலேதான் கருத்து வேறுபாடு அடங்கி உள்ளது.

மத உணர்ச்சி மனிதன் தன் மேல் கொள்ளும் தன்னம்பிக்கையை இழக்கச் செய்கிறது; மக்கள் சமுதாயத்தின் மேல் நம்பிக்கை வைப்பதைத் தடுக்கிறது; தன்னுடைய திறமையைக் குறைத்து மதிப்பிட்டு, "தலை விதி" என்ற ஒன்றுக்கு அதிக மதிப்பளிக்கிறது; மதம் காட்டும் மகேசன் முன்பு மனிதன் அடிபணிந்தே ஆக வேண்டும் என்ற தாழ்வு மனப்பான்மையை ஊட்டுகிறது.

பொது உடமைவாதிகள், கடவுளை அகற்றிவிட்டு அந்த இடத்திலே உலோகாயுதம் என்பதை (Materialism) வைக்க முயன்றனர். அதன்பயன், பொது உடைமைப் பாதை தவறி சர்வாதிகாரத்துக்கு அழைத்துச் சென்றது. ஹிட்லர் ஆண்டவன் இருந்த இடத்தை ஆரிய இனத்துக்குத் தந்து வழிபட்டான். அதன் பயன், மக்கள் அன்பையேமறந்து வெறிச் செயலையே விரும்பிய சர்வாதிகாரியாகக் காட்சி தந்து மறைந்தான். மனிதனைத் தன்னையும், தன்னுடன் சேர்ந்த மக்கள் இனத்தையும் நம்புவதிலிருந்து, மனிதத் தன்மையிலிருந்து பிரித்துச் செல்வது கடவுளாக இருக்கட்டும்; அல்லது வேறு எதுவாக இருக்கட்டும்; அது குறும்புத்தனமானது, கோணல் தன்மையுடையது. அது அழைத்துச் செல்லும் இடம் அழிவே அன்றி வேறல்ல.

## பகுத்தறிவாளர் கடமை

பகுத்தறிவு வாதிகள் ஆற்ற வேண்டிய பணி இதில் சில உள்ளன. அரசியலில் நேரடித் தொடர்பு இல்லை என்று பகுத்தறிவு வாதிகள் ஒதுங்கி நிற்க முடியாது. இந்தச் சூழ்நிலையிலே தன் கடமையை ஒழுங்காகச் செய்து, எதிர்நோக்கி இருக்கும் பிரச்னையைச் சமாளிக்க வேண்டும். உலகம் முழுவதும் பரவி இருக்கும் பகுத்தறிவு இயக்கங்கள், உலகெங்கும் மதச்சார்பற்ற அரசியல் அமைப்பு ஒன்று செவ்வனே செயல்பட்டு வர உறுதுணையாக இருக்க வேண்டும். அரசியலிலிருந்து மதத்தை, பயிரிலிருந்து களையை நீக்குவது போல், நீக்கவேண்டும். கல்வியில் மதம் புகுவதைத் தடுக்க வேண்டும், இதுதான் பகுத்தறிவுவாதிகள் உடனடியாகச் செய்ய வேண்டிய கடமை. பகுத்தறிவு வாதிகளைத் தங்கள் கண்காணிப்பிலே இருந்து தூக்கி எறிந்து, நம் கடமையைச் செவ்வனே செய்வதிலிருந்து தடுக்க "இந்தியா மதச்சார்பற்ற நாடு" என்று முன்னமே பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது என்று எடுத்துக்காட்டி ஆட்சியாளர்கள் ஏமாற்றுகிறார்கள்.

இந்திய எல்லைக்கு அப்பாலுள்ள பாகிஸ்தானில் மதச்சார்புடைய ஆட்சியே நடைபெறுகிறது. இந்திய அரசியல் அமைப்பில் அரசாங்கம் மதச்சார்பற்றதாக இருக்கும் என்ற விதி காணப்படவில்லை. நேருவின் பிரச்சாரங்களிலே "இந்தி

யாவில் மதச்சார்பற்ற அரசு நிறுவியுள்ளோம்,'' என்று குறிப்பிடுவதே நமக்கு இந்திய அரசு அளித்த உறுதி மொழியாகக் கொள்ள வேண்டியுளது. அவரது உறுதி மொழி 'அதிக எடை' உள்ளதாகஇருந்தாலும்இந்தியா மதச்சார்புடைய நாடு என்று நம்பும் அளவுக்கு,எண்ணும் அளவுக்கு அவருடன் சேர்ந்த மற்ற மந்திரிகளாலும், நீதிபதிகளாலும், உயர் பதவிகளில் உள்ளவர்களாலும், எதிரிடையாகப் பிரசாரம் நடைபெற்றுவருகிறது. ''மதச் சார்பற்ற நாடு என்றதும், மக்கள் மதத்துக்கு நேரடி ஆதரவு தரும் முயற்சியில் ஈடுபடுவதையோ, மதச்சார்புள்ள நிலையங்களுக்குப் பண உதவி செய்வதையோ தடைசெய்யும் என்று கருத வேண்டியதில்லை,'' என்று விளக்கம் கொடுத்துப் பேசுகிறார்கள் பதவியிலுள்ளோர். மதச்சார்பற்ற அரசிட மிருந்து, மதச்சார்பற்றோர் எதிர்பார்ப்பது, நாடு ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்குச் சலுகை காட்டாமல், மக்கள் இனத்துக்குச் சமநீதி வழங்க வேண்டும்'' என்பதே ஆகும்.

'மதச் சார்பற்றது' எனும் சொற்களுக்குரிய பொருளைத் திரித்துக் கூறும் நிலை இங்கே ஏற்பட்டுள்ளது. ''மதச் சார்பற்ற நாடு'' எனும் எண்ணமே சமீப காலத்தில் எழுந்ததாகும். இவ் எண்ணமே மக்களின் குறிக்கோள் என்று அறிந்ததும், மதப் போர்வையிலே மறைந்திருக்கும் மதவாதிகள் தம் எதிர்ப்பை வெளியிடுகிறார்கள். இந்தியாவில் இருக்கும் அரசியல் கட்சிகள் இவ் வேற்றுமை உணர்ச்சிகளை நீக்கி உடன்பாடுகொண்டிருக்கின்றனவா என்றால் இல்லை. காங்கிரஸ் கட்சி காந்தீயத்தில் இரண்டறக் கலந்துவிட்டது என்று சொல்லும் காரணத்தால் இக்குறிக்கோளை நிறைவேற்ற முடியாது.

காங்கிரஸ்காரர்களால் மதச் சார்புள்ள கொள்கையைப் பின்பற்ற முடியாத நெருக்கடியான காரணத்தால் அவர்கள் அதற்குப் பதிலாக ஒன்றை ஏற்படுத்தி மதத்தின் குறிக்கோளை நிறைவேற்றப் பார்க்கிறார்கள். சோஷலிஸ்டுகள், காங்கிரஸ்காரர்களை விட மோசமான நிலையிலே இருக்கிறார்கள். காரணம் அவர்கள் காந்தியையும், காந்தீயத்தையும் உண்மையாகப் பின்பற்றுகிறார்கள். சோஷலிஸ்டுகளுடன் இணைவதற்கு முன்பு பிரஜா கட்சித் தன்னை இந்தியாவிலேயே கலப்பில்லா காந்தீயத்தைப் பின்பற்றும் கட்சி என்று உரிமைகொண்டாடியது. இணைந்த பின்பு இந்தியாவிலேயே அதைக் காட்டிலும் பழமை விரும்பும் கட்சி வேறு ஒன்றில்லை எனும் அளவுக்குத் தன்னை உருவாக்கிக்கொண்டது. பொதுவுடைமையினருக்கும் மதச்சார்பு அற்ற குடி அரசு என்பதற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. அவர்கள் வசமான பகுதியிலெல்லாம், மதச்சார்பற்ற குடி அரசாட்சிக்கு எதிராக உரிமையையே பறித்து மக்களை விலங்காக நடத்தும் சர்வாதிகார ஆட்சியே நடைபெற்று வருகிறது.

பகுத்தறிவு வாதிகள் மதச்சார்பற்ற ஆட்சி அமைப்புக்கு அயராது உழைத்தல் வேண்டும். இது போன்ற போராட்டம் முன்னேற்றமடைந்த நாடுகளாகிய அமெரிக்கா, பிரிட்டன் முதலியவற்றிலும் நடந்து வருவதால், பகுத்தறிவுவாதிகள் இப்போராட்டத்தைக் கண்டு மனம் தளர வேண்டியதில்லை. அகில உலகிலும் உள்ள பகுத்தறிவு இயக்கம்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

வித்வான் நடேச நாராயணன்

# அறிவின் வேர்

*[உடலை வளர்த்தால்தான் உயிரை வளர்க்க முடியும், என்ற திருமூலர் கருத்தை வலியுறுத்துவது இக்கட்டுரை. நோயற்ற வாழ்வுதானே குறைவற்ற செல்வம்?]*

''காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா'' என்ற கருத்தை எண்ணி, ''பண்டையோர் உடலோம்புவதில் அக்கறை செலுத்தவில்லை'' என்று கூறுபவரும் உளர். காயமே இது பொய்யடா என்ற அறிவுரை யாருக்குச் சொன்னது? உடம்பே எல்லாம் என்றெண்ணி அதற்காகவே வாழ்ந்து பிறவற்றை மறப்பவர்க்கு அது அறிவுறுத்தப்பட்டது; நமக்கன்று.

அலுவலகத்தில் 'உத்தரவின்றி உள்ளே வராதே' என்ற அறிவிப்பு இருக்கும் தலைமை அதிகாரியும் அவர்கட்குத் துணையான பணியாளர்களும் வெளியிலிருந்துதான் உள்ளே செல்கிறார்கள் அவர்கள் வாயிலில் தொங்கும் அந்த அறிவிப்பைத் தங்கட்குச் சொன்னதாக எடுத்துக் கொள்ளலாமா? அது போன்றதுதான் காயமே இது பொய்யடா, என்ற அறிவுரையும். இது நமக்கு உரியதல்ல. நமக்கு உரியது எது? ''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்ற திருமூலர் வாக்குத்தான்.

நம் முன்னோர் உடலோம்புங் கலையை நன்கு அறிந்திருந்தனர். மருத்துவத் துறையில் வல்லவர்களாக விளங்கி நூல்களும் எழுதிச் சென்றனர். அவர்கள் கண்ட மருந்துகட்கு அக்காலத்தில் அதிகத் தேவை ஏற்படவில்லை. காரணம், அன்று நோயாளர்கள் இன்று போல் மலிந்திருக்கவில்லை. அதனால் வைத்தியர்கள் பலராக இல்லாமல் சிலராகவே இருந்தனர். அவர்களும் வைத்தியத்தையே தொழிலாகக் கொள்ளவில்லை. தொழிலாகவே கொள்ளும் அளவுக்கு அன்று மிகுதியான நோயாளர்கள் இல்லை. அதனால் அன்றைய மருத்துவர்கட்கு நூல் எழுத ஓய்விருந்தது. தமிழ் இலக்கியங்களைப் படித்துத் தமிழ்ப் புலவராக வாழ வாய்ப்பிருந்தது. சங்க காலத்தில் தாமோதரனார் என்ற மருத்துவர்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

களின் உறுதுணையும், ஒத்துழைப்பும், இருப்பதோடு, மக்கள் சமுதாயத்திலே முன்னேற்றப் பாதையில் செல்லும் முற்போக்குவாதிகளின் இதயம் கனிந்த வாழ்த்துக்களும், மனப்பூர்வமான ஆதரவும் என்றும் உண்டு. மனித இனத்தை, மனித இனமாக ஆக்கும் பொறுப்பு பகுத்தறிவாளருடையதே ஆகும்.

''ரேஷனலிஸ்ட்''
(1953)
—மொழி பெயர்ப்பு :
"குருதாசன்."

தமிழ்ப் புலவராக இருந்தார். இலக்கியத்தில் அவர்பெயர், மருத்துவன் தாமோதரனார் என்ற அடைமொழியோடு விளங்குகின்றது.

இன்றோ காலம் மாறிவிட்டது. நாகரிகம் வளரவளரத் தூய்மை ஒழுங்கும் குறைவதைப் பார்க்கிறோம். உணவில், உழைப்பில், உறக்கத்தில், கட்டுப்பாடும் ஒழுங்கும் தளர்ந்து விட்டன. அதனால் இல்லந் தோறும் நோயாளர்கள் மிகுகின்றனர்; வீதிதோறும் டாக்டர்கள் நிலைக்கின்றனர். ஆஸ்பத்திரியே "ஆண்டவன்" சந்நிதி [என்றெண்ணி அன்றாடம் வலம்வரும் அபாக்கியவான்களைப் பார்க்கிறோம். டாக்டர்களையே தெய்வங்களாகக் கருதுகிறார்கள். அதனால்தான் என்னவோ, இன்றைய டாக்டர்களில் பலர், தங்களிடம் சரணடையும் நோயாளிகளைத் தங்கள் திருவடி நிழலிலேயே வாழுமாறு செய்கிறார்கள். ஆம், பக்தர்களை விட்டுவிடப் "பரமனுக்கு" மனம்வருமா? நோயாளர்கட்கு டாக்டரின் திருவடிகளே இறைவனடிகளாக உள்ளன. அந்த அடிகளே சிக்கெனப் பிடித்துப் பிறவிக்கடலைத் தாண்டிவிட முடியும் என்று கனவு காண்கிறார்கள்! என்னே அறியாமை!

உடம்பை வளர்ப்பதென்றால் என்ன என்பதையும் பலர் உணரவில்லை. நாவின் சுவையை வளர்ப்பதே உடம்பை வளர்ப்பதாகக் கருதிக் கொண்டு அந்தச் சுவை வேட்கையைத் தணிக்க எல்லா வகையாலும் முயல்கிறார்கள். பசி கேட்பதற்கேற்ப உணவு உண்ணுமல் நாக்குக் கேட்பது போல உண்ண அலைகிறார்கள். அதனால் உண்டிச்சாலைகளை நாடுகிறார்கள். "ஒட்டலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", என்று கருதுகிறார்கள்!

"ஓட்டலி"ல் நாற்காலியில் அமர்ந்து மேசைமேல் எவர்சில்வர் தட்டில் நாக்கு விரும்பியவாறெல்லாம் சிற்றுண்டி வைத்து அருந்துகிறார்கள். ஒரு கணம் அந்தச் சிற்றுண்டி தயாராகும் அடுக்களைப் பகுதியைப் பார்ப்பார்களானால்.........? பாவம், அப்போதும் உணரமாட்டார்கள்! நாக்கு முன்னே நீட்டிக் கொண்டிருப்பதால், அறிவை அது மடக்கிக் கட்டுப்படுத்தி விடுகிறது.

'பசி, ருசியறியாது' என்பது உண்மை. அதனினும் உண்மை, 'சுவை சுத்தமறியாது' என்பது. உடம்பின் நலனையும் புறக்கணித்து நாக்கின் சுவைக்கு அடிமையாகிவிட்டவர் எண்ணிலர். சுவை இன்பத்துக்காக வேண்டி, உடலுக்கு ஆகாததையும் உண்டு, அது செரிக்க வேண்டி மருந்தும் உண்ணும் மகானுபாவர்களும் வாழ்கிறார்களே!

> **பணத்தின் - பயம்**
>
> "எங்கள் குடும்பத்தில் செலவு மிகுந்து கொண்டே யிருந்தது. ஒரு காசுகூட இல்லாத நிலை வந்துவிடக் கூடும் என்று எதிர் பார்த்தேன். பணமும் பிற உடைமைகளும் இக்காலத்தில் பயனுள்ளவையானாலும்,வாழ்க்கையில் நீண்ட பயணம் செய்ய விரும்புகிறவனுக்கு இவை சுமையாகவே இருக்கின்றன. பணம் படைத்தவர்கள் ஆபத்தான செயல் முறைகளில் ஈடுபடமாட்டார்கள்; தங்கள் உடைமைகளும் பணமும் போய்விடுமே என்ற அச்சம்".
>
> [நேரு; சுயசரிதை—பக்கம் 478]

பெரும்பாலான பெற்ருேர்கள், நல்லது செய்வதாக எண்ணித் தங்கள் மக்களையும் நாச்சுவை யில் இன்பங்காணுமாறு செய்து விடுகிருர்கள். அன்போடு வளர்ப்பதாக எண்ணிப் பிள்ளை களைப் போதிய உழைப்பு உழைக் காமல் பார்த்துக் கொள்கிருர் கள்!! பெண்களையும் இப்படியே வளர்த்து விடுகிருர்கள்.

முன்னே ஆண்களில் மட்டுமே மிகுதியான நோயாளிகள் இருந் தனர். இன்ருே பெண்ணிடையே யும் அது பரவிவிட்டது. குடும் பத்தின் மாட்சியாக விளங்க வேண்டியவளே இன்று நோயாளியாக இருக்கிருள் என் ருல் அந்தக் குடும்பம் மகிழ்ச்சி யாக விளங்க முடியுமா?

இதனையெல்லாம் குடும்பப் பெற்ருேர்களும் நாச்சுவை நாடும் காளையரும் நங்கையரும் எண்ணிப் பார்க்க வேண்டும். உடம்பை நாம் புறக்கணித்தால் நம்மை அது புறக்கணித்துவிடும். உடம்பு நோய்வாய்ப்பட்டால் பொறிகள் கெடும்; நினைவு குன் றும்; அறிவு மங்கும்.

பொறிகள்தான் அறிவின் வாயில்கள். அந்தப்பொறிகள் கெட்டால் அறிவு சிறக்காது. அறிவு சிறக்க வேண்டும் என் பவன் பொறிகளை—புலன்களைக் கூர்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். பொறிகள் வளமாக வும், புலன்கள் கூர்மையாகவும் இருக்க வேண்டுமானுல் அவை களை இடமாகக் கொண்ட உடம்பை முதலில் நோயின்றிக் காக்க வேண்டும். உடல் நலந் தான் "அறிவின் வேர்" என்ற தெளிவு வேண்டும்: வேரைக்காப் பவனே செடியைக் காப்பவனு வான். அதனுல்தான் திருமூலர், "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே", என்ருர்.

---

*"வீண் அரட்டைப் பேச்சு என்பதை எவரும் ஒப் புக் கொள்வதில்லை; ஆனுல் எல்லோரும் அதில் இன் பம் காண்கிருர்கள்."*

—Joseph Conard.

x x x

*"ஒருவன் மற்றவனைவிடச் சிறந்த நூலை எழுதினு லும் சரி, சிறந்த அறிவுரை கூறினுலும் சரி, சிறந்த எலிப் பொறி செய்தாலும் சரி, அவன் காட்டின் நடுவில் குடியிருந்தாலும், அவனைத் தேடி உலகம் ஓடிவரும்."*

—எமர்சன்.

x x x

*"தன் உடல் நிலையைப் பற்றி மிகுந்த கவலைப்பட் டுக் கொண்டிருப்பவன் உடல் நலத்துடன் இருக்க மாட்டான்; தன் ஆன்மாவைப் பற்றி மிகுந்த கவலைப் படுகிறவன் உண்மையில் நல்லவனுகவும் இருக்க மாட்டான்."*

—J. B. S. ஹால்டேன்.

## இலக்கியப் பகுதி :

# வளர வேண்டாமா?

[மனசை ப. கீரன் பி.ஏ.]

*[தன்னைப் பற்றியே உயர்த்திப் பேசுவது தற்புகழ்ச்சி. இது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை. இது தன் நாடு, தன் மொழி, தன் மதம், தன் சாதி—முதலியவற்றிற்கும் பொருந்தும். இது போலவே தன்னையே இகழ்ந்து பேசிக்கொள்வதும் (நினைப்பதும் கூட) சிறப்பல்ல. செயலாற்றுவதுதான் சிறப்பு. "வாய்ச் சொல் வீரர்களாக இருக்க வேண்டாம், இலக்கியத்தை வளர்ப்போம்"—என்கிறார், கட்டுரையாளர்.]*

'தாய்த் தமிழுக்குப் பழம் பெருமைதான் உண்டு; நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதில் ஓர் பெருமையில்லை; இப்போது தமிழன்னை அழுது கிடக்கிறாள்!' என்பன போன்றவை பலராலும் சொல்லப்படுகின்றன. ஓரளவிற்கேனும் உண்மையின் பாற்பட்ட இத்தகைய கூற்றுகளுக்குக் கழுவாய் காண வேண்டாமா? தமிழ்த் தாய் வளர வேண்டாமா ?...அதற்கான ஆக்கப் பணிகளையும் புதுப்புதுத் துறைகளில் தமிழ்பொலிந்துவளரச் சில வழிகளையும் காண்போம்.

### ஊக்குவதும் தாக்குவதும்

பெரும்பாலும் ஊக்க ஊக்க ஓங்குவதும், தாக்கத் தாக்கத் தாழ்வதும் இயல்பு. ஒருவனை 'மக்குப் பயலே!' என்றால், அவன் உள்ளம் குன்றி ஓங்க வழியின்றிச் சோம்பிப்போவான். அவன் அறிவிலியாகவே இருந்தாலும் 'நீ அறிவாளியாக வேண்டும்; கெட்டிக்காரனாக இருக்க வேண்டும்!' என்று வாழ்த்தினால் அவனும் உள்ளம் மலர்ந்து உயர்வான். இதனால்தான் 'ஒழிக!' முழக்கங்கள் ஒழிந்து 'வாழ்க!' முழக்கங்கள் வரவேண்டும், என்று மாண்புள்ளவர்கள் கூறுகிறார்கள்; தீயவற்றைத் தாக்குவதைவிடச் செம்மையானவற்றை ஊக்குவதே சால்புடையதாகும், என்கிறார்கள். பொதுவாகவே தாக்குபவர்கள் குறை காண்பதுடனேயே நின்றுவிடுகின்றார்கள்; அதற்குக் கழுவாய் காட்டத் தவறுகின்றார்கள். ஆனால் ஊக்குபவர்களோ குறை காண்கிறார்கள்; அதனை நீக்க வழியை அறிகிறார்கள்; அந்த வழியிலே செல்ல ஆற்றுப்படுத்தி முன்னேற்ற வழிக்கு வழிகாட்டி ஆகின்றார்கள். குறையை மட்டும் கூறுவதால் உள்ளம் குன்றி ஒடுங்கிப்போதல் கைகூடுமே ஒழிய, பெரும்பாலும் நல்ல பயன் கிடைப்பதில்லை. மேலும், தாக்குவதில் நாட்டின் படைப்பாற்றலும் விழலுக்கிறைத்த நீராக வீணாகின்றது. இதனைவிட்டு, நல்லவைகளைக் காட்டி, விளக்கத்தைத் தூண்டு

-வது' போல ஊக்கிவிட்டால் நாட்டில் நலங்கள் நிறையும்; நலிவுகள் நம்மை அறியாமலேயே நலிவுற்றுப் பின்னணியிலே ஒதுங்கி அழிவு இருளிலே கலந்துவிடும்; நாட்டின் படைப்பாற்றல் வீறுவது குறையும்.

ஆகவேதான், தமிழ்த் தாய் அழுகின்றாள்; உருவழிந்து பொலிவிழந்து நிலை கலங்கிக் கிடக்கின்றாள், என்றெல்லாம் அவளது திருவோலக்கக் காட்சியினை இருள்கூட்டிப் படம் பிடித்துக் காட்டுவதால் நலத்துடன் இருப்பாளா? இத்தகைய கூற்றுகளைத் தவிர்த்து இப்படிச் செய்து, இன்னவாறு நடந்தால் தமிழன்னை மகிழ்ந்து சிரித்துப் பொலிவாள் என்றால் மாண்புள்ள தமிழன்னை பெருஞ் சிறப்படைய மாட்டாளா? என்னும் வினாக்களை ஆய்ந்து செயல்பட வேண்டும். மாண்பற்றதென ஒன்றைத் தாக்கித் தூற்றிப் பேசிக் காலம் கழிப்பதினும் மாண்புள்ள புதியவைகளைப் படைத்து வளர்ந்தோங்கி மாண்பற்றவை கால வெள்ளத்திலே கரைந்து துருகி மறையச் செய்ய வேண்டும். இதனால் நல்ல இலக்கியங்கள் மலரும்; நாடும் நலம் பெறும். எனவே தாக்கும் நெறியைவிட ஊக்கும் நெறியே தமிழ் வளரப் பெருநலன் விளைப்பதாகும்.

## மெய்யும் பொய்யும்

'இலக்கியம் காலத்தின் கண்ணாடி' என்பதுபோல, 'உண்மையின் உருவமே உயர்ந்த இலக்கியம்' என்று அறுதியிட்டுச் சொல்லலாம். ஆங்கிலக் கவிஞன் 'உண்மையே அழகு; அழகே உண்மை' என்பதும் உண்மையின் உயர்வை உள்ளபடி உரைப்பதாகும். எனவே

> ### தொழில் துறை ஏடுகள்
>
> பிரிட்டனில் தொழில்துறை சம்பந்தமாக 6000 பத்திரிகைகள் (மாத - வார சஞ்சிகைகள்) வெளியாகின்றன. 'கார்டிஸ் பொடானிகல் மாகசின்' என்பது 1787 லிருந்து வெளி வருகிறது. 'தி ஏரோப்ளேன்' 1911 லிருந்து; 'தி ரெயில்வே கெசட்' 1835லிருந்து; 'தி பிரிட்டிஷ்மெடிகல் ஜர்னல்' 1840 லிருந்து. விஞ்ஞானம் விரிவடைந்து வருவதனால், ஆண்டுதோறும் புதுப்புது தொழில்துறை சஞ்சிகைகள் வெளிவருகின்றன.

தான் உண்மையின் அடிப்படையாகப் பிறந்த இலக்கியங்கள் என்றென்றும் உயிருள்ளவையாக ஒளிர்கின்றன.

ஆனால் இந்நாளில் உண்மைக்குப் புறம்பானவையும், உண்மையென அறியப்படாதவையும் இலக்கியங்களின் கருவாக இல்லாமல் இல்லை. நாளையப்பயிராய், இன்றைய முளையாய் உள்ள குழந்தைகளின் உள்ளமும் கெட்டுப் போகுமாறு பேய்—வேதாளம்—பூதம்—ஆவி எனப்படுபவைகளைக் கதையின் தலைவர்—தலைவியாக வைத்து எழுதுகின்றார்கள்; புராணங்களைப் புகட்டுகின்றார்கள்; உண்மையின் மேல் அறியாமைப் பாசியைப் படியச் செய்கின்றார்கள். இதனால் கற்பனையில் வடித்தெடுத்த அச்சுறுத்தும் 'மாய' உருவங்களால் என்றென்றும் மருண்டு பயந்து நடுங்கிச் சாகின்றார்கள்; நடைப் பிணங்கள் ஆகின்றார்கள். உண்மையை உணர்ந்து நன்முயற்சியுடன் உழைத்து உயர வேண்டியவர்கள் பின்னாட்களில் பொது மனித நிலைக்கும் பின்தங்கி விடுகின்றார்கள். 'இந்நிலை சிறுவர்

இதழ்கள், நூல்களில் மட்டுமின்றிப் பெரியோர் நூல்களிலும் மலிந்து உலகநலத்தினை ஒழித்து விடுகின்றது; அறிவியல் வளர்ச்சிக்கு அணைபோட்டுவிடுகின்றது.

புகைகிளம்பிச் சத்தம் போடும் விளையாட்டுத் துப்பாக்கியைச் சுட்டு மகிழ்ந்தாடும் அமெரிக்கச் சிறுவர், பின்னாளில் வேட்டைத் துப்பாக்கியும் பயன்படுத்திக் கொள்ளையும் கொலையும் புரிபவராக வளர்கின்றனர், என்ற உண்மையை அவர்களுடன் வாழ்ந்து ஆராய்ந்து மீண்ட நம் நாட்டின் அம்மையார் ஒருவர் சொல்லியுள்ளார்; கள்வர் திறமையாக மறைந்து திரிந்து களவாடுவதைப்போன்ற தீச்செயல்களின் காட்சிகளைத் திரைப்படக் காட்சியில் காண்பதாலும் சிறுவர் கொடியவராகிக் கெடுவதாகக் கண்டுணர்ந்துள்ளார்.

ஆகவே, இழிவான திரைக் காட்சிகளும் கீழான நூல்களும் கொள்ளும் இடத்தை நல்லவைகள் பிடித்துக்கொள்ள வேண்டாமா? மர்மக் கதைகளும் பேய்-வேதாளக் கதைகளும் புராணங்களும் ஒழிந்து அறிவினையும் நல்ல பண்புகளையும் தூண்டும் எழுத்தோவியங்கள் மிக வேண்டாமா? உள்ளமும் அறிவும் பண்பாடும் செம்மையுறவேண்டாமா? பொய்யான, கற்பனைப் புனைகதைகள் பிடித்துள்ள விரும்பத்தகாத இடத்திலெல்லாம் மெய்க் கருத்துக்களைவிளக்கும் மேன்மை இலக்கியங்கள் வீற்றிருக்க வேண்டாமா? நாமும் சிறுவர் உலகமும் சிறப்புறவேண்டாமா?

இலக்கியங்கள் பற்பலவகையான மேன்மைக் கலையாய் வளர வேண்டும் என்பது எந்நாட்டவரும் விரும்பும் ஏற்புடைய எண்ணமாகும். இதனால்தான் கருத்து வேற்றுமைகளையும் புதுமை மாற்றங்களையும் போற்றி 'நல்லவைகளைப் புரந்தர வேண்டும். அவரவர்கள் தத்தம் வேற்றுமைக் கருத்துக்களைச் சமூகத்தின் முன்னிலையில் வைக்க உண்மையான உரிமை விளங்க வேண்டும். நல்லவைகளைச் சமூகம் ஏற்கும்; அல்லவை தாழ்வுற்றுத் தோற்கும். ஆகவேதான் கருத்துக்களில் வேற்றுமை மாற்றங்களைச் சான்றோர்களின் உள்ளம் என்றென்றும் எதிர்பார்க்கும்.

## சொல்லும் செயலும்

> ''சொல்லுதல் யார்க்கும்
> எளிய: அரியவாம்
> சொல்லிய வண்ணஞ்
> செயல்"

என்ற பொதுமறைக் கூற்று உண்மையாய் ஒளிகாட்டி வந்தாலும்,

> ''செயற்கரிய செய்வர்
> பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்''

என்பதைப் போன்று சமூகத்திலும் மொழித்துறையிலும் தலைமை பூண்டவர்கள் செயற்கரிய செயல்களைச் செய்து தம்மைப் போற்றி நிற்கும் நாட்டையும் மொழியையும் வளர்க்கும் ஆண்மைகொள்ள வேண்டும். அவர்கள் குற்றங் குறைகள் இவையிவை என எளிதிலே பட்டியல் போட்டுக் கட்டியங்கூறிக் காலங் கழிப்பதைவிட முன்னேற்றத்திற்கான ஆக்கப்பணிகளைச் செய்ய வேண்டும். இங்கு ஒரு பேராசிரியரின் கருத்தை எடுத்துக் காட்டுவோம்:—''ஒரு மொழியின் சொற்கள் அம்மொழியினரின் பண்பிற்கேற்பவே அமையும். அராபிய மொழியில் 'ஒட்டகம்' என்னும் பொருள்படும் எழுபது–எண்பது சொற்கள் இருக்கும். இது பிற ஒரு பொருட்பன்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# மணவாழ்வில் மனக்கசப்பா?

*[கணவன்-மனைவியரிடையே மனக்கசப்பு ஏற்பட்டு மணவிலக்குச் செய்து கொள்ளப் போகும் அளவுக்கு முற்றுமானால், தம்பதிகளிடையே நேச உறவை ஏற்படுத்தி மணவாழ்க்கையில் மீண்டும் ஈடுபடுவதற்கான புதிய முறை ஒன்றை ஜெர்மானிய "ஓட்டல்" முதலாளி ஒருவர் கையாண்டு வருகிறார். இவர் தமது உண்டிச் சாலையை இந்த "சிகிச்சை"க்காகவே பயன்படுத்தி வருகிறார்.]*

நகர வாழ்க்கையில் அலுத்துப் போனவர்கள் நாடுமிடம் 'டாபர்' நதிக்கரையிலுள்ள ரோதன்பர்க் நகரமாகும். இந்தப் பழைய நகரிலுள்ள பழங்கால கோட்டை, கொத்தளம், சந்து, பொந்துகள் இவை எல்லாவற்றிலுமே உல்லாசப் பிரயாணிகள் ஒரு வசீகரத்தைக் காணுகிறார்கள். இந்த நகரில் சுமார் 12,000 பேரே வாழ்கின்றனர். மணவாழ்க்கையில் அலுத்துப் போன தம்பதிகளுக்கு இந்த நகர வாழ்க்கை புத்துணர்ச்சியை அளிக்கிறது. மேற்கு ஜெர்மனியில் இத்தகைய வசீகரமான இடம் இது ஒன்றுதான்.

மணவாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டவர்களுக்குப் புத்துணர்வு அளிக்கும் நிலையம் இங்கு உள்ளது. இங்கு எளிதில் யாரும் சென்றுவிடமுடியாது. உல்லாசப் பயண டைரக்டர் பதவியை வகிக்கும் ஷுஸ்டர் என்பவரை முதலில் பேட்டி காண வேண்டும். சலிப்பு ஏற்பட்ட தம்பதிகளை ஒன்று சேர்த்து வைக்கும் "சிகிச்சை நிலையம்" இவரால் ஏற்படுத்தப் பட்டது. ஒருவரை ஒருவர் சந்திக்க வேண்டும், என்ற ஆவலை ஏற்படுத்தி அவர்களை இணைத்து வைப்பதே இங்கு கையாளப்படும் முறை. இத்தம்பதிகள் அவரைக் கண்டு பேசிய பின்பு 136 படிகள்

---

[முன் பக்கத் தொடர்ச்சி]

மொழியினும் மிகுதியாம். அரேபிய வெம்பாலைவனத்தில் பேருதவி புரியும் ஒட்டகம் அவ்வளவு சிறப்பினது என இது உணர்த்தும். நம் செந்தமிழிலோ 'பேசுதல்' குறிக்கும் ஒரு பொருட் பன்மொழியே பிறவற்றினும் மிகுதியாம் இது 'வாய்ச் சொல்லில் வீரரடி!' என்பதை மெய்ப்பிக்கும். இந்நிலை மாறவேண்டும். வருங்காலத்தில் 'செயல்' என்பதன் ஒரு பொருட் பன்மொழிகள் அனைத்தினும் அதிகமாகுமாறு செயல் வீரர்களாக வேண்டும்.

இவ்வாறு உண்மையாகவே தமிழ்த்தாய் தழைத்தோங்க நல்ல ஆக்கப் பணிகளிலே ஈடுபட்டு உழைப்பதனால் நாம் வளர வேண்டாமா? நம் மொழியும் வளர வேண்டாமா?—என்பன போன்ற வினாக்களை எண்ணியெண்ணித் தீர்வுகண்டு செயற்பட வேண்டியது சிறந்த உள்ளம் படைத்த கடமை வீரர்களின் ஆண்மைக்கு ஓர் அறைகூவலாகும்.

ஏறி மேலேயுள்ள ஒரு மாடி அறைக்குச் செல்லவேண்டும். அங்குள்ள அமைதிச் சூழ்நிலை, கண்கவர் காட்சிகள், இருவர் மட்டுமே தனிமையாக இருக்கும் வசதி, இவ்வளவும் வாழ்க்கையில் சலிப்புற்ற தம்பதிகளை ஒன்ருக நிச்சயம் இணைத்தே தீரும். தம்பதிகளுக்கிடையே பிணக்கு ஏற்பட்டால் அவர்கள் 136 படிகள் இறங்கி வந்தாக வேண்டும்.

இந்த உச்சாணி அறை, "ஓட்டலின்" ஒரு பாகமாக உள்ளது. தம்பதிகளிடையே ஒற்றுமை ஏற்படுத்தக் கையாளப்படும் முறை மனேதத்துவ வழிதான். இம்முறை முழு வெற்றியை அளிப்பதாக ஷுஸ்டர் கூறுகிருர். இங்கு டென்னிஸ், குதிரை ஏற்றம், சறுக்கு விளையாட்டு, ஓவியம் வரைதல், உடல் பயிற்சி ஆகியவைகளுக்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. கணவன்மார்கள் மீன் பிடிக்கப் போகும் போது மனைவிமார்கள் சித்திரம் வரைவதில் ஈடுபடுகிருர்கள். இப்படி கணவனும் மனைவியும் பிரிந்து மீண்டும் சந்திக்கும் போது தங்கள் தங்கள் அனுபவத்தைப்பற்றி ஆர்வத்துடன் விவாதிக்கிருர்கள். இதன் மூலம் அவர்களிடையே மனக் கசப்பு மறைந்து நேச உணர்ச்சி ஏற்படுகிறது. சிலர் நடை பழகவேண்டும், சிலர் இன்ன விளையாட்டுக்களைத்தான் விளையாடவேண்டும் என்றெல்லாம் ஷுஸ்டர் நிர்ணயிக்கிருர். சாப்பிடும்போது கணவனும் மனைவியும் கட்டாயம் ஒன்ருகச் சேர்ந்தே உணவருந்த வேண்டும் என்று அவர் கட்டாயப் படுத்துகிருர். "சேர்ந்து எப்போது சாப்பிடுகிருர்களோ அப்போது அவர்களிடையே பூசல் எதுவுமிராது", என்பது ரோதன்பர்க்கில் வழங்கிவரும் பழமொழியாகும். ரோதன்பர்க் இன்று தான் சலிப்பு ஏற்பட்டுள்ள தம்பதிகளைச் சேர்த்து வைக்கிறது என்பதில்லை. முன்காலத்திலேயே தம்பதிகளைச் சேர்த்து வைக்க சில கடின முறைகளை இந்த நகரம் கடைப்பிடித்துள்ளது. இந்த நகரில் அன்று நீதி வழங்கிய இடத்தை "சித்திரவதை மண்டபம்" என்றே வர்ணிப்பதுண்டு.

எந்தக் கணவனுவது அவனுடைய மனைவியிடம் அடிபட நேர்ந்தால் அவன் வீட்டுக் கூரையை அந்நகர மக்கள் பிரித்துப்போட்டு விடுவார்கள். மனைவி தன் கணவனை அவமதித்தால் அவனைக் கழுதை மீது பின்புறமாக (அதர்வ்து வாலைப் பார்க்க) உட்கார வைத்து நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வருவார்கள். கணவன், மனைவி அடிப்பதை பட்டுக்கொண்டு சும்மா இருந்திருந்தால் அவன் அக்கழுதையின் கயிற்றைக் கையில் பிடித்துக்கொண்டு முன்னுல் செல்லவேண்டுமாம்.

இப்போது ஆண்களோடு பெண்கள் சரிசமமான வாழ்க்கை வாழ்வுதால் இத்தகைய கடுமையான முறைகள் கைவிடப்பட்டு விட்டன. புதுமுறைகள் நல்ல பலன் அளிக்கின்றவென்றும் தெரிகிறது. இப்புது முறைகளுக்கான கட்டணங்களும் "ஓட்டல்" கட்டணத்துடன் வசூலிக்கப் படுகின்றன. நகரில் பிரிந்த தம்பதிகளும் ஒன்று சேர்ந்த தம்பதிகளும் கையில் தூரிகையுடன் காணப் படுகின்றனர்.

"ரோதன்பர்க் புத்துணர்ச்சி அளிக்கும் சிகிச்சை" இப்போது உலகப் புகழ் பெற்றுவிட்டது. இந்த நிலையம் எப்படி வேலை செய்கிறது என்பதைப் பார்க்கவே ஏராளமான மக்கள் வருகின்றனர்.

[சிபில் ஷீர்.—யு.பி.எஸ்.]

ப. நா. பாலசுப்பிரமணியன், B.Sc., D.H.M.P.

# நினைவாற்றல்

[நினைவாற்றல் எல்லா மனிதர்களுக்கும் முக்கியமான தேவை. சிறிய - பெரிய நடவடிக்கைகளில் கூட மறதியினுல் பல இடையூறுகள், சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. இயற்கையிலேயே சிலருக்கு மிகுந்த நினைவாற்றல் இருக்கும்; அப்படியில்லாதவர்கள் பழக்கத்தினுல் இந்த ஆற்றலைப் பெற முடியும். அது எப்படி?]

நாள்தோறும் நாம் பலவற்றையும் படிக்கிறேம். படித்தவற்றில் பலவற்றை நினைவில் இறுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயம் நமது வாழ்க்கையில் உண்டு. படித்த, அல்லது அறிந்த யாவும் நினைவில் இருக்க நியாயமில்லை. நினைவில் இருக்க வேண்டிய நியதியுமில்லை. அவரவருடைய விருப்பு, வெறுப்பு; தேவை ஆகியவற்றின் அடிப்படையில் படித்தவற்றையும் அறிந்தவற்றையும் நினைவில் இருத்திக் கொள்வது பலரது இயல்பு. நாம் படிக்கும் அல்லது அறியும் யாவுமே நம் மூளையில் பதிக்கப் படுவது என்னவோ உண்மை தான். ஆயின் தேவையான நேரத்தில் நினைவிற்குக் கொணரும் அரிய ஆற்றல் இயற்கையிலும் பழக்கத்தாலும் ஏற்படுவதே.

கடன் வாங்கியவர், ''கடன் கொடுத்தவர் எனக்குக் கொடுத்ததை மறக்கமாட்டாரா, அதற்கேற்ப அன்ஞரது நினைவு மழுங்கக் கூடாதா?" என்றெல்லாம் எண்ணுவது உண்டு! எத்தனை பேர் கூட்டமாகச் சென்று நினைத்தபடி ''ஆர்டர்'' செய்து சாப்பிட்டாலும் இறுதியில் சிறிதும் தவறின்றி ''பில்'' போடும் ''சர்வரின்'' நினைவாற்றலை என்னென்பது? தேர்வு மண்டபத்தில், மாணவர் தாம் படித்தவற்றை நினைவிற்குக் கொணர மேற்கொள்ளும் மோட்டுவளையைப் பார்த்தல், தாடியைத் தடவுதல், தலையைப் பிய்த்தல் போன்ற செயல்கள் நினைவாற்றலின் திருவிளையாடல்களே!

## நினைவு

நாம் பலவற்றையும் படிக்கின்றேம். பலவற்றைப்பற்றி அறிகின்றேம். இங்ஙனம் நாம் படித்தவற்றிலும் அறிந்தவற்றிலும் எவை நீண்டு நிலைத்திருக்கின்றனவோ அவற்றை நினைவில் இருப்பவை என்கிறேம். இத்தன்மை நினைவு எனப்படும். படித்ததோ அன்றி அறிந்ததோ நினைவில் நிற்பது பலவற்றைப் பொறுத்துள்ளது. அவற்றை இங்கு ஆய்வோம்.

எதைப் படித்தாலும் புரிந்து கொண்டு படிக்க வேண்டும். மேலெழுந்த வாரியாகப் படிக்கலாகாது. படிப்பது நினைவில் நிற்க வேண்டுமானுல் புரிந்து கொண்டு படிக்க வேண்டும்.

புரிந்துகொண்டு படிப்பினும் ஒன்றைத் தொடர்ந்து படிப்பதால் படித்தவற்றை நினைவில்

இறுத்திக்கொள்ள இயலாதிருக்கலாம். எனவே படிக்கப்படும் பொருளின் தன்மை, படிப்பவரது மனநிலை ஆகியவற்றிற்கு ஏற்ப, படிப்பதைத் தொடர்ந்தோ, அன்றி இடையில் நிறுத்தி நிறுத்தியோ மேற்கொள்ளலாம்.

நீண்ட ஒன்றை ஒரே மூச்சில் படிக்கவேண்டும் என்றில்லை. பல பகுதிகளாகப் பிரித்துப் படிக்கலாம். இங்ஙனம் படிப்பதால் படிக்கும் சங்கதி மனத்தில் பசுமரத்து ஆணிபோற் பதியவும், நீண்டு நினைவில் நிற்கவும் வாய்ப்புண்டு.

படித்தவற்றை (நினைவிற்குக் கொணர்ந்து) எண்ணிப் பார்த்து திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்ப்பதால் நினைவாற்றலை வளர்க்கச் செய்யலாம். தேவைக்கதிகமாகவே ஒன்றை அடிக்கடி படிப்பதால் அஃது நம் மனத்தில் நிலைத்து நிற்கும் அழியாத் தன்மை அடைந்து விடுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருத்தல் அவசியம். விருப்பமிருப்பின் வெற்றி நிச்சயம்.

படித்தவற்றை நினைவில் நிறுத்த திரும்பத் திரும்ப அவற்றைப் பார்த்தல் அவசியம். இதனால் படித்தவற்றை எளிதில் மறப்பதைத் தவிர்க்கலாம். படித்தவற்றை மீண்டும் மீண்டும் முகஞ்சுளிக்காது படிப்பதாலும் நினைவில் நிறுத்திக் கொள்ள முடியும். திரும்பப்படித்தல், எண்ணிப் பார்த்தல் ஆகிய இரண்டும் அளப்பரிய நன்மை பயப்பவை.

## மறத்தல்

நாம் படித்தவற்றிலும், அறிந்தவற்றிலும் எல்லாம் நினைவில் இருப்பதில்லை. நாளடைவில் பலவற்றை மறந்து விடுகின்றோம். மறத்தலும் ஒருவிதத்தில் நன்றே! எல்லாவற்றையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய தேவையுமில்லை. மேலும், நமக்குப் பிடிக்காதவைகளை மறந்து விடுவதால் வீணே மனவருத்தமடைய வேண்டியதில்லை. எனவே மறைமுகமாகவேனும் மறதியை நாம் போற்ற வேண்டியவர்களாயுள்ளோம்!

எவ்வளவுதான் நன்றாகப் படித்தாலும் அடிக்கடி பயன்படுத்தப் பட்டாலொழிய அஃது நினைவில் இருக்காது! காட்டாக, கணிதச் சமன்பாட்டை (equations)ச் சொல்லலாம். அடிக்கடி இச் சமன்பாட்டைப் பயன்படுத்தி கணக்குகளைச் செய்தாலன்றி நினைவில் நிற்காது.

முன்னர் படித்ததற்குச் சிறிதும் சம்பந்தமில்லாத பிறிதொன்றைத் தொடர்ந்து படிப்பதாலும் முன்னர் படித்தது மறந்து போக வாய்ப்புண்டு

மூளைக்கு அதிர்ச்சி ஏற்படுவதாலும் மூளையில் பழுதேற்படுவதாலும் மறத்தல் ஏற்படலாம்.

## வழிகள்

நினைவாற்றலை வளர்க்க மருந்து தேடி அலைபவர் எண்ணற்றவர். காசு கொடுத்து வாங்கும் பொருளல்ல, நினைவாற்றல். மருந்து கொண்டும் வளர்க்க முடியாது! காண்பவற்றிலும், படிப்பவற்றிலும் கவனமுடன் கருத்தூன்றுவதால் மட்டுமே நினைவாற்றல் வளரும். எவற்றிலும் மனம் ஊன்றி ஒன்றுபட வேண்டும்.

வயதான காலத்தில் நினைவாற்றல் மழுங்கக் காரணம், நரம்புத் தளர்ச்சியே. நரம்பு

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# புரோகிதர் புரட்டு

*[மிக அருமையான கட்டுரை இது. புரோகித (வைதீக) வகுப்பில் பிறந்து, அதன் சூழ்ச்சிகளை நன்கறிந்து, வடமொழிப் பயிற்சியும் பெற்று, ஆனாலும் அறிவியல் கருத்துக்களை ஏற்றுக் கொண்டுள்ள ஒருவர் எழுதுகின்ற கட்டுரை. புரோகிதர் புரட்டுகளுக்கான வடமொழி நூல் ஆதாரங்களை எடுத்துக்காட்டி அலசிக் காட்டுகிறார், மொழிபெயர்ப்பாளர். புரோகிதப் புரட்டில் ஆழ்ந்து மடமைச் சேற்றைப் பூசிக் கொண்டிருக்கும் மக்களைக் கரையேற்றக் கூடிய சிறந்த கட்டுரை.]*

உலகத்தின் எந்த நாட்டின் வரலாற்றை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள், மதத் தலைவர்களின் கையில் அரசியல் அதிகாரம் முழுவதும் சிக்கிக் கொண்டுவிட்ட காலம் ஒன்று கட்டாயம் இருக்கும் ஐரோப்பாவில் போப்பாண்டவர் எத்தனையோ பேரை மதவிரோதிகள் என்று கூறி படுகொலை செய்வித்திருக்கிறார். இந்தியாவில் இதே உரிமையைப் புரோகித வர்க்கம் பெற்றிருக்கிறது. யாத்திரை கிளம்ப வேண்டுமா, வீடுகட்ட வேண்டுமா, திருவிழா அல்லது திருமணம் நிகழ்த்த வேண்டுமா, வியாபாரம் தொடங்க வேண்டுமா, புரோகிதர் வராமல் நடக்காது.

துவக்கத்தில் எந்த வேலையும் செய்வதற்கு எளிதாகத்தான் இருக்கும்; எந்த மனிதனும் அதைத் தானாகவே செய்து கொள்ளும்படியாகத்தான் அது அமைந்திருக்கும். ஆனால் அதே தொழில் வளரவளர ஒரு தனி வகுப்பு அதனைத் தனது சொந்தத் தொழிலாக ஆக்கிக்கொண்டு

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மண்டலத்தில் உண்டாகும் சோர்வும் நினைவு மழுங்கக் காரணமாயுள்ளது. இளமையில் நினைவாற்றல் சிறப்புற்றிருக்கக் காரணம், மனத்தை அலைக்கழிக்கும் விருப்பு, வெறுப்புகள் குறைவாயிருப்பதே. வயது ஏறஏறக் கவலைகளும் கூடுகின்றன. விருப்பு வெறுப்புகளும் அதிகமாகின்றன. இயற்கையாக நினைவாற்றல் குறைகின்றது.

சிரசாசனம் (தலைகீழாக நிற்றல்) செய்வதால் நினைவாற்றல் வளர்வது அனுபவம் அறிவிக்கும் உண்மை. இருப்பினும் விருப்பமுடன் முறைப்படி கருத்தூன்றிப் படிப்பதாலும் பார்ப்பவை, கேட்பவைகளில் கவனம் செலுத்துவதாலும் அனைத்தையும் அடிக்கடி நினைவுகூறுவதாலும் நினைவாற்றல் வளர்வது உறுதி.

விடுகிறது. காலம் செல்லச் செல்ல அத்தொழிலைச் செய்வதில் அவ்வகுப்பு தனித்திறமை பெற்றுவிடுகிறது. ஏனைய வகுப்பினர் அந்தத் தொழிலை கற்றுக் கொண்டுவிடக் கூடாதே என்பதற்காக அவர்கள் அதனை மிகவும் கஷ்டமானதாக ஆக்கிவிடுகிறார்கள். வழக்கறிஞர்கள், வியாபாரத் தரகர்கள், மருத்துவர்கள் ஆகிய எல்லோரும் இப்படிப்பட்டவர்களே. வழக்குகள், வாணிபம் அல்லது மருத்துவம் பற்றிய எந்த வேலையானாலும் சரி, மற்றவர்கள் இவர்களிடம் தான் வந்து ஆக வேண்டும் என்ற நிலையை இவர்கள் தோற்றுவித்து விடுகிறார்கள். இவர்கள் தங்களுடைய தொழில் ரகசியங்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவதில்லை.

மத விஷயங்களில் புரோகிதர்கள் இதே வேலையைத் தான் செய்து வந்திருக்கிறார்கள். இந்தியர்கள் பொதுவாகவே மதத்தில் மிகுந்த பற்றுதல் உடையவர்கள். புரோகிதத் தொழில் என்றுமே பிராமணர்கள் கையிலேயே இருந்து வந்துள்ளது. பிராமணர்கள் இந்தத் தொழிலை மதத்தைப் பரப்புவதற்காகவோ அல்லது சமூகத்திற்கு நல்லது செய்யவேண்டும் என்ற நோக்கோடோ மேற்கொள்ளவில்லை. இதன் மூலம் அவர்களுடைய பிழைப்பு எளிதாக நடந்து வந்தது. புரோகிதம் செய்வது பிராமணர்களின் தொழில். மனு நீதிப்படி பிராமணர்களுக்காக விதிக்கப்பட்டுள்ள ஆறு கடமைகளில் யாகங்கள் நடத்துவதும், பாடம் சொல்லித் தருவதும், தானம் பெறுவதும் வயிற்றுப் பிழைப்புக்கான சாதனங்கள் தானே? தனக்கு என்று ஒரு தொழில் ஏற்பட்டவுடனேயே மனிதனுக்கு அத்தோடு தன்னலமும் பிறந்துவிடுகிறது. உடனே அவன் தனது தொழிலை தொழிற் கண்ணோட்டத்தோடு பார்க்கத் தொடங்கிவிடுகிறான். இதன் காரணமாகத்தான் புரோகிதர்கள் சமுதாய நலனைப்பற்றிக் கவலைப்படாமல் தங்கள் சந்ததியாரின், தங்கள் இனத்தவரின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு சுவையற்ற, பொருளே இல்லாத-புரியாத, சடங்குகளை உண்டாக்கத் தொடங்கினார்கள்.

எந்த நோய் ஏற்பட்டாலும் மருத்துவர் வழி சொல்வதில்லையா? எப்படிப்பட்ட வழக்கானாலும் வெற்றிபெற்றுத் தருவதாக வழக்கறிஞர்கள் கூறுவதில்லையா? அதே போல, "எப்படிப்பட்ட விருப்பங்களையும் எங்களால் நிறைவேற்றித்தர முடியும்", என்று புரோகிதர்கள் கூறத் தொடங்கினார்கள். மோட்சத்திற்கு அனுப்பவும், புண்ணியம் சம்பாதித்துத் தரவும் தான் அவர்களால் முடியும் என்பதில்லை; அவர்களால் பெண்களை வசப்படுத்த முடியும்; எதிரிகளை அழிக்கமுடியும்; குழந்தையில்லாதவர்களுக்கு குழந்தை தரமுடியும்; போரிலே வெற்றி வாங்கித் தரமுடியும்; இன்னும் இது போலப் பல. வாணிபத்தில் லாபம் சம்பாதிக்க, வழக்கிலே வெற்றிபெற, தேர்வுகளில்-எண்கள் பெற, பூசைகள் நடத்தி விட்டு வருபவர்களை நாம் பார்ப்பதில்லையா? "பாரஸ்கர கிருஹ்ய சூத்திரம்" என்ற நூலில் வீட்டிலிருந்து வேலைக்காரன் ஓடிப் போய்விட்டால் அவனை எப்படி வசப்படுத்துவது என்பதற்குக் கூட வழி சொல்லப்பட்டிருக்கிறது! "உயிருள்ள மிருகம் ஒன்றின் கொம்புகளை நம்முடைய மூத்திரத்தால் நனைத்து, அந்த வேலைக்காரன் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது அம்மிருகம்

அவ்வேலைக்காரனை மூன்றுமுறை சுற்றி வரும்படியாகச் செய்ய வேண்டும்", என்கிறது அந்நூல்!

## பிராமணர்கள் உயர்ந்த விதம்

மத நூல்களை இயற்றும் பொழுது பிராமணர்கள் தாங்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்பதையும், தாங்கள் மிகவும் இன்றியமையாதவர்கள் என்பதையும் பல்வேறு இடங்களில் வற்புறுத்தியிருக்கிறார்கள். மதச் சடங்குகள் மிகவும் நுணுக்கங்கள் வாய்ந்தவை என்றும், மற்ற இனத்தினர் இதில் தலையிடக் கூடாது என்றும், மற்றவர்களை எண்ணச் செய்யத்தான் இவர்கள் இபபடி எழுதி வந்தார்கள். அப்படி யாராவது துணிந்து முன்வந்தால் சமூகத்தின் பெயரால், சாத்திரத்தின் கட்டளைகளைக் கூறி அவர்களைத் தடுத்து நிறுத்த அவர்கள் முயன்று வந்தார்கள். அரசர்கள் கட்டாயமாகப் புரோகிதர்களை வைத்துக் கொண்டுதான் யாகங்களை நடத்தவேண்டும் என்று பிராமண நூல்களில் கூறப்பட்டுள்ளது. "புரோகிதன் இல்லாமல் அரசன் தரும் உணவை தேவர்கள் புசிப்பதில்லை; எனவே யாகங்கள் செய்யும் பொழுது அரசர்கள் புரோகிதர்களைத் தங்கள் முன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் தேவர் அந்த உணவைப் புசிப்பார்கள்", என்கிறது "ஆத்ரேய பிராமணன்" [8-24] என்கிற நூல். "சதபத பிராமணன்" என்கிற நூலில் புரோகிதனை "மனிதருள் தேவன்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

"தேவர்கள் இரு வகையினர். (தேவலோக) தேவர்கள் முதல்வகை; புரோகிதம் சொல்பவர்களும், மந்திரம் ஓதுபவர்களுமான பிராமணர்கள் இரண்டாவது வகையினர். இவர்கள் 'மனுஷ்ய தேவதைகள்''

### கக்குவான்

இது ஒருவகையான தொற்று இருமல் நோய். இது உலகம் முற்றிலும் பரவியிருக்கிறது; தமிழ் நாட்டில் மிக அதிகம். ஒரு வயதுள்ள குழந்தைகளுக்குத் தான் இது விரைவாகவும் எளிதாகவும் தொற்றும். 10 வயதுக்குமேல் அவ்வளவு எளிதில் பற்றுவதில்லை. பொதுவாக ஒரு தடவை வந்தால் பிறகு வருவதில்லை.

பார்டெட் கெங்கோ (Bordet Gengow) என்ற நோய்க் கிருமிதான் இந்த இருமலுக்குக் காரணம்.

இதைத் தடுப்பதற்குத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளலாம். இந்நோயினால் சாவதைவிட இதனால் உண்டாகும் வலுக் குறைவினால் சாவதுதான் மிகுதி.

சோடாஉப்பை நீரில் போட்டு அடிக்கடி கொடுத்தால் இருமலின் வேகம் குறையும். முதலைக் கறி போன்றவைகள் இதைக் குணப்படுத்தும் என்பது தவறு. மேனாட்டு முறைகளில் எத்தனையோ மருந்துகள் கூறுகிறார்கள்; அனைத்தும் பயனற்றவை.

நோய் இருக்கும்போது எளிதாகச் செரிக்கக் கூடிய உணவு தரவேண்டும். பால்—முட்டை போன்றவற்றைக் கொடுக்கலாம்: தூய காற்றும் சூரிய ஒளியும் மிக நல்லது.

''கலைக்களஞ்சியம்''

—சதபத பிராமணன் (2-212-6) இந்த 'மனுஷ்ய தேவதைகளை மகிழ்விப்பது எப்படி என்ற வழிகள் "கோபத பிராமணன்" என்ற நூலில் கூறப்பட்டுள்ளன.

"தீயிலே அளிக்கப்படும் ஆஹுதிகளைச் சாப்பிடாத தேவர்கள் பிராமணர்கள். தீ மூலமாக அளிக்கப்படுபவைகளை ஏற்றுக்கொள்ளும் தேவர்கள் ஆஹுதிகளால் மகிழ்விக்கப்படுகிறார்கள். மனித உருவில் உள்ள தேவர்கள்—பிராமண புரோகிதர்கள்-தட்சிணையால் மகிழ்விக்கப் படுகிறார்கள். அவர்கள் தாம் மகிழ்ச்சியடைவதோடு தங்கள் எஜமானர்களுக்கும் ஆகாரமும், ஆற்றலும் அளிக்கிறார்கள்."

(மேற்படி நூல் 2-1-6)

## கைக்கூலி

தட்சிணை பெறுவது ஒன்றுதான் புரோகிதத் தொழிலின் அடிப்படையாக இருந்து வந்துள்ளது. தட்சிணைக்குப் பேராசைப் பட்டுத்தான் புரோகிதர்கள் மூட நம்பிக்கைகளையும், வெளிப் பகட்டுகளையும் வளர்த்தார்கள். மதநூல்களில் தட்சிணை மிகவும் கண்டிப்பான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் சம்பளம், கூலி ஆகியவற்றைத் தீர்மானிப்பதில்லையா, அதே போலத்தான் தட்சிணையையும் நிச்சயித்து வந்திருக்கிறார்கள்.

தட்சிணை என்பது வெறும் உழைப்புக் கூலியாக மட்டும் இருந்திருந்தால் அதனை மற்றவர்கள் அடித்துக் கொண்டு போய்விடுவார்களே என்பதற்காக அதைத் தானம் என்றும், சடங்கின் பகுதி என்றும், புண்ணியச் செயல் என்றும் கூறி வந்திருக்கிறார்கள்.

தட்சிணையில்லாமல் யாகம் வெற்றிபெறாது என்றும், தட்சிணை யாகத்தின் துணைவி போன்றதென்றும் முதலிலேயே எஜமானரின் உள்ளத்தில் கருத்துக்கள் ஊன்றப்பட்டுவிடுகின்றன. மகாபாரதத்தில் தட்சிணையில்லாத யாகம் உயிரற்ற சடலத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது. "ஏழை பிணத்துக்கு ஒப்பானவன்; அரசனில்லையானால் நாடு அழிந்துவிடும்; பிராமணனில்லாவிடில் சிராத்தம் நாசமாகிவிடும்; தட்சிணையில்லையானால் யாகமே உயிரற்றதாகிவிடும்," என்று அதில் கூறப்பட்டுள்ளது.

"சதபத பிராமணன்" என்ற நூலில் தங்கத்தைத் தான் தட்சிணையாகத் தரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதற்கான காரணமும் தரப்பட்டுள்ளது. "தட்சிணை யாகத்தீயுடன் சம்பந்தப்பட்டது; எனவே அதுவும் யாகத் தீயைப் போலவே ஒளி பெற்ற பொருளாகத்தான் இருக்கவேண்டும்," என்கிறது அந்நூல்.

"காத்யாயன ஸ்ரோத சூத்ரம்" என்ற நூலில் வெள்ளியைத் தட்சிணையாகத் தருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்படித் தந்தால் ஆண்டு முடிவிற்குள்ளாகவே எஜமானரின் வீட்டில் யாராவது இறந்து விடுவார்கள் என்று பயமுறுத்தப்பட்டிருக்கிறது. இதனுடைய கருத்தும் தங்கத்தையே தட்சிணையாகத் தர வேண்டும் என்பதுதான்!

"ஆத்ரேய பிராமணன்" என்ற நூலில் தட்சிணை யாகத்தின் எருது போன்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது எப்படி எருதில்லாமல் வண்டி ஓடாதோ அதேபோல தட்சிணையில்லாமல் யாகமும் முன்னேறாதாம்!

''சதபத பிராமணன்'' என்ற நூலில் தட்சிணைக் கட்டணம் கொஞ்சம் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் தட்சிணையாகத் தங்கத்திற்கு பதிலாக பசு, துணி, குதிரை ஆகியவற்றைத் தரலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுயநலமே முக்கியம்

இந்தப் புரோகிதர்களுக்கு மதத்திலே எள்ளளவும் நம்பிக்கையில்லை. வியாபாரிகளைப் போலவே இவர்களுக்கும் வருமானத்திலேயே குறி. யாராவது எஜமானர்கள் அழைத்தால் அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்று குழந்தைப் பேறு உண்டாகவும், எதிரிகள் அழியவும், வழக்குகளில் வெற்றி ஏற்படவும் யாகங்கள் நடத்திவிட்டு வந்து விடுவார்கள். அதேநேரத்தில் தங்களுக்கு வருடக்கணக்கில் வேலையில்லாமல் இருந்தாலும், குழந்தைகள் உண்டாகாமல் இருந்தாலும், நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்துகொண்டிருந்தாலும் இவர்கள் தங்களுக்காக ஒருமுறைகூட யாகம் நடத்த மாட்டார்கள். இந்த ஏமாற்று வித்தைகளில் நம்பிக்கை இருந்தால் முதலில் இவர்கள் அவற்றைத் தங்கள் இல்லங்களிலேயே சோதித்துப் பார்க்கலாமே!

புரோகிதர்களுடைய இந்த வியாபாரக் கண்ணோட்டம் இன்று நேற்றல்ல; நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது.

ரிக் வேதத்தில் (9-12-1) கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

''தொழிலாளி முறிந்து போன சாமான்களை எதிர்பார்ப்பதுபோல, மருத்துவர்கள் நோயாளிகளை எதிர்பார்ப்பதுபோல, யாகம் நடத்த யாராவது கூப்பிடமாட்டார்களா என்று புரோகிதர்கள் எதிர்பார்க்கிறார்கள்.''

எஜமானர்கள் என்றென்றும் புரோகிதர்கள் வசத்திலேயே இருக்கவேண்டும்; அவர்கள் எப்பொழுதும் புரோகிதர்களைப் புகழ்ந்தவண்ணம் இருக்க வேண்டும் என்பதற்காக மத நூல்களில் அவர்கள் மிகவும் இன்றியமையாதவர்கள் என்றும், மிகுந்த சக்தி வாய்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

''புரோகிதர்கள், எஜமானன் இறந்து போக வேண்டும் என்று விரும்பினால் உடனே மந்திரத்தைத் தப்பிதமாகக் கூறிவிட வேண்டும். அல்லது மந்திரத்தில் ஒரு அடியை விட்டுவிட வேண்டும். இதன் மூலம் மந்திரத்தின் தூய்மை கெட்டுவிடும். அப்படிப்பட்ட மந்திரம் உடனே எஜமானனைக் கொன்றுவிடும். எஜமானன் கண்ணிழந்து குருடனாக வேண்டுமானால் யாகத்தின்போது மைத்ரா வருண மந்திரத்தைத் தவறாக உச்சரித்து விட்டாலோ அல்லது அதில் ஒரு அடியை விட்டுவிட்டாலோ போதுமானது; அது எஜமானனைக் குருடனாக்கி விடும்''

—(ஆத்ரேய பிராமணன், 3-3)

கூலியாட்களிடம் சரியாக் வேலை வாங்க அதுபற்றி அறிந்த யாராவது ஒருவர் உடன் இருக்க நேர்வது போல, தெரிந்தவர்கள் யாரேனும் அருகில் இருந்தால் தான் இந்தப் புரோகிதர்கள் ஒழுங்காகத் தமது வேலையைச் செய்வார்கள். கல்வியறிவுஉள்ள எஜமானன் முன்னிலையில் இவர்கள் சரியாக வேலை செய்வார்கள். கல்வியற்றவர்கள் கிடைத்தால் அவர்களை இந்தப் புரோகி

தர்கள் எளிதாக ஏமாற்றி விடுவார்கள். இவர்களுடைய இந்த மனப்பான்மையும் புதியதல்ல; நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது.

''எவ்வாறு பாபிகள், கொள்ளைக்காரர்கள் அல்லது திருடர்கள் காட்டிலே பணக்காரர்களைப் பிடித்துக் குழியில் தள்ளி விடுகிறார்களோ அதேபோல யாக விதிகளைச் சரிவர உணராது அதை நடத்தும் எஜமானனை இவர்கள் (பாபக்) குழியில் தள்ளிவிட்டுச் சென்று விடுவார்கள். ''எனக்கே யாகத்தின் விதிமுறைகள் தெரியும்; எனவே தான் அவற்றை அறிந்த புரோகிதர்களைக் கொண்டே நான் யாகங்களை செய்விக்கிறேன்; அதனால் தான் எனக்கு வெற்றி கிடைக்கிறது" என்று பரீட்சித்துவின் குமாரர் ஜனமேஜயன் கூறுவதும் இதனால்தான்''

—ஆத்ரேய பிராமணன்: 8-11

## அடிமையாக்குதல்

''பாவம், இந்த எஜமானர்களின் நிலைமை எவ்வளவு பரிதாபகரமானது! யாகங்கள் நிகழ்த்தாவிட்டால் நன்மை விளையாது என்ற எண்ணத்தைப் பரப்பினவர்களே இந்தப் புரோகிதர்களோ அல்லது இவர்களுடைய முன்னோர்களோதான். பல ஆண்டுகள் உழைத்தாலன்றி கற்றுக்கொள்ள முடியாதவாறு இதன் விதிமுறைகளை இவர்கள் மிகவும் கடுமையாக்கி வைத்து விட்டார்கள். அப்படி யாராவது அதனைக் கற்றுக் கொண்டாலும் அவர்கள் பிராமணர்களின் மூலமாகத்தான் அவற்றை நிகழ்த்த முடியும். எஜமானர்களைக் கடவுளிடம் அனுப்புதல், அவர்களுக்குச் சொர்க்கத்தைக் காட்டுவது, அவர்களுக்கு உணவும் செல்வமும் பெற்றுத் தருவது போன்றவைகளுக்குத் தாங்களே குத்தகை எடுத்து வைத்துள்ளவர்கள் போன்று இந்தப் புரோகிதர்கள் விளங்கி வந்தார்கள். கல்வியறிவு உள்ள எஜமானர்கள் வீடுகளில் இந்தப் புரோகிதர்கள் சரிவர கடமையைச் செய்து விட்டு வருவார்கள். மற்ற இடங்களில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டாலும் இந்தப் புரோகிதர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் சாத்திரப்படி தண்டனை எஜமானனுக்குத் தானே கிடைக்க வேண்டும்! இவர்கள் தட்சிணை பெற்றுக் கொண்டு செல்வதோடு சரி.

''பாணினீய சிக்ஷா'' என்ற நூலில் புரோகிதரின் கவனக் குறைவால் எஜமானனுக்கு எப்படி ஆபத்து ஏற்படுகிறது என்பதை விளக்க ஒரு சுலோகம் இருக்கிறது:—

''மந்திரத்தின் உச்சரிப்பில் ஒரு சிறிது பிழையிருந்தாலும் அது தன் பயனை இழந்து விடும். அத்துடன் அதனுடைய பொருளும் சரிவர வெளிப்படாது. இடி விழுந்தால் திடீர் மரணம் ஏற்படுவது போன்று குற்றமுள்ள மந்திரத்தால் எஜமானன் அழிந்து விடுவான். இந்திரனின் எதிரி

---

**நன்கொடை**

வேலூர் (திருச்சி) திரு. துரைசாமி–செல்வாம்பாளுக்கு 7–5–64ல் பெண்குழந்தை பிறந்தமைக்காகக் குத்தூசி வளர்ச்சிக்காக நன்கொடை ரூ. 5 அன்பளிப்பு அனுப்பியுள்ளனர். பெற்றோம். நன்றி.

—ஆசிரியர்

---

அழிந்ததே இந்த உச்சரிப்புப் பிழையின் காரணமாகத் தான்."

மகாபாரதத்தில் இந்த இந்திரனின் எதிரியைப்பற்றிய கதை கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளது:

"இந்திரனுக்கு ஒரு கொடும் பகைவன் இருந்தான். அவன் பெயர் விருத்திராசுரன் என்பது. இந்திரன் அவனைக் கொல்வதற்கு வழிதேடிக் கொண்டிருந்தான். விருத்திராசுரனே தானே போரில் வெற்றி பெற புரோகிதர்களைக் கொண்டு யாகம் செய்வித்துக் கொண்டிருந்தான். யாக மந்திரத்தில் "இந்திரனைக் கொல்லப் போகின்றவர்களே", என்ற சொற்களை புரோகிதர் தவருகவே உச்சரித்து வந்ததால் அது "இந்திரனால் கொல்லப்படப் போகின்றவர்களே" என்றே பொருள் தந்து கொண்டிருந்தது. இதன் விளைவாக விருத்திராசுரன் கொல்லப்பட்டான்."

## தீங்கு யாருக்கு?

புரோகிதர்கள் மந்திரத்தைத் தவருக உச்சரித்தால் மிகப் பெருங் கேடுகள் விளையும் என்ற அச்சத்தைப் பரப்பவே இப்படிப் பட்ட கதைகள் பரப்பப்பட்டு வந்துள்ளன. ஆனால் இதன் மூலம் புரோகிதர்களுக்கு எவ்வகையிலும் தீங்கு விளையும் என்று எண்ணவே இடமில்லை. ஏனெனில் இவ்விதப் பிழைகளினால் புரோகிதர்களுக்கு எவ்வகையிலேனும் தீங்கு விளையும் என்று சட்டம் இருந்தால்தானே அவர்கள் அஞ்சியிருப்பார்கள்? தங்கள் எஜமானர்களுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படக் கூடாது என்பதற்காக இவர்கள் எச்சரிக்கையோடு இருந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்திருக்க முடியாது. ஏனெனில் யாகத்தில் வெட்டப்பட்ட மிருகங்களைப் பங்கு போட்டுக் கொள்ளும் போதே சச்சரவிட்டு வந்த இவர்களிடம் அதனை எப்படி எதிர்பார்க்க முடியும்? இவர்கள் இப்படி சச்சரவிட்டு வந்ததால்தான் ஒவ்வொருவருக்கு இவ்வளவு என்று 'ரிஜிஸ்டர்' செய்து வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. "ஆஷ்வாலாபன் க்ஷத்ர சூத்ரம்" இதனைக் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறது:—

"யாகத்தில் கொல்லப்பட்ட மிருகங்களை எவ்விதம் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும் என்பதை இங்கே நாம் குறிப்பிடுகிறோம்—நாக்கு உள்பட தாடைகள் இரண்டும் யாகத்தைத் தொடங்கி வைக்கிற புரோகிதனுக்குச் சொந்தம். கழுகு போன்ற வடிவமுடைய ஈரல் வேத பாராயணம் செய்யும் புரோகிதனுக்குச்சொந்தம். மிருகத்தின் இந்த பாகம் தேவ பாகம் எனப்படும்."

புரோகிதர்கள் இதனைத் தங்களது பரம்பரைத் தொழிலாக ஆக்கிக் கொண்டு விட்டதோடு சிறுசிறு தவறுகளுக் கெல்லாம் பிராயச்சித்தம் செய்யும் முறையை ஏற்படுத்தி எஜமானர்களின் சொத்தைக் கறந்து வரவும் வழி செய்து கொண்டார்கள்; புரோகிதர்களால் திருத்த முடியாத தவறுகளே இல்லை என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டு விட்டது. தலைமீதோ அல்லது கால் மீதோ பல்லி விழுந்து விட்டால் உடனே போய் மந்திரித்துக் கொண்டு வரவேண்டும்; அதற்காக தட்சிணை செலுத்திவிட்டு வரவேண்டும் என்பன போன்ற விதிகள் ஏற்படுத்தப்பட்டன.

கண்முன் நிகழும் பாபகாரியங்களோடுமட்டும் இவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை; கற்பனையிலேயே பிறந்த பல்வேறு ஆபத்துகளுக்காவும் சட்டங்கள் இயற்றப்பட்டன. ''பிருகஸ்பதியின் தீய பார்வை பட்டுவிட்டது'' அல்லது ''இராகு மிகவும் கோபமாக இருக்கிறான்'', என்றெல்லாம் கூறி, புரோகிதர்கள் ஜெபதபங்கள் செய்தால்தான் இவற்றினின்று தப்பமுடியும் என்ற நிலையினை இவர்கள் தோற்றுவித்து விட்டார்கள்.

இது சம்பந்தமாக புரோகிதர்களுடைய திருவிளையாடல்களைப் பற்றிய பல கதைகள் உலவுகின்றன. ஒரு எஜமானின் காலில் பூசனிக்காய் விழுந்துவிட்டதாம். இதன் பலனை அறிவதற்காக அவர் புரோகிதரிடம் சென்றாராம் இந்த எஜமானரிடம் எருமைகள் இருந்தனவாம். புரோகிதருக்கு நீண்ட காலமாகவே இந்த எருமைகளின் மீது ஒரு கண் இருந்து வந்திருக்கிறது. அவர் ஏடுகளைப் புரட்டிப் பார்த்துவிட்டு, ''காலில் பூசணி விழுந்து விட்டால், மிகவும் கெட்டது. குறைந்தது நூறு எருமைகளையாவது தானம் செய்ய வேண்டும்,'' என்றாராம். அந்த அப்பாவி மனிதனும் ஒப்புக்கொண்டு யாகம் செய்வித்தாராம். இது தெரிந்தவுடன் இன்னொரு புரோகிதர் அங்கே வந்து, ''பாதே கூஷ்மாடம் பதனம்; குதோ பூதம் குலக்ஷணம்?'' (காலிலே பூசணி விழுந்தால் எப்படி கெட்ட அறிகுறி ஆகும்?) என்று அவரிடம் கேட்டாராம். அவரிடமிருந்து தப்பித்துக் கொள்ள முதல் புரோகிதர், ''இது மகா முட்டாள் நடத்துகிற யாகம்; இதற்காக தட்சிணை நூறு எருமைகள். நாமிருவரும் பாதி பாதியாகப் பங்கு போட்டுக் கொள்வோம்; ஓ பண்டிதனே, இடையூறு செய்யாதே,'' என்று கூறினாராம்.

முதலில் பிராமணர்களின் தனியுடைமையாக இருந்து வந்த இந்தப் புரோகிதத் தொழில் பிறகு அவர்களது குலத் தொழிலாகவே ஆகிவிட்டது. புரோகிதன் மகன் புரோகிதனாகவே இருந்து வரத் தொடங்கினான். ஒவ்வொரு எஜமானனும் தனது புரோகிதனை விட்டு இன்னொருவனை அமர்த்தக் கூடாது என்ற வழக்கம் ஏற்பட்டது. நல்லவனோ, பொல்லாதவனோ அவர் தன் புரோகிதனை வைத்துக் கொண்டுதான் சடங்குகளை நிகழ்த்த வேண்டும் என்ற நிலை பிறந்தது.

கவலையில்லாத வாழ்க்கை வசதி ஏற்படுத்தித் தருவதால் இன்று படிப்பற்ற தற்குறிகளெல்லாம் புரோகிதத் தொழில் நடத்தி வருகிறார்கள். உலக மக்களெல்லாம் மூடநம்பிக்கைகள் என்னும் விலங்குகளை அறுத்து எறிந்து முன்னேறிவரும் இந்த நாளில் இந்தியாவில் உள்ள அப்பாவி இந்து மக்கள் இந்தப் புரோகிதர்களின் தந்திர வலையிலிருந்து விடுபட முயற்சி செய்வார்களா?

—கங்காசகாய் பிரேமி: சரிதா

மொழிபெயர்ப்பு: ஜி. சீனுவாசன்

★

அ. வேதாசலம்

# மரண தண்டனை தேவையா?

[*மரண தண்டனை மனிதத் தன்மைக்கே ஓர் அறைகூவலாக வந்திருக்கிறது, என்கிறார், கட்டுரையாளர். உலகெங்கும் இன்று தீவிரமாக ஆராயப்படுகின்ற பிரச்னை இது. ஆட்சியாளர் ஊன்றிப் படிக்க வேண்டிய கட்டுரை; தக்க ஆதாரத்துடன் எழுதப்பட்டுள்ளது.*]

மனிதனுக்காக மனிதனால் உருவாக்கப்பட்டதுதான் சட்டமே அன்றி, சட்டத்திற்காகச் சட்டத்தால் படைக்கப்பட்டவன் அல்லன் மனிதன். எனவே, மனிதனை மனிதத் தன்மையோடு வாழவைக்கத்தான் சட்டம் பயன்பட வேண்டுமே தவிர, அவனைச் சாக அடிப்பதற்காக அல்ல.

காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, அவருடைய மாண்பைப் புகழ்ந்து கொண்டிருந்த மக்களிடையே இப்படி ஒரு பரவலான கருத்து கற்பனை உருப்பெற்று நிழலாடியது நினைவில் இருக்கலாம்:—

"………மகாத்மா காந்தி மட்டும் உயிரோடு இருப்பாரானால், தன்னைக் கொல்ல வந்தவரை மன்னித்தே விட்டிருப்பார். கொலையாளியே என்றாலும் மரண தண்டனை கொடுக்கப்படுவதை அவர் வரவேற்கவே மாட்டார்…" —என்பதே அக் கருத்து.

இதிலிருந்து, உள்ளத்தால் உயர்ந்தவர்கள், மன்னிப்பதில் தான் மகிழ்ச்சி அடைவார்களே அன்றி, பழிவாங்கும் இழி நினைவை எள்ளளவும் கொள்ள மாட்டார்கள் என்னும் ஓர் உண்மையை நாம் உணர்கிறோம்.

ஆனால், சட்டமும் அவ்வாறு மன்னித்துக்கொண்டே போனால், சமுதாயத்திலே அமைதியும் ஒழுங்கும் நிலவ முடியுமா? முடியாதுதான்.

சாதாரணமாகப் பயமுறுத்தலுக்குத் தலைவணங்குவது போல் மனித மனம் அன்புக்கோ அறத்துக்கோ அடிபணிவது இல்லை. பண்பாட்டில் கனிந்த ஒரு சில உள்ளங்கள் வேண்டுமானால் இதற்கு விலக்காக இருக்கலாம்.

பத்து வயதுப்பையன் ஒருவன் ஐந்து காசைத் திருடிவிடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனுடைய அன்னையானவள் என்னதான் பாசத்தைக் கொட்டி இறைஞ்சிக் கேட்டாலும் அவன் உண்மையை ஒப்புக் கொள்கிறானா?

"காசைக் கொடுக்கிறாயா? இல்லை, இரும்புக் கரண்டியைப் பழுக்கவைத்து இரண்டு இழுப்பு இழுக்கட்டுமா?"—என்று மிரட்டினால்தான் அவன் பணிகிறான்.

சிறுவர்கள் என்ன, "பெரிய மனிதர்களே இலட்சக் கணக்கில் பணத்தை ஒளிக்கும் போது தம்முடைய தன்னலச் செயலால் நாட்டுக்கும் அரசுக்கும் எத்துணை கேடு இழைக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கிறார்களோ?

நீதி மன்றங்களுக்கு இழுத்த பின்னரே அவர்களுடைய நினைவு தெளிகிறது.

எனவே, சமுதாய யந்திரம் சரியான பதையில் இயங்க, சட்டம் தேவை; தண்டனையும் தேவை குற்றவாளிகளுக்கு.

அதே சமயம், சட்டத்தின் அடிப்படை நோக்கம் என்ன?

குற்றவாளிகளை வருத்துவது மட்டுந்தானா? அவர்களைத் திருத்துவதும் அதன் கடமை இல்லையா?

சாதாரணமாக ஒரு குற்றவாளி தண்டிக்கப்படுவது எதற்காக?

முக்கியமாக இரண்டு பயன்களை உள்ளடக்கி. ஒன்று, தண்டனை பெற்ற மனிதன் மீண்டும் அதே குற்றத்தைச் செய்யாமல் திருந்தட்டும் என்பதற்காக. இரண்டாவது, அவ்வாறு தண்டனை பெற்றவனைக் காணும் மற்றவர்கள் தாமும் அதே குற்றம் புரிந்து தண்டனையைச் சுமக்கத் துணிய மாட்டார்கள் என்பதற்காக.

ஒருவன் இ. பி. கோ, 380-பிரிவுப்படி திருட்டுக் குற்றத்துக்கு ஆட்பட்டு ஏழாண்டுக் காலம் சிறைத் தண்டனை பெறுகிறான் என்றால் அந்த குற்றவாளி மீண்டும் அதே குற்றத்தைப் புரிய, அஞ்சுவான் என்றும், அவனுக்குக் கிட்டிய தண்டனையை அறிந்த மற்றவர்களும் அதே குற்றத்தைப் புரியத் துணிய மாட்டார்கள் என்றும், நாம் எதிர்பார்க்க இடம் உண்டு.

ஆனால், மரண தண்டனையினால் ஏற்படக்கூடிய பயன்கள் எத்தன்மையன?

மற்ற தண்டனைகளினால் இரண்டு பயன்கள் ஏற்படக் கூடும் என்றால், இந்தத் தண்டனையினால் உண்டாகக் கூடிய பயன் ஒன்றே ஒன்று. எப்படியெனில், மரண தண்டனையினால் கொலையாளிக்குக் கிட்டும் இறுதி முடிவை எண்ணி மற்றவர்கள் கொலைக்குற்றம் புரிய அஞ்சுவார்கள் என்பது ஒரே பயன்.

ஆனால், இதனால் கொலையாளியே திருந்துவதற்கான வாய்ப்பேதும் உண்டா? மனிதத் தன்மை விழிப்புக்கொண்டுவிட்ட நிலையில் மறு வாழ்வு பெறுவதற்கான வழியேதும் உண்டா?

## குற்றத்தின் காரணம்

இந்தியாவில் மட்டுமின்றி, அகில உலகிலுமுள்ள எல்லா நாடுகளிலுமே சட்டங்கள் மனிதனுடைய செயலைத்தான் பொதுவாக நிறுத்தப் பார்க்கின்றனவே தவிர, அந்தச் செயலுக்கு வடிவங் கொடுத்த பின்னணி அல்லது மூலகாரணத்தை அவ்வளவாக உறைத்துப் பார்ப்பதில்லை.

வாய் வார்த்தையாக வாதிடும் போதே, ஒருவன் மற்றவனைப் பார்த்து,

“உன் பல்லை உடைத்துவிடுவேன் தெரியுமா?”—என்று மிரட்டுகிறான். இதைக் கேட்ட மற்றவன், இயேசுவையும் காந்தியையுமா எப்போதும் நினைவில் வைத்திருக்கிறான், தன் கன்னத்தையும் பல்லையும் காட்டுவதற்கு? சட்டென்று ஆத்திரப்படுகிறான்; சொன்னவனுடைய பல்லை உடைத்தே கொடுத்து விடுகிறான்!

இப்போது நம் சட்டம் எதைப் பார்க்கிறது? பல்லை உடைத்த செயலைத் தானே அன்றி, அவ்வாறு பல்லை உடைக்கத் தூண்டிய சொல்லை அல்ல. முன்னவன், ‘பல்லை உடைத்துவிடு

வேன்' என்று சொன்னதும் குற்றம் என்று இருவரையுமே கூண்டில் ஏற்றும் முறையைக் கொண்டில்லே, நம் சட்டம்.

அதே போலத்தான், ஒருவன் மற்றவனைக் காலணியால் அடிக்கிருன். அல்லது கத்தியால் குத்துகிருன் என்று வைத்துக்கொள்வோம். அத்தகைய குற்றத்தை ஒரு மனிதன் சாதாரண நிலைமையில் செய்யத் துணிவானு ? எதிரியினுடைய அவமானம் மிக்க சொல் அல்லது செயலால் இந்தக் குற்றவாளியின் நெஞ்சம் எவ்வளவு ஆழமாகத் துளைக்கப் பட்டிருக்க வேண்டும்! ஆனுல், சட்டம் அந்தப் பக்கமாகத் தன் பார்வையைச் செலுத்துகிறதோ?

இதிலிருந்து, அடியாலும் உதையாலும், குத்தாலும், வெட்டாலும் ஒரு மனிதனுக்கு ஏற்பட்ட உடல்வலி தான் சட்டத்துக்குப் பெரியதாகப்படுகிறதே யொழிய, அந்தக் குத்துக்கும் வெட்டுக்கும் அடிக்கும் உதைக்கும் காரணமான அவமானச் சொற்களோ, செயலோ, தந்த மனவலியைப்பற்றி, அது கவலைப் படுவது இல்லை.

'தீயினுற் சுட்டபுண் உள்ளாறும்; ஆருதே நாவினுற் சுட்ட வடு'— என்னும் திருக்குறள் ஒலிக்கின்ற திசையே நோக்கித் தன் செவியைத் திருப்புகிறதோ சட்டம் ?

சட்டங்களை நாம் இங்கே அணுகுவது, எந்த ஓர் 'அரசியல்' அடிப்படையிலும் அன்று. அகில உலகத் தத்துவார்த்தக் கண்ணேட்டத்துடனேயே நாம் அவற்றை நோக்குகின்ருேம். அத்துடன், எந்த ஓர் இந்தியச் சட்டத்தையும் தனிப்படுத்திக் குறை கூறுவதாக யாரும் கருதி விடக் கூடாது. மேலும், களவையே கலையாகவும், கொலையையே தொழிலாகவும் கொண்டு திரியும் நிரந்தரக் குற்றவாளிகளுக்கும் இங்கே பரிந்து பேசப்படுவதாகப் படிப்பாளர்கள் குழப்பிக்கொள்ளக் கூடாது.

## கொலைக் குற்றம்

அடுத்து, கொலைக் குற்றங்களைப் பற்றிச் சற்று ஆய்ந்து பார்ப்போம் :

இன்று, பொருளைக் கொள்ளை அடித்துச் செல்வதற்காகவும், பொருமையினுலும் புரியப்படும் கொலைகளை விட, அவமானத்தின் உந்தலால் நிகழும் கொலைகளே மிகுதியாக வளர்ந்து வருவது கண்கூடு.

காமுகன் ஒருவன் வேருெருவனுடைய மனைவியின் கற்பைச் சூறை ஆடுகிருன் என்று வைத்துக் கொள்வோம். அந்த அவமானச் சுமையைத் தாங்க முடியாத கணவன் திட்டமிட்டோ, திடீர் வெறிக்கு ஆளாகியோ காமுகனைக் கொலை செய்துவிடுகிருன். தன் மனைவியைக் கெடுத்தவனை நீதிமன்றத்துக்கு இழுத்து சட்டத்தின் மூலமே தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கோ, வழக்கு நடைபெறும் அவ்வளவு நீண்ட காலத்துக்குத் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை விளம்பரப் படுத்திக்கொள்வதற்கோ சாதாரணமாக எந்தக் கணவனுக்கும் பொறுமை இருப்பதில்லை.

ஆனுல், இங்கே சட்டம் எதைப் பார்க்கிறது? கொலை புரிந்த செயலைத்தானே தவிர, அதற்குக் காரணமான அவமானத்தை அவ்வளவாகக் கணக்கில் எடுக்கிறதோ ?

இன்னெரு எடுத்துக்காட்டு :

ஒரு குளத்தை ஒருவன் மீன் குத்தகைக்கு எடுத்திருக்கிருன் என்று வைத்துக்கொள்வோம்.

அதிலே திருட்டு மீன் பிடிக்கிருன் இன்னொருவன். இதைக் காணுகின்ற குத்தகை எடுத்தவனுக்கு எப்படி இருக்கும்? வயிறு பற்றி எரியாதா? எனவே, அந்த வயிற்றெரிச்சலில் போலீசுக்குப் புகார் செய்து, சட்டத்தின் மூலமே தண்டனை வாங்கித் தர வேண்டும் என்கிற அளவுக்கு குத்தகை எடுத்தவனுக்குப் பொறுமை இராது. எபபடியாவது திருட்டு மீன் பிடிப்பதைத் தடுக்க வேண்டும் என்னும் முயற்சியை அவன் மேற்கொள்ளும் போது, திருடனுக்கும் அவனுக்கும் கைகலப்பு ஏற்பட்டுத் திருடன் கொல்லப்படுகிருன் என்ருல் சட்டம் கொலையை மட்டுமே பார்க்கிறது. அந்தக் கொலைக்கு முதற்காரணமான திருட்டைப் பொருட்படுத்துகிறதோ? முன்ருல் திருட்டு நடந்திராவிட்டால் பின்னுல் கொலை நிகழ்ந்திருக்குமோ?

உணர்ச்சி வயப்பட்டு நிகழும் கொலைக் குற்றங்களுக்கு அவ்வளவு கடுமையான தண்டனைகள் அளிக்கப்படுவது இல்லை என்று சிலர் சாதிக்கலாம்.

ஆனுல், நடைமுறை நிலை எவ்வாறுள்ளது? கொலை என்று ஒன்று நிகழ்ந்துவிட்டாலே கொலையாளி எந்தச் சூழ்நிலையில் குற்றம் புரிந்திருப்பான் என்று யார் ஆராய்ந்து கொண்டிருக்கிருர்கள்? எப்படியாவது குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கத்தானே துடியாய்த் துடிக்கிருர்கள்? அதற்குத் தக்கவாறு வழக்குகளையும் புனைந்து விடுவதில்லையா? சாட்சிகளையும் தயாரித்துவிடுவதில்லையா?

இதனுல், எந்த நாடாயினும் உண்மைக் கொலையாளிகள் தப்பித்துக்கொண்டு உலவுவதும் நிரபராதிகள் மரண தண்டனையினுல் உயிரை இழப்பதும் அவ்வப்போது நிகழத்தானே நிகழ்கின்றன!

இவ்வாறு கூறுவதனுல், கொலையாளிகள் எல்லாரையும் தண்டிக்காமல் தப்பித்துவிட வேண்டும் என்பது நம் கருத்து அன்று. எந்தக் கொலையாளியும் தண்டிக்கப்பட வேண்டியவனே.

அதே சமயம், ஒரு கொலைக் குற்றத்துக்கு வழி வகுத்த சூழ்நிலைப் பின்னணியானது. மான-அவமானத்தைப் பற்றிய நியாயமான மனித உணர்வுகளுக்கு உட்பட்டதாக இருக்குமானுல், அத்தகைய கொலையாளியும் அறவே உயிரை இழக்கத்தான் வேண்டுமா? நெடுங்காலச் சிறைத் தண்டனையோடு மட்டும் நிறுத்திக்கொண்டால் போதாதா? தான் அனுபவிக்கும் தண்டனையின் மூலம் கொலையாளி திருந்துவதற்கும் அவனைப் பார்த்து மற்றவர்கள் திருந்துவதற்கும் வாய்ப்பளிக்கக் கூடாதா?

## தண்டனை வகை

பொதுவாகத் தண்டனைகளை நான்கு வகைகளாகப் பகுத்துள்ளனர், சட்டக்கலை வல்லுநர்கள். அச்சுறுத்தும் முறை (Deterent Theory), தடுப்பு முறை (Retributive Theory), சீர்திருத்த முறை (Reformative Theory) என்பவையே அவை.

கல்லால் அடித்துக்கொல்லல், கழுவேற்றிக் கொல்லலிருந்து தண்டனையின் தன்மையும் வன்மையும் காலத்துக்குக் காலம் நயப்படுத்தப்பட்டும் நாகரிகப் படுத்தப்பட்டும் வந்திருப்பதை நாம் அறிவோம்.

மனித இதய உணர்ச்சிகளை முழுக்க முழுக்கப் புறக்கணிப்பது

அழகோ அறமோ அன்று, என்று கண்டுணர்ந்து சிந்தனைத் துலாக் கோலின் முள்ளானது, நாளடைவில் சீர்திருத்த முறை, அச்சுறுத்தும் முறை ஆகிய இரண்டை நோக்கி மட்டுமே அணு அணுவாகச் சாய்ந்து வருவதும், பழிவாங்கும் முறை (அழிப்பு) தடுப்பு முறை இவற்றைத் தாங்கிய தட்டு எடை குறைந்து மேலே நிக்கொண்டிருப்பதும் கூர்ந்து நோக்கினால் புலனாகும்.

மரண தண்டனையைப்பொறுத்தவரை பழிவாங்கும் முறை, தடுப்புமுறை இரண்டுமேஇணைந்திருப்பதைக் காணலாம்.

ஒரு மனித உயிரை ஈவு, இரக்கமின்றிப் பறித்த கொலையாளியின் உயிரை, சமுதாய நலனை முன்னிட்டுச் சட்டம் பறித்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? என்று சிலர் கேட்கக் கூடும். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், அவ்வாறு பறிப்பதிலே பழிக்குப் பழிவாங்கும் உணர்ச்சிதான் மேலோங்கி நிற்கிறதே தவிர, மனித தத்துவ மாண்பு மக்கி மடியவில்லையா?

ஒருவன் எவ்வளவு திருடினாலும் அந்தத் திருட்டுக்குப் பதிலாக அதே அளவு குற்றவாளியிடமிருந்து பொருளைப் பிடுங்கும்படி கூறுவதில்லை சட்டம். ஒருவன் தன் எதிரியைக் காலணியால் அடிக்கிறான் என்றால் பதிலுக்குக் குற்றவாளிக்குக் காலணி அடி கொடுக்கச் சொல்வதில்லை சட்டம். இவ்வாறு பதிலுக்குப் பதில் தண்டனை வழங்கும் முறை ஒருவேளை முற்காலத்தில் இருந்திருக்கக் கூடும். அத்தகைய முறைகளெல்லாம் உதறி யெறியப்பட்டுப் புதிய புதிய கூர்மை ஒளியைப் புனைந்து வந்திருக்கிறது நீதியின் கோல். அவ்வாறிருக்க, ஒரு மனிதனின் உயிரைப் பறித்தான் என்பதற்காக, கொலையாளியின் உயிரையே பதிலுக்குக் கேட்டு மரண தண்டனை கொடுப்பது மனித நாகரிகம் இன்னும் தன் அழுக்கேறிய ஆடையைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் வளத்தைப் பெறவில்லை என்பதைத்தானே சொல்கிறது?

மனிதன் என்ன, பிறவியிலேயே குற்றவாளியா? அல்ல. எனவே, தற்காலிகமாக உறங்கிக் கிடக்கும் அவனுடைய மனச்சான்று, என்றாவது ஒருநாள் விழித்துக்கொள்ளும் என்னும் தன்னம்பிக்கையோடுதான் சட்டம் தன்கடமையைஆற்ற வேண்டும். ஒரு குற்றவாளி என்றுமே திருந்தமாட்டான் என அவநம்பிக்கை இருளில் ஆழ்வதும் அதன் காரணமாக உயிரையே பறிக்கும் தண்டனையை அளிப்பதும் சட்டத்தின் தோல்வியைத்தான் காட்டுமே யன்றி, அதனுடைய வீரத்தையோ விவேகத்தையோ இல்லை.

''கொலையிற் கொடியாரை
வேந்து ஒறுத்தல்
பைங்கூழ் களைகட்
டதனொடு நேர்''

என்னும் திருக்குறளைக் காட்டிச்சிலர் மரண தண்டனை அளிப்பது தவறில்லை என்று வாதிக்க முற்படலாம்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல்'' என்கிற குறளில் ''ஒறுத்தல்'' என்னும் சொல்லுக்கு வெறும் ''தண்டித்தல்'' என்னும் சாதாரணப் பொருளே கொள்கிறோம். 'கொலைத் தண்டனை' என்பதாக அது குறிப்பதில்லை. அவ்வாறு 'வேந்து ஒறுத்தல்'' என்பதற்கும் 'தண்டனை' என்னும் சாதாரணப் பொருளையே ஏன் கொள்ளக்கூடாது?

சரி; அதுவுங்கூட வேண்டாம். பின்னுல், "களைகட் டதனெடு நேர்"என்று வருவதால், கொலையாளிகளையும் வேர்ப்பிடுங்கலாகத்தான் பிடுங்கி எறியச் சொல்கிருர், திருவள்ளுவர் என்றே வைத்துக்கொள்ளுவோம்.

ஆனல், அந்தக் காலத்தில் தம்முடைய சூழலுக்கேற்ப அவர் கூறிப்போந்த கருத்துக்களை, இந்தக் காலத்தில் மனிதத் தன்மையின் மாண்பை உயர்த்தும் வகையில் நாம் ஏன் மாற்றிக் கொள்ளக்கூடாது? அவர் அறிவுறுத்தியுள்ள, "மெய்ப்பொருள்" காணும் அடிப்படையில் நம்முடைய மானிடப் பண்பாட்டுக்குப் பொலிவு தரும் புதிய பாதைகளை வகுத்துக்கொள்வது எப்படித் தவருகும்?

காந்தியடிகளின் மானசீகமான குருவென்று மதிக்கப்படுபவர் உருசியமேதை லியோ டால்ஸ்டாய். அவர் என்ன கருத்துக் கூறுகிருர் இத்தகைய தண்டனைகளைப் பற்றி?

> "...நெறி தப்பிச் செல்லும் மனிதனை தன் தவற்றை உணரும்படியாக, அவனை நல்வழிப் படுத்துவதுதான் சட்டத்தின் நாணயமான வேலையாக இருக்கவேண்டும். அதை விடுத்து, பழிக்குப் பழிவாங்கும் இழிந்த நோக்கமோ, போக்கோ ஒரு சட்டம் கொண்டிருக்குமானுல், அத்தகைய சட்டம் மனித சமுதாயத்துக்கே தேவையில்லை,"

என்னும் உயரிய தத்துவத்தை உள்ளடக்கி, அதற்கு உருவும் உயிருங் கொடுத்து, "புத்துயிர்" (Resurrection)என்னும் புதினத்தையே உருவாக்கியுள்ளார் டால்ஸ்டாய்.

**கானடா**

வட அமெரிக்க கண்டத்தின் வடபகுதியிலுள்ள பிரிட்டிஷ் காமன்வெல்த்தைச் சேர்ந்த டொமினியன் நாடு. இதன் மக்கள் தொகை ஒரு கோடியே நாற்பது லட்சம். விவசாய உற்பத்தியில் உலகத்திலேயே மூன்ருவது நாடு. கோதுமை முக்கியமான பயிர். பிரிட்டிஷ் கொலம்பியா பகுதி பால் பண்ணைக்கும் பழத் தோட்டத்திற்கும் பெயர் பெற்றது: மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காடுகள்.

நிக்கல், கல்நார் (Asbestos), பிளாட்டினம், ரேடியம் ஆகிய கனிப் பொருள்களில் கானடா உலகில் முதன்மையானது; தங்கம், அலுமினியம், பாதரசம் ஆகிய பொருள்களில் இரண்டாவது. இதன் தலைநகரம், ஆட்டவா.

ஃபிரெஞ்சுக் காரரும் இங்கிலீஷ்காரரும் 18ம் நூற்ருண்டில் முதன் முதல் இங்குக் குடியேறினர்.

இதன் அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்தும் இறுதிப் பொறுப்பும் அதிகாரமும் பிரிட்டிஷ் பார்லிமெண்டைச் சார்ந்தன.

21 வயதுக்கு மேற்பட்ட ஆண்-பெண் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. 5 ஆண்டுக்கு ஒருமுறை பொதுத் தேர்தல் நடக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டன் நாட்டுப் பாராளுமன்றத்தில் மரண தண்டனை ஒழிப்பு பற்றிய சட்டவரைவு (Bill)ஒன்று பலத்த விவாதத்துக்கு உட்பட்டதும், மரண தண்டனை தேவையில்லை என்று மக்கள் அவை

யினுல் (Commons) கூறப்பட்ட முடிவை மேல் மன்றமாகிய பிரபுக்கள் அவை (House of Lords) ஏற்க மறுத்ததும் நினைவு இருக்கலாம்.

அப்போது மரண தண்டனை தேவைதான் என்று வலியுறுத்தியவர், ஆறுமாதங்கட்கு முன்பு இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட திரு. டென்னிங் பிரபு.

இந்த டென்னிங் பிரபு யாரென்றுகூறத் தேவையில்லை. இங்கிலாந்து நாட்டு நீதித் துறையை வளப்படுத்திய தலை சிறந்த அறிஞர் அவர். சிக்குகள் இல்லாத தெளிவான தீர்ப்புகளுக்காக மிக்க புகழ் படைத்தவர். இன்றும் பிரிட்டானியப் பாராளுமன்றத்தின் பிரபுக்கள் அவைக்குத் (House of Lords) திலகமாகத் திகழ்பவர். அது மட்டும் அன்று.

அண்மையில் உலகையே பரபரப்பில் ஆழ்த்தியவள் ஒயிலழகி கீலர் அல்லவா? அவளுடன் முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் புரொபியுமோ, கள்ளக் காதல் கொண்டிருந்த காரணத்தால் மாக்மில்லன் அமைச்சரவையே ஆட்டங்கொடுத்ததை நாம் அறிவோம். அந்தப் "புரொபியுமோ சிக்கலால்"எங்கே இராணுவ இரகசியங்கள் அம்பலமாகிவிட்டனவோ என்று இங்கிலாந்து நாட்டு அரசும், மக்களும்அஞ்சித் தவித்தனர். எனவே, அதுபற்றி விரிவான ஆய்வு மேற்கொண்டு அறிக்கை கொடுக்கும் பொறுப்பை இதே டென்னிங் பிரபுவிடந்தான் ஒப்படைத்தனர். அவருடைய அறிக்கையின் சிறப்புக்கு, அது வெளியான சில மணி நேரத்துக்குள்ளேயே பல லட்சங்கள் பறந்தோடிய விற்பனை வேகமே தக்க சான்ருகும்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த திரு. டென்னிங் பிரபு பத்தாண்டுகள் கழித்து இன்று என்ன கருத்துக்கொண்டுள்ளார்?

> "...மரண தண்டனை அளிப்பதால் மட்டுமே கொலைக் குற்றங்கள் குறைந்துபோவதாகக் காணேம் அதை ஒழிக்கத் தான்வேண்டும் என்ற கருத்து எங்கள் நாட்டு மக்களிடையே வெகு வேகமாகப் பரவி வருகிறது. வரும் ஆண்டிலே பிரிட்டனில் நடக்கும் பொதுத் தேர்தலுக்குப் பிறகு அமையும் அமைச்சரவையினுல் மரண தண்டனை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்படலாம்."

இவ்வாறு திரு. டென்னிங் பிரபு மட்டுமன்று; அகில உலகிலுமுள்ள அத்தனை சிந்தனைச் சிற்பிகளும் அரசுக் கொலு ஏறியவர்களும் ஒரு நாள் உணரத் தான் போகிருர்கள் உண்மையை.

எனவே, கொலையாளியே ஆயினும் சிறைச்சாலைக்குள் தள்ளி, ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அவனுடைய மனச் சான்றும் மனிதப் பண்பும் விழித்துக்கொள்ளும் அளவுக்குத் திருத்தி, புதிய மனிதனுக அவனை வெளியே கொணர்வதுதான் மனித நாகரிகத்துக்குப் பெருமை தருவதாகும். அதை விடுத்து, சட்டத்தின் பெயரால் பழிக்குப்பழி வாங்கும் மரண தண்டனை மனிதத் தன்மைக்கே விடப்பட்ட அறைகூவல் என்பதில் ஐயம் ஏது?

# 10. கண் விதுப்பழிதல்

*[இது காதலியின் பேச்சு. காதலனைப் பிரிந்துள்ள ஏக்கத்தினால் காதலி அடிக்கடி அழுது கண்களின் நலம் (விதுப்பு-துடிதுடிப்பு) குறைவது].*

எனது கண்கள் அவரை எனக்குக் காட்டினதால்தான் இத்துன்பம் எனக்கு ஏற்பட்டது; அப்படியிருக்க, அதே கண்கள் இப்போது அழுவது என்ன வேடிக்கை! அவசரப் பட்டு, ஆராய்ந்து உணர்ந்து கொள்ளாதபடி அவர் மீது ஆசை கொண்ட கண்கள் இப்போது அவர் மீது அன்புகொண்டு உணராமல் துன்பத்தால் வருந்துவது ஏனோ? அன்று கண்ட உடனேயே திடீரென்று அவர் மீது காதல் கொண்டு விட்ட இக்கண்கள் இன்று தாமாகவே அழுது கொண்டிருப்பது வியப்புக்குரியதாயிருக்கிறது.

சகிக்க முடியாத காம வேதனையை எனக்கு உண்டாக்கி வைத்துவிட்டு அழுது அழுது இனிச் சிந்துவதற்கு கண்ணீர் இல்லாதபடி வறண்டு விட்டன. அன்று கடலைக் காட்டிலும் பெரிய காம நோயை உண்டாக்கிய எனது கண்கள், இன்று உறங்க முடியாதபடி துன்பத்தால் வருந்துகின்றன.

எனக்கு இந்தக் காம நோயை உண்டாக்கிய கண்கள் இப்படி அழுதழுது நீர் வறண்டு துன்பத்தில் சிக்கித் தவிப்பது பொருத்தமானதே! (இன்னும் அழுதழுது துன்பப் படட்டும்!) அன்று ஆசையோடு மனம் குழைந்து காதலரைக் கண்ட என் கண்கள் இன்று உறக்கமில்லாத துன்பத்தால் வருந்தி வருந்திக் கண்ணீரும் வற்றிப் போகட்டும்.

உண்மையாக விரும்பாமல் என்னுடன் பொய் உறவு காட்டியவர் ஒருவர் இருக்கிறார்; அவரைக் காணாதபடி எனது கண்கள் தவிக்கின்றனவே, என்ன மடமை!

காதலர் வராத போது ஏக்கத்தினால் என் கண்கள் உறங்குவதில்லை; அவர் வந்து விட்டாலும் இன்பத்தினால் உறங்குவதில்லை; அதனால் இக் கண்கள் எப்போதும் எனக்குத் துன்பத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

மறைக்க வேண்டிய காம நோயைப் பறையடித்துக் கொண்டிருக்கின்ற கண்களுடைய எம்மைப் போன்றவரிடத்தில் மறைபொருளான செய்தியை ஊரார் அறிந்து கொள்வது கடினமான காரியமல்ல.

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனாய் நகர், சென்னை-30

TELEGRAMS:
"SWITCHES"

PHONE:
51436

# KASIMARI

ADDS ONE MORE LINE

MACHINE TOOLS MADE TO Gr. I. LIMITS

**WATCH FOR THE PRODUCTS SHORTLY APPEARING IN THE MARKET**

(1) $\frac{3}{4}''$ CAPACITY H. DUTY DRILL PRESS
BENCH MODEL

(2) 6"x10" TOOL & CUTTER GRINDER
BENCH MODEL

**KASIMARI MACHINE TOOLS CO.,**

KASIMARI BUILDINGS
295 THIRUVOTTIYUR HIGH ROAD
MADRAS 21

அன்புடையீர்,

வணக்கம். நாங்கள் இதுவரை தமிழ் நாட்டுப் பொதுக்கல்வி இயக்குநர்

# திரு. நெ. து. சுந்தரவடிவேலு

அவர்கள் எழுதிய 12 நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

அவை :

1. தம்பீ நில்
2. நஞ்சு உண்டவர்
3. சிலுவையில் மாண்டவர்
4. குண்டுக்கு இரையானவர்
5. மின் விளக்கு
6. தங்கத் தாத்தா
7. வானொலி வழங்கியவர்
8. தோற்றும் வென்றவர்
9. பாக்கு வெட்டி
10. ஆறு
11. விளக்குப்பாவை
12. செஞ்சிலுவை தந்தவர்

அவற்றில் அரிய பெரிய கருத்துக்களை எளிய நடையில், தெளிவான முறையில், இளைஞர் முதல் பெரியோர் வரை ஆர்வத்தோடு படித்து இன்புறும் வகையில் தெரிவித்துள்ளார்கள். அவற்றைப் பெருமளவில் வாங்கிப் பயன்படுத்தியது எங்களுக்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது.

ஆகவே,

## "எண்ண அலைகள்"

என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய 24 கட்டுரைகளின் தொகுப்பை இப்போது வெளியிட்டுள்ளோம். 240 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ. 2-40. நூலின் படிகள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதினால் அனுப்பப்பெறும்.

**விற்பனைக்குத் தயார்!**

## முருகன் & கம்பெனி,

32, வெங்கடேச கிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.